பாக்யராஜ் கட்சி அரம்பித்தார் என்ன ஆனது? சிவாஜி கணேசன் கட்சி ஆரமபித்தார் எஙகே போனது என்கிறது ஒரு கூட்டம-

சிவாஜி நடிப்பில் இமயம, சந்தேகம இல்லை- இதற்கு முன் காஙகிரசில் "ஜிஙகி ஜிக்கா" போட்டார்- அப்புறம புதுக் கட்சி ஆரமபித்து தி மு கவுக்கு "ஜிஙகி ஜிக்கா" போட்டார். இப்போது ஜனதா தளம் வெற்றி பெற்றதும வி பி சிஙகுக்கு "ஜிஙகி ஜிக்கா" போடுகிறார்-

பாக்யராஜ் மற்ற நடிகர்களுக்கு "சரண்டர்" ஆனார்- ஆனால் நான் அப்படியா? எடுத்ததும சினிமாவில் கதை வசனம டைரக்ஷன் என்று புரட்சி செய்தவனாயிற்றே- என்னையா இவர்களுக்கு ஒப்பிட்டுப் பேசுவது?

நடிக்க "சான்ஸ்" கேட்டு எந்த சூப்பர் ஸ்டார் வீட்டுக்குப் போனேன்? எந்தப் படத்திலாவது விக் வைத்து நடித்ததுண்டா? கையில் சிகரெட் தொட்டதுண்டா? சமசாரமாக நடித்த பெண்ணை அணைத்ததுண்டா?

எனக்கு உயரம இருக்கா? நான் குள்ளம்தான்- ஆனாலும இருக்கிறது உஙகளுக்குப் பிடித்த உள்ள[illegible] - அதனால்தான் மக்கள் வெள்ளம்-

எம் ஜி ஆர் ஆண்டபோது எந்த நடிகனாவது மார்தட்டி தி மு க என்றானா? ஆனால் நான் சொன்னேன்- கலைஞரே என் தலைவர் என்றேன்- அவ்வளவு துணிச்சல் எனக்கு-

தி மு கவில் [illegible]இருந்தபோது எத்தனைபோ[illegible]வில் பேசினேன், பஸ் [illegible] செய்தேன்- [illegible]ாலைக்குப் போனேன்-

இப்படி அரசியலில் எனக்கு ஒரு வரலாறு இருக்க சிவாஜி பாக்யராஜோடு ஒப்பிடுவது சரியா? சிவாஜி, பாக்யராஜ் மாதிரி நான் ஆகமாட்டேன்- கைவிரல்கள் ஐந்தும ஒரே மாதிரி அல்ல-

வளருமபோது ஏளன[illegible] செய்வது வாடிக்கை- வளர்ந்த பிறகு சாமரம வீசுவது வேடிக்கை-

அண்ணன் மீது அணையிட்டு சொல்கிறேன்- ஆணை முகத்தானை வணஙகிச் சொல்கிறேன்- ஆனை பலத்தை சுமந்து சொல்கிறேன்- அடுத்து தமிழ்நாட்டில் நடப்பது அருள் ஆட்சி- அதற்கு இவன் ஒரு கருவியாக இருப்பான்-

இவ்வாறு டி ராஜேந்தர் கூறினார்-

இதேவேளையில் வீண் வமபுக்கு இழுக்காதீர்கள் என்று டி ராஜேந்தருக்கு பாக்யராஜ் கண்டனம தெரிவித்தார்-

கேள்வி:- அரசியலில் இருந்து நீஙகள் விலக முக்கிய காரணம என்ன?

பதில்:- அரசியலில் நான் ஈடுபட்டதால் எனக்கு ஏகப்பட்ட பாதிப்பு- அதனால்தான் அரசியலை விட்டு நான் ஒதுஙகிவிட்டேன்- ஆனால் இது தற்காலிகமான விலகல்தான்-

கே பாக்யராஜ், சிவாஜியைப் போல நான் அரசியலில் தோல்வியைத் தழுவ மாட்டேன் என்று டி ராஜேந்தர் கூறி இருக்கிறாரே?

ப- எனக்குப் பின்தான் டி ராஜேந்தர் கட்சி ஆரமபித்தார்- அவர் கட்சியை தொடர்ந்து நடத்த வேண்டுமென்று நான் வாழ்த்துகிறேன்- சம்பந்தமே இல்லாமல் என்னை வமபுக்கு இழுக்கிறார்- அது தேவையற்றது சிவாஜியையும அவர் வமபுக்கு இழுக்கிறார்- ஜனதா தளத்தின் மூத்த தலைவர்கள் அழைத்துப் பேசிதான் சிவாஜிக்கு தமிழக ஜனதா தள தலைவர் பதவி கொடுத்து இருக்கிறார்கள்-

அரசியலில் நான் நடந்து வந்த பாதையை ராஜேந்தர் எப்போதும மறந்துவிடக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்-

இவ்வாறு பாக்யராஜ் கூறினார்-

(ம-10)

# பெண் எம். பி. யின் திறந்த மனசு!

நீலப்பட நடிகையொருத்தி இத்தாலிய நாடாளுமன்றத்தில் உறுப்பினராகப் பதவி வகித்து வருகிறார். நாடாளுமன்ற உறுப்பினராக ஆன பின்னருமகூட இகோனா ஸ்டெல்லர் என்ற இந்த நடிகை தனது நீலத் தளத்தை விட்டு விடுவதாக இல்லை.

சமீபத்தில் சடை கொண்ட மிருகஙகளின் தோலில் உடைகள் தயாரிக்கப்படுவதையும, அணிவதையும எதிர்த்து இவர் தனது பாணியில் ஒரு போராட்டத்தை ரோம நகரில் நடத்தினார்.

மிருக தோல் கொண்டு உடை அணிவதைவிட நிர்வாணமாக இருப்பதே மேல் என்ற வாசகம கொண்ட பதாதையின் கீழ் இவர் வெற்று மார்புடன் கொஙகைகளை வெளிக்காட்டியபடி பாதையோரமாக நின்றார். கூடவே இன்னுமொரு மாதும வெற்று மார்புடன் நின்று எதிர்ப்பு தெரிவித்திருக்கிறார்.

ரோம நகரின் பிரபல தோலாடை விற்பனை நிலையத்தின் முன்னாலேயே இப்போராட்டத்தைத் தனது ஆதரவாளர்களுடன் இவர் நடத்தியிருக்கிறார்.

(த-032)

அடித்தாற்போல அவருக்கு ஏற்பட்டது.

நிர்வாணப் பெண் சிலையைத் தான் ரசித்துக் கொண்டிருப்பதைக் கண்டெடுத்திப் பாம்பாக சுற்றித் திரியும புகைப்படக்காரர்கள் படமெடுத்து, நிர்வாணப் பெண் சிலையின் அஙகஙகளை அளவெடுத்துக் கொண்டிருக்கும எதிர்கால பிரிட்டிஷ் மன்னர் என்ற தலைப்புடன் பத்திரிகைகளில் பிரசுரித்து விட்டார்களானால் மேலும ஒரு வேண்டாத தலைவலியைச் சமாளிக்க வேண்டியிருக்கும என்பதைச் சட்டென உணர்ந்து கொண்டார் இளவரசர்,

புகைப்படக்காரர்கள் காமிராவைத் தயார் செய்து ரெடியாவதற்குள் இடத்தைக் காலி செய்து அடுத்த சிலைக்கருகே போய் நின்று கொண்டார். புகைப்படக்காரர்களுக்கு ஒரே ஏமாற்றம், புகைப்படக்காரர்களை எரிச்சல்படுத்த ஒரு வாய்ப்பு இப்போதாவது கிடைத்ததே என்று இளவரசருக்கு உள்ளூர மகிழ்ச்சி.

(த-032)

# சேடுகெட்ட கழுதைக்கு கிடைத்தது நல்ல அடி!

காம உணர்வு கொண்ட தனது கழுதையின் உணர்வைச் சிதைத்து ஆண்மையை மழுஙகடித்து விட்டார் என்று முன்னாள் செக்ஸ் தேவதையான பிரெஞ்சு திரைப்பட நடிகை பிரிஜட் பார்டோ மீது அவரது பக்கத்து வீட்டுக்காரர் நஷ்டஈடு கேட்டு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருந்தார்-

இந் நபர் பார்டோவிடம் நாலாயிரத்து 80 அமெரிக்க டலார் நஷ்டஈடாகக் கேட்டிருந்தார். ஆனால் வழக்கு விசாரணையின் போது பார்டோவின் பெண் கழுதையிடம் காம சேஷ்டை விடுவதால் தனது கழுதைக்கு விதையடித்தது தானே என்பதை இவர் ஒப்புக் கொள்ள நேரிட்டது!

இதனால் ஆத்திரமடைந்த நீதியரசர் நஷ்டஈடு கேட்டவரே மூவாயிரத்து 330 டாலர் நஷ்டஈடாக பார்டோவுக்கு அளிக்க வேண்டும் என தீர்ப்பளித்தார்!

பிரிஜட் பார்டோ இன்று உலகப் புகழ் பெற்ற மிருக காப்பாளராக விளஙகி வருகிறார். அவரது இந்த கௌரவத்துக்கு மாசு கற்பிக்கும் வகையிலேயே அடுத்தாத்துக்காரர் இப்படி ஒரு வழக்குப் போட்டிருக்கிறார் என்பதை நீதிமன்றம் புரிந்து கொண்டு விட்டது! கௌரவச் சிக்கலில் இருந்து பார்டோவும் தப்பினார்!

(ம—032)



"கௌபோய்கள் குதிரையில் ஏறி மாடு மேய்த்த காலம போய் விட்டது. நவீன விஞ்ஞான யுகத்தில் ஜெர்மனியிலுள்ள மாட்டுப் பண்ணைகளுக்கும கமபியூட்டர் வந்து விட்டது. தனது பால் மாடுகளின் கறவை சக்தியை கமபியூட்டர் மூலம கணிக்கிறார் இந்தப் பண்ணையாளர். (ம)

# சிந்தாமணி கேள்வி ? பதில்

திரிஞானி

ஆர் ஆர் வரன்
சாமிமலை—
கே– ஒரு பெண்ணின் மனதின் ஆழத்தை அறிய என்ன செய்யலாம்?
ப– எதுவும் செய்ய முடியாது!

★


பீ தினேஷ்குமார்
பன்விலை—
இலங்கையில் மிக உற்சாகமாக தற்போது நடக்கும் காரியம் என்ன?
ப– டயர் எரிப்புத்தான்!

★

செல்வி ராதா பிரியை
மாத்தளை—
கே– தென்னிந்தியப் பாடகர்களுள் அதி உச்சஸ்தாயியில் இனிமையாகப் பாடக் கூடியவர் யார்?
ப– முன்பு சுந்தராம்பாள் – சீர்காழி! இந்த இருவருடைய இடத்துக்கு யாரும் இன்னும் வரவில்லை!

★

வீ பன்னீர்ச்செல்வம்
அட்டன்—


சீர்காழி

கே– நாம் விரும்பும் போது வெறுக்கும — நாம வெறுக்கும போது விரும்பும பெண்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?
ப– எல்லாருமே அப்படித்தானே ஐயா?

★

செல்வி மதீனா, சுல்தானா,
அடாலை—
கே– எதிரியை மதிப்பவன் யார்?
ப– சுத்த வீரன்!

★

செல்வி மிஸ்ருள் நளீரா ஹமீட்
ரல்லிமுங்கொடை—


தலாய்லாமா

எஸ் சறூக்
வேப்பன்குடா—
கே– இலங்கையர் இன்று எதில் முன்னேற்றம் கண்டுள்ளனர்?
ப– கடன் வாங்குவதில்!

★

இஸட் எம் இக்ராம்
குருத்தலாவை—
கே– அண்மையில் நடந்த ஆறுதலான விஷயமென்று எதனைக் குறிப்பிடலாம்?
ப– ஜூலை 31 என்று இருந்ததை மார்ச் 31 என்று ஆக்கியது!

★

செ குமார்
செவன் கிள்ஸ் பாம—
கே– தவறு செய்வதற்கும் தப்புச் செய்வதற்கும் உள்ள வித்தியாசம் என்ன?
ப– அறியாமல் செய்வது தவறு! அறிந்து செய்வது தப்பு!

★

எம் எச் எம் நஸார்
கொழும்பு – 9—
கே– யாஸிர் அரபாத் – மீக்காயல் கொர்ப்பச்சேவ் – நெல்சன் மண்டேலா ஆகியோர் இருக்கும் போது தலாய்லாமாவுக்கு சமாதான நோபல் பரிசு வழங்கி இருக்கிறார்களே சினாவை சீண்டிப் பார்க்கவா?
ப– பரிசுகள் தகுதி அடிப்படையில் வழங்கப்படுவதில்லை என்பதற்கு இதுவும் ஒரு எடுத்துக் காட்டோ?

★


அமீர் ஏ ஹமீட்
அக்குறணை—
கே– முட்டாள்கள் எந்த நாட்டில் அதிகம் இருக்கிறார்கள்?
ப– ஜனநாயகம் பேசப்படும் எல்லா நாட்டிலும் இருக்கிறார்கள்!

★

எச் ஜே எம் ஹில்மி
பொல்காவெல—

எமக்கு நீங்கள் கூறும் அறிவுரை என்ன?
ப– விரைவாகத் திருமணம் செய்து கொள்ளுங்கள் என்பது தான்—

★


கொர்பச்சேவ்

ஹபீப் எம அருஸ்,
சிரிகுலாமவத்த—
கே– பிறப்பதையும், இறப்பதையும இறைவன் நிறுத்தினால் என்ன நடக்கும்?
ப– உலகம் கசந்து போகும—

★

செல்விகள் ராணி, சாரதா,
டிக்கோயா—
கே– சந்தர்ப்பவாதிகள் ஆண்களா? பெண்களா?, என்று சொல்லுங்கள்—
ப– சந்தர்ப்பம் கிடைத்தால் எல்லோரும் சந்தர்ப்பவாதிகள் தாம்—

★

சதாசிவம் சரவணேஸ் டெய்சி
தலவாளை—
கே– பரீட்சையில் தோல்வி அடைந்த ஒரு மாணவன் அல்லது மாணவி உங்கள் முன் வந்து நின்றால் நீங்கள் என்ன கூறுவீர்கள்?
ப– நன்றாகப் படித்து மற்றொரு முறை பரீட்சை எழுதும்படி கூறுவேன்—

★

ஜே ஏ சாக்கீர் உசைன்,
உகுரஸ்ஸபிட்டி—
கே– உங்களை யாராவது கடத்திச் சென்றால் என்ன செய்வீர்கள்?
ப– அப்படிக் கடத்திச் செல்லுமளவுக்கு என்னிடம் பணமோ, பதவியோ இருந்தால் தானே—

★

செல்வி எஸ் எச் மர்ஸூனா,
குளியாப்பிட்டிய—
கே– மனிதனுக்கு உயர்ந்த சிந்தனைகள் உதயமாவது எப்போது எங்கே?
ப– மயானத்தில்—

★

செல்விகள் சிபா, ஹிதாயா,
ஹின்ராபர—
கே– பாசத்தில் சிறந்தவள் தாயா?, மகளா?
ப– தாயே தான்—

★

எம் ஐ எம் பௌஸான்,
கல்பிட்டி—
கே– கிணற்றுத்தவளை என்பதன் கருத்து என்ன?
ப– வெளி உலக விவகாரம் தெரியாத முட்டாள் என்பது அர்த்தம்—

★

செல்வி எம் நிரோஷினி,
அட்டுத்தளை—
கே– கண்ணீர் பெண்களின்


யாஸிர் அரபாத்

கடைசி ஆயுதம் என்கிறார்களே அது ஏன்?
ப– அதைப் பிரயோகித்ததும எதிரி சரணாகதி அடைந்து விடுவதால்—

★

செல்விகள் என் நிஷா ஜுனைட்
என் ஜென்னா ஜுனைட்,
எட்டியாந்தோட்டை—


சுந்தராமபாள்

கே– ஐயாவுக்கு எந்த ஊரு?
ப– பிறந்தது கீழூர்– போவது மேலூர்—

★

செல்வன்
சோமசுந்தரம்பிள்ளை,
ஸ்ரீதரன்,
போகவந்தலாவ—
கே– வாழ்க்கையின் முன்னோடி எது பின்னோடி எது?
ப– வாழ்க்கையின் முன்னோடி உழைப்பு– பின்னோடி புகழ்—

★

ஏ ஆர் எம் அன்ஸார்,
பாதுக்க—
கே– சில ஆண்கள் கல்யாணம் என்றால் ஏன் பயப்படுகிறார்கள்?
ப– சில என்ன சில? எல்லோருமே நடிக்கத்தோட தான் அதைச் செய்து கொள்கிறார்கள்— வரு வது தேவியோ? மூ–தேவியோ யார் அறிவார்கள்

★

ஜனாப அலீ அன்வர்,
சின்கோட்டை—
கே– உலகிலே மிகவும் சிறந்த தொழில் எது?
ப– மிகச் சிறந்த தொழில் உயிர் வளர்க்கும் கமத்தொழில்— அதற்கு அடுத்த தொழில் அறிவை வளர்க்கும் ஆசிரியத் தொழில் ஆசிரியர் என்பது பாடசாலை ஆசிரியரையும், பத்திரிகை ஆசிரியரையும் குறிக்கும—

★

எம் அன்ஸார்,
எம் அக்ரம்,
மீயல்லை—
கே– இலங்கையில் சமாதானம் ஏற்பட்டால் யாருக்கு நஷ்டம?
ப– பட்டாளக்காரர்களுக்கு —

★

எப் என் நஸார்,
கண்டி—
கே– இன்றைய சினிமா நடிகர்களில் யாருடைய ரசிகன் நீங்கள்?
ப– சிவகுமாரின்—

★

ஆர் மோகன்,
சண்டி—
கே– நல்ல பெண்கள் எப்படிப்பட்ட ஆண்களை விரும்புகிறார்கள்?
ப– நம்பிக்கையான நட்டாற்றில் கை விடாத—


★

மகேந்திரன் சுந்தரலிங்கம்,
மஸ்கெலியா டன் எஸ்டேட்—


நெல்சன் மண்டேலா

கே– ஒரு மனிதனுக்குத் தேவையானது எது? தேவையில்லாதது எது?
ப– தேவையானது வீடு— தேவையில்லாதது மாளிகை—

நீங்கள்
நாட்டுக்குச் சேவைசெய்யவும்
அயலவருக்கு உதவி செய்யவும்
ஆவல் கொண்டுள்ள நேர்மையான
சமூக சேவையாளரெனில்...



சீர்காழி

கே– நாம் விரும்பும் போது வெறுக்கும — நாம வெறுக்கும போது விரும்பும பெண்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ப– எல்லாருமே அப்படித் தானே ஐயா?

★

செல்வி மதீனா, சுல்தானா, அட்டாலை–

கே– எதிரியை மதிப்பவன் யார்?

ப– சுத்த வீரன்!

★

செல்வி மிஸ்ருள் நஸீரா ஹமீட்

ரல்லிம்பொகொடை–

கே– கமலுடன் நடிப்பதற்கு இளம நடிகைகள் ஆசைப்படுவதற்குக் காரணம் அவரின் அழகா? நற்குணமா?

ப– அவரால் தமக்கு ஆபத்து இல்லை என்பதை அவர்கள் அறிவார்கள் அதனால்தான்!

★

றிம்ஸான் – சுப்ரின் ஆரிகாமம்–

கே– "ஆரம்ப மனிதன் மண்ணில் இருந்து புடைக்கப் பட்டான்" என்பதை நீர் ஏற்றுக் கொள்கின்றீரா? ஏன்?

ப– முடிவில் அவன் சென்றடையும் இடத்தைப் பார்த்தால்



கமலஹாசன்

நம்பத்தான் வேண்டியிருக்கிறது–

★

எம் எச் எம் நஸார்

கொழும்பு – 9–

கே– யாஸிர் அரபாத் – மீக்காயல் கொர்ப்புச்சேவ் – நெல்சன் மண்டேலா ஆகியோர் இருக்கும் போது தலாய்லாமாவுக்கு சமாதான நோபல் பரிசு வழங்கி இருக்கிறார்களே சினாவை சீண்டிப் பார்க்கவா?

ப– பரிசுகள் தகுதி அடிப்படையில் வழங்கப்படுவதில்லை என்பதற்கு இதுவும் ஒரு எடுத்துக் காட்டோ?

★

அமீர் ஏ ஹமீட்

அக்குறணை–

கே– முட்டாள்கள் எந்த நாட்டில் அதிகம் இருக்கிறார்கள்?

ப– ஜனநாயகம் பேசப்படும் எல்லா நாட்டிலும இருக்கிறார்கள்!

★

எச் ஜே எம் ஹில்மி

பொல்காவெல–

கே– உயிரிருக்கும் போது உடம்பு நீரில் மூழ்கும– உயிர் அவ்வுடம்பை விட்டு நீங்கிய பின் உடம்ப மிதப்பது ஏன்?

ப– கனம் பொருந்திய பொருள் உயிர்தான் என்பது இதிலிருந்து தெரியவில்லையா?

★

செல்விகள் ஏ எம் ஆயிஷா பீ பீ, பி எம சாஜஹான் பீ பீ

கலேவெல–

கே– உங்களிடம் உள்ள உங்களுக்கே பிடிக்காத குணம எது?

ப– தீங்கு விளைவித்தவரை மன்னிக்க முடியாமல் இருப்பது!

★

மாதினி சக்திவேல்

நுவரெலியா–

கே– தங்கள் துணிச்சலுக்கு முன்னோடி யார்?

ப– நக்கீரன்!

★

மர்லியா ரசீட் – ரபீக் ரசீட்

பங்கொள்ளாமட–

கே– விலைவாசிகள் அதிகரிப்பதையிட்டுப் பதவியில் இருப்பவர்கள் கவலைப்பட்டதாகத் தெரியவில்லையே?

ப– அவர்களைப் பாதிக்காத விஷயத்தையிட்டு அவர்கள் ஏன் கவலைப்பட வேண்டும்?

★

எம் முஹம்மட் சவாஹிர்

புசல்லாவை–

கே– மனைவிக்குத் தெரியாமல் சேமித்து வைப்பது எப்படி?

ப– அது முடியாத காரியமப்பா!

★

வி சிறிதரன்,

பி சிறிமகள்,

மட்டக்களப்பு–

கே– நாங்கள் ஒருவரையொருவர் மனதார நேசிக்கிறோம்–

ப– உலகம் கசந்து போகும–

★

செல்விகள் ராணி, சாரதா,

டிக்கோயா–

கே– சந்தர்ப்பவாதிகள் ஆண்களா? பெண்களா?, என்று சொல்லுங்கள்–

ப– சந்தர்ப்பம் கிடைத்தால்

ப– மயானத்தில்–

★

செல்விகள் சிபா, ஹிதாயா,

கிண்ணியா–

கே– பாசத்தில் சிறந்தவள் தாயா?, மகளா?

ப– தாயே தான்–

★

எம் ஐ எம் பௌசான்,

கல்பிட்டி–

கடைசி ஆயுதம் என்கிறார்களே அது ஏன்?

ப– அதைப் பிரயோகித்ததும எதிரி சரணாகதி அடைந்து விடுவதால்–

★

செல்விகள் என் நிஷா ஜுனைட்

என் ஜென்னா ஜுனைட்,

எட்டியாந்தோட்டை–

மூ–தேவியோ யார் அறிவார்கள்

★

எனார அலி அன்வர்,

சீனன்கோட்டை–

கே– உலகிலே மிகவும் சிறந்த தொழில் எது?

ப– மிகச் சிறந்த தொழில் உயிர் வளர்க்கும் கமத்தொழில்– அதற்கு அடுத்த தொழில்



நெல்சன் மண்டேலா

கே– ஒரு மனிதனுக்குத் தேவையானது எது? தேவையில்லாதது எது?

ப– தேவையானது வீடு– தேவையில்லாதது மாளிகை–


# நீங்கள்

நாட்டுக்குச் சேவைசெய்யவும்
அயலவருக்கு உதவி செய்யவும்
ஆவல் கொண்டுள்ள நேர்மையான
சமூக சேவையாளரெனில்...



BOC 1941

# உங்களுக்கும்

இலங்கை வங்கியின் சமூகக்கடன் ஊக்குவிப்பாளராகும வாய்ப்பு உண்டு.
விபரங்களைப் பெற அண்மையிலுள்ள இலங்கை வங்கிக் கிளை முகாமையாளரை நாடுங்கள்

இலங்கை வங்கி
தேசத்தின் வங்கியாளர்

# பல்கேரியா: சமதர்ம நாட்டில் சமத்துவம்?

வானம் வெளுத்தால் விடிவு பிறக்கும்- சாயம் வெளுத்தால் வேஷம் கலையும்- பல்கேரியாவில் இரண்டுமே வெளுத்திருக்கின்றன-

ஜனநாயக அலை விடிவுக்கு வழிவகுத்திருக்கிறது- குட்டு அம்பலமான சர்வாதிகாரி அரியாசனத்தை இழந்திருக்கிறார்-

கிழக்கு ஐரோப்பாவில் இப்போது ஜனநாயக - சுதந்திர அலை உக்கிரமாகக் கிளம்பியிருக்கிறது- கம்யூனிஸ முகமூடியில் சர்வாதிகாரிகளாக ஆட்சி நடத்தி வந்த தலைவர்களின் பதவிகள் சரிந்து வருகின்றன-

ஹங்கேரி - போலந்து - கிழக்கு ஜெர்மனி - செக்கோசிலவாக்கியா ஆகிய நாடுகளின் இந்த ஜனநாயக போராட்ட வரிசையில் இப்போது பல்கேரியாவும் இடம்பிடித்து விட்டது-

## பல் கட்சி தேர்தல் நடத்த ஆயத்தம்

1990 ஆம் ஆண்டளவில் பல கட்சி தேர்தல் முறையை புகுத்துவதற்கான ஆயத்தங்களை பல்கேரியாவின் புதிய அரசாங்கத் தலைவர்கள் மேற்கொண்டு வருகிறார்கள்-

இதற்குத் தடையாக இருந்து வந்த அரசமைப்பு வாசகங்கள் நீக்கப்பட்டுவிட்டன-

பல்கேரியாவின் நாடாளுமன்றமான தேசிய பேரவை கடந்த திங்கட்கிழமை 15 ஆம் திகதி கூடியது- கம்யூனிஸ்ட் கட்சிக்கு இதுவரை இருந்து வந்த ஏகபோக உரிமைக்கான அரசமைப்பின் பகுதிகளை நீக்கியது- கம்யூனிஸ்ட் கட்சியின் இரும்புப் பிடிக்கு முடிவு கட்டியது-

## 35 வருட காலம் சர்வாதிகார ஆட்சி

பொதுவுடைமை - சமதர்மம் என்ற போர்வையில் சுமார் 35 வருட காலம் சர்வாதிகார ஆட்சி நடத்தி வந்தவர் ருடோரவ் ஷிவ்கோவ்!

அவருடைய ஆட்சிக் காலத்தில் அவருடைய கடும்பத்தவர்...

வெகுஜனக் கிளர்ச்சியை அடுத்து அவருடைய முன்னாள் வெளியுறவு அமைச்சர் பீட்டர் எம்லடேநோவ் கடந்த நவம்பர் மாதம் சர்வாதிகாரி ஷிவ்கோவை பதவி கவிழ்த்தார்!



எமலடேநோவ்

புண்ணையாத யானை விட பறையோசை நல்லது என்பார்கள்- ஊசிப் போனதை உண்பதை விட பசித்திருப்பது நல்லது என்பார்கள்-

## கம்யூ ஆட்சியில் சமதர்மம் வளரவில்லை

பல்கேரியாவில் பதவி கவிழ்க்கப்பட்ட ஷிவ்கோவ் சமதர்மத்தை வளர்க்கவில்லை- மாறாக "சுயதர்மத்தில்" நாட்டம் காட்டினார்-

சிறுபான்மை இனத்தை அடக்கி ஒடுக்கினார்- அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்தார்- அரசாங்கப் பணத்தை வாரிச்சுருட்டினார்-

நல்லார் பொல்லாரை நடத்தையால் அறியலாம் என்பார்கள்- ஷிவ்கோவை மக்கள் அவருடைய ஆட்சியின் செயல்முறைகளினால் அறிந்தார்கள்-

ஷிவ்கோவ் தொடர்பான விவகாரங்களை புலன்விசாரணை செய்வதற்காக புதிய அரசு விசேஷ புலனாய்வு கமிட்டி ஒன்றை உருவாக்கியிருக்கிறது-

ஷிவ்கோவ் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டிருக்கிறார்- என்று ஒரு செய்தி கூறுகிறது-

## நீதிமன்றத்தில் நிறுத்த கோரிக்கை

எப்படியிருப்பினும் ஷிவ்கோவை நீதிமன்றம் முன் நிறுத்த வேண்டும் என்ற பொது மக்களின் கோரிக்கை வலுவடைந்து வருகிறது-

ஷிவ்கோவுக்கு எதிராகத் தற்போது பல்கேரியாவின் பிரதம வழக்குத் தொடுநர் கைது செய்வதற்கான "வாரண்ட்" ஒன்றைப் பிறப்பித்திருக்கிறார்-

பின்வரும் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டிருக்கின்றன-

* இனப் பூசல்களையும் பகைமையையும் தூண்டி விட்டது-
* பொதுச் சொத்துகளை அளவு கணக்கு இன்றி கையாடியது- அத்துடன் பல்கேரியாவின் புதிய கம்யூனிஸ ஆட்சியாளர்கள் பின்வரும் குற்றச்சாட்டை யும் தெரிவிக்கிறார்கள்-

## சிறுபான்மையினர் மீது அரசு நிர்ப்பந்தம

பல்கேரியாவின் மிகப் பெரிய சிறுபான்மைச் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் துருக்கியர்கள்- இவர்கள் இஸ்லாமிய மதத்தவர்கள்-

இவர்கள் மீது அரசு நிர்ப்பந்தத்தை திணித்தது- இஸ்லாமிய பெயரைக் கைவிட்டு பல்கேரிய (கிறிஸ்தவ) பெயரை வைத்துக் கொள்ளும்படி கட்டாயப்படுத்தியது-

இவர்களின் சமய கலாசார அனுட்டானங்களுக்கும செயல்முறைகளுக்கும் அரசு கட்டுப்பாடுகளை விதித்தது-

இதனால் கடந்த கோடை காலத்தில் மட்டும் சுமார் 3 00 000 பூர்வீக துருக்கிய இனத்தவர்கள் துருக்கிக்குள் தப்பிச் சென்றார்கள்-

## விசாரணை நடத்த விசேஷ கமிட்டி

புதிய ஆட்சியாளர்கள் தெரிவிக்கும் மற்றொரு குற்றச்சாட்டு இது! சமதர்ம நாட்டில் இனங்களுக்கிடையே சமத்துவம் எந்த லட்சணத்தில் கௌரவிக்கப்பட்டிருக்கிறது என்பதை இக்...

ஷிவ்கோவ் மீதான விசாரணைக் கமிட்டியின் அறிக்கை இம்மாத பிற்பகுதியில் வெளிவரும் என்று தெரிவிக்கப்படுகிறது-

அக்கமிட்டியில் பீட்டர் பெறொன் என்ற எதிரணிக் கிளர்ச்சியாளர் ஒருவரும் அங்கம் வகிக்கிறார்- அவர் பின்வருமாறு தெரிவித்திருக்கிறார் —

ஷிவ்கோவ் அரசமைப்புக்கு மாறான குற்றச் செயல்களைப் புரிந்திருக்கிறார்- பல்கேரிய மக்களில் பலரின் மனித உரிமைகளைப் பறித்திருக்கிறார்- இவற்றுக்கு எதிராகவும் அவர் மீது குற்றஞ்சாட்ட முடியும்-

ஷிவ்கோவின் குடும்பத்தவர்கள் அரசாங்கப் பணத்தை கையாடி சுவிஸ் வங்கிகளில் கணக்கு வைத்திருக்கிறார்கள்- இது பற்றிய விவரங்களை சுவிட்சர்லாந்து அரசிடம் கேட்டிருக்கிறோம

—இப்படி அவர் தெரிவித்திருக்கிறார்-

பல்கேரியாவின் மொத்த சனத்தொகையில் 83 சத வீதத்தினர் கிழக்கு ஐரோப்பிய வைதீக திருச்சபையைச் சேர்ந்த ஸ்லாவ் சமூகத்தவர்கள்- எஞ்சியோரே முஸ்லிம சமூகத்தவர்களான துருக்கிய இனத்தவர்கள்-

## புதிய ஆட்சியாளர்கள் அறிவித்த முடிவு

பிறருக்கு கொடுத்து உண்பது புகழுக்கு இடம தரும, பொருளைப் பறித்து உண்பது பழிக்கு இடம்தரும் அல்லவா?

புதிய கம்யூனிஸ ஆட்சியாளர்கள் பதவிக்கு வந்ததும வராதது மாக கடந்த டிசமபர் 29 ஆம திகதி முடிவு ஒன்றை அறிவித்தார்கள்-

முஸ்லிம துருக்கிய இனத்தவர்...

இனவாத போதையிலே ஊட்டி வளர்க்கப்பட்ட பல்கேரியாவில் இந்த முடிவு புதிய ஆட்சியாளர்களுக்கு சிக்கலைத் தோற்றுவித்து விட்டது-

தேசியப் பேரவைக்கு முன்பாக தேசியவாதிகள் ஆர்ப்பாட்டங்களை நடத்த ஆரமபித்து விட்டார்கள்-

நாட்டிலுள்ள 15 லட்சம துருக்கிய சமூகத்தவர்களுக்கு மீண்டும மத அனுஷ்டான உரிமையையும ஏனைய உரிமைகளையும வழங்குவதா என்று எதிர்ப்புத் தெரிவித்தார்கள் எகிறிக் குதித்தார்கள்-

## முடிவுக்கு எதிராக ஆர்ப்பாட்டம

கடந்த 7 ஆம திகதி சுமார் 10,000 ஆர்ப்பாட்டக்காரர்கள் பொது வேலை நிறுத்தம ஒன்றை நடத்தப் போவதாக மிரட்டினார்கள்- புதிய கம்யூனிஸத் தலைவர்கள் ராஜினாமாச் செய்து விட வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்கள்-

இந்த ஆர்ப்பாட்டங்கள் பற்றி ஜனநாயக அணிகளின் ஒன்றியத்தைச் சேர்ந்த பீட்டர் பெறொன் என்ன சொன்னார் தெரியுமா?




ஷிவ்கோவ்

## பெருமபான்மையினரின் பீதிக்கு காரணம

நாட்டின் ஜனநாயகப் போக்கை சீர்குலைக்க முயலும கடும போக்கு கம்யூனிஸ்ட்டுகளே பிரச்சினை...

பல்கேரியா




சமூகத்தைச் சேர்ந்த ஒருவர் பின்வருமாறு தெரிவித்தார்-

பூர்வீக துருக்கிய முஸ்லிம சமூகத்தவர்களுக்கு எந்த ஒரு சலுகையையும கொடுத்தாலும அது துருக்கிய சுயாட்சிக்கு வழிவகுத்து விடலாம என்ற பீதியை அவர் வெளியிட்டார்-

பெருமபான்மை சமூகத்தவர்களுக்கும, சிறுபான்மை துருக்கிய இனத்தவர்களுக்கும இடையில் இணக்கம ஒன்றை எட்டுவதற்காக நாடாளுமன்ற கமிஷன் ஒன்று ஏற்படுத்தப்பட்டது-

துருக்கிய சமூகத்தவர்களுக்கு மீண்டும உரிமை வழங்குவது என்ற முடிவில் இருந்து சற்றும விலக முடியாது என்று புதிய ஆட்சியாளர்கள் பிடிவாதமாக இருந்து விட்டார்கள்-

கம்யூனிஸ்ட் கட்சியின் பிரதித் தலைவர் என்ன சொன்னார் தெரியுமா?

## நல்லிணக்க உடன்படிக்கை

பல்கேரியாவின் பிராந்தியம் தேசிய இறைமை ஆகியவற்றைச் சுரண்ட முயற்சி மேற்கொண்டால் உடன்படிக்கைக்கே இடம இல்லை என்று சொன்னார் அவர்

சிறுபான்மையினரது நலனையும தேசிய நலனையும பாதுகாப்பது என உடன்படிக்கை ஒன்று ஏற்பட்டது-

...கள் மீண்டும் தமது சொந்தப் பெயர்களை வைத்துக் கொள்ளலாம- சமய உரிமைகளையும பெற்றுக் கொள்ளலாம- அதே வேளை சுயாட்சி அமைக்க அனுமதிக்கப்பட மாட்டார்கள்-

பெருமபான்மை சமூகம முஸ்லிம்கள் அரசு எதிர்க்கட்சி ஆகியவற்றைச் சேர்ந்த பிரதிநிதிகள் இப்படி உறுதியளிக்கும பிரகடனம ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கிறது-

## உடன்படிக்கை பற்றி சந்தேகம

இந்த உடன்படிக்கையை துருக்கிய சமூகத்தவர்கள் சந்தேகக் கண் கொண்டே நோக்குகிறார்கள்-

உடன்படிக்கை துருக்கியர் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களைத் தணித்திருப்பதாகத் தெரிகிறது- ஆயினும் வாக்குறுதிகள் நிறைவேற்றப்படுமா என்பது சந்தேகமே என அவர்கள் தெரிவிக்கிறார்கள்-

இரும்புத் திரைகள் துருப்பிடித்து நொறுங்க ஆரமபித்திருக்கின்றன- சமதர்ம நாடுகளில் இன சமத்துவம எப்படி அமுலாகின என்பது இப்போது அமபலமாகி வருகின்றன-

ஷிவ்கோவ் மீதான விசாரணைகள் பட்டினியால் வாடிய மக்கள் முன்பு இறைச்சித் துண்டை வீசிய கதையாக அமை...

# சிந்தாமல் விபூதி பூசுவதே சிறப்பு

விபூதி அணியும் போதும், குங்குமம் அணியும் போதும் அதை கீழே சிந்தாமல் இருக்க வேண்டியது முக்கியம்.

கூர்ம புராணத்தில் மகா விஷ்ணு "சிவனை என் பக்தன் நிந்தித்தாலும் சிவபக்தன் என்னை நிந்தித்தாலும் இருவரும் நரகத்தையடைவார்கள்" என்று சொல்லியிருக்கிறார்.

விபூதி என்பது ஐச்வர்யம் என்பார்கள். செல்வத்தை அளிப்பது விபூதி! நம்மை ரட்சிப்பதால் "ரட்சே" என்ற பெயரும் உண்டு.

விபூதியில் உயர்வானது "அக்னி ஹோத்ரம்" செய்து கிடைக்கும் விபூதியாகும். இது அக்னிஹோத்ரிகளிடம் கிடைக்கும். கேட்டால் கொடுப்பார்கள்.

அவரவர் வீட்டில் சவுபாசனம் செய்த விபூதி அந்தந்தக் குடும்பங்களில் உபயோகிக்கலாம். அதற்கடுத்து பசுஞ்சாணத்தினால் வரட்டி தட்டி, பசு மாட்டின் கோமயத்தால் "விரஜா" ... ரத்தைச் சொல்ல ஹோமம் செய்யப்பட்டு தயாரிக்கப்படுவதால் ரொம்பவும் விசேஷமானது. இதுவும் கிடைக்கிறது.

மற்றப்படி வேறு விதமாகத் தயாராகும் விபூதி வகைகளும் உண்டு! எந்த விபூதியானாலும் சரி! நெற்றிக்கு விபூதி இட வேண்டியது முக்கியம்.

ஹோமம் செய்து வீட்டிலேயே மந்திரத்துடன் தயாரிக்கப்படும் விபூதி உயர்ந்தது.

(ம–10)

## தேடிவைப்பது நல்லது

ராக் காலத்திற்கு வேண்டியதை பகலில் தேடி வைத்துக் கொள்; மழைக் காலத்திற்கு வேண்டியதை மற்றைக் காலத்தில் தேடி வைத்துக் கொள்; முதுமைக்கு வேண்டியதை இளமையில் தேடிக் கொள் மறுமைக்கு வேண்டியதை இம்மையில் தேடிக் கொள்.

(ம–10)

## பிள்ளையார் வெற்றிக் கனி பெற்ற இடம்

உலகத்தை முதலில் வலம் வருபவருக்கே இக்கனி என்று பெற்றோர்கள் போட்டி வைக்க மயில் மீதேறி முருகன் உலகை வலம் வரப் பறந்தார். ஆனால் பிள்ளையாரோ பெற்ற தாய் தந்தையரை வலம் வந்தால் அது உலகை வலம் வந்ததற்கு ஒப்பாகும் என்று கூறி பெற்றோரை வலம் வந்து வெற்றி பெற்றுக் கனியைத் தட்டிச் சென்றார்–

இது நடந்த இடம் சென்னையிலிருந்து 90 கிலோ மீட்டர் தூரத்தில் பெங்களூர் சாலையில் அமைந்திருக்கும் ஒரு திருத்தலத்தில் பெயர் திருவலம்.

(ம–10)



## காவல் அழகி!

அழகிருக்கும் இடத்தில் ஆபத்தும் இருக்கும் அதனால் தான் இந்த நீச்சல் உடை அழகி துப்பாக்கியை ஏந்தினாரோ? அதனால் இந்த அழகி ஒரு இஸ்ரவேல் இராணுவ வீராங்கனை, உல்லாசப் பிரயாணிகள் கூடிக் களிக்கும் கடற்கரை ஒன்றைக் காவல் புரிகிறார். ஆனால் இராணுவ சீருடை அணியாமல் இடத்துக்குப் பொருத்தமான விதத்தில் நீச்சல் உடை அணிந்திருக்கிறார்.

(ம–சி)

... பெருமளவு பணத்தை அன்று நடைபெறவிருக்கும் றோயல் எஸ்கொட் பந்தயத்தில் குதிரை கள் பேரில் கட்டியிருந்தனர். புகழ் பெற்ற குதிரையோட்டி கிறவெல் ஸ்டாக்கியின் குதிரை மீது பலர் நம்பிக்கையுடன் ... பந்தயமும் ஆரம்பித்தது. பந்தயம் கட்டியவர்கள் எதிர்பார்த்த படியே ஸ்டாக்கியின் குதிரைமுன்னணிக்கு வர ஆரம்பித்தது. வெற்றிக் கோட்டை ஸ்டாக்கியின் குதிரை எட்டுவது முடிவாகிப் போன விஷயமான நிலையில் அரங்கில் ஒரே ஆரவாரம். இன்னும் சில நிமிடங்களில் அக்குதிரை வெற்றிக் கோட்டைத் தாண்டி விடும்.

ஆனால் வெற்றிக் கோட்டை எட்ட சிறிது தூரமே இருக்கையில் திடீரென அக்குதிரை ஓட்டத்தை நிறுத்திவிட்டு சத்தமிட்டு கனைத்தபடி முன்னங் கால்களை உயர்த்தியது. பின்னர் ஓடு பாதையை விட்டு விலகி வலப் பக்கமாகச் சென்று உடலைக் குலுக்கியது. அனுபவம் வாய்ந்த குதிரையோட்டியான ஸ்டாக்கி குதிரையில் இருந்து எகிறி கீழே வீழ்ந்தார்.

வெற்றி பெறுவது முடிவான விஷயமான நிலையில் இப்படி அக்குதிரை சற்றும் எதிர்பாராத வகையில் நடந்து கொண்டதால் குதிரையோடிக்கு மட்டுமன்றி குதிரை மீது பணம் கட்டியவர்களுக்கும் பயங்கர அதிர்ச்சி! அனுபவம் வாய்ந்த குதிரை இப்படி சற்றும் எதிர்பாராத வகையில் காலைவாரி விட்டது. குதிரை பந்தயமொன்றில் நடக்க முடியாத விடயமொன்றும் கூட.

எப்படியோ, எல்லோரும் எதிர்பார்த்த குதிரை தோற்று விட, எதிர்பார்க்கப்படாத குதிரை வெற்றியீட்டியது.

நடப்பதற்கு சாத்தியமற்ற ஒரு விஷயம் நடந்ததைத் தொடர்ந்து இது பற்றி குதிரை யோட்டிகள் சங்கம் விசாரணை நடத்தியது. ஆனால் குதிரையின் திடீர் நடத்தைக்கான காரணம் மட்டும் கடைசிவரைக்கும் தெரியவரவில்லை.

ஆனால் உண்மையில் அன்று நடந்த விடயமோ வேறு. திட்டமிட்டு சிலர் அக்குதிரையை வேண்டுமென்றே செயலிழக்கச் செய்தனர். யாருமே சற்றும் சந்தேகிக்க முடியாத எலக்ட்ரானிக் உபகரணம் ஒன்று இதற்கென பயன்படுத்தப்பட்டது.

அன்று குதிரைப் பந்தயம் நடைபெற்றுக் கொண்டிருந்த போது அரங்கில் கூடியிருந்த ஏராளமான மக்கள் மத்தியில்



வீரர் ஸ்டாக்கி

நின்றிருந்த ஒரு நபர் அல்ட்ரா சொனிக் ஒலியலையைக் கக்கும் துப்பாக்கி ஒன்றை அக்குதிரையை நோக்கி வெடிக்கச் செய்திருக்கிறார்.

அல்ட்ரா சொனிக் எனப்படும் ஒலியலையின் அதிர்வுகள் எமது காதுகளை அடையாளம் காண்பதில்லை. ஆனால் மிருகங்களின் காதுகளுக்கு இது எட்டும். அந் நபர் பெருத்த ஓசையுடன் அல்ட்ரா சோனிக் அலையை வெடிக்கச் செய்ததும் அக்குதிரையின் காதுகளை எட்டிய அலைவரிசை குதிரையின் செவிப் பறையைத் திடீரெனத் தாக்கியது. இதனால் அதிர்ச்சியுற்ற குதிரை மிரண்டு போய் குதிரையோட்டியையும் கீழே தள்ளி, பந்தயத்தின் முடிவையே மாற்றி விட்டது. இதுதான் அன்று நடந்தது.

ஜேம்ஸ் லேமிங் என்ற எலட்ரானிக் துறை சூரர் ஒருவர் தானே உருவாக்கிய இத்துப்பாக்கி பைனாகுலர் எனப்படும் தூர திருஷ்டிக் கண்ணாடியில் பொருத்தப்பட்டிருந்தது. லேமிங் இப்பைனாகுலரை எல்லாரையும் போல தோளில் தொங்க விட்டபடி குதிரைப் பந்தயத் திடல் நோக்கி சென்றிருக்கிறார். ஆனால் தன் தோளில் தொங்குவது பைனாகுலர் அல்ல என்பதை இவர் மட்டுமே அறிவார்.

பைனாகுலரின் முன் பக்கம் கண்ணாடியைப் போல் தோற்றமளித்தவை இரு ஒலிபெருக்கிகள். ஒரு பெரிய ஸ்டீரியோ செட் எழுப்பக் கூடிய ஒலியை வெளிப் படுத்தக் கூடிய சக்தி வாய்ந்தவை இவை. பைனாகுலர் வைக்கப்படும் பையில் இரு சக்தி வாய்ந்த பாட்டரிகளும் சிகரெட் பாக்கெட் ஒன்றின் அளவு கொண்ட அம்ப்ளிபயர் ஒன்றும் இருந்தன.

ஜேம்ஸ் லெமிங் செய்ய வேண்டியதெல்லாம் அம்ப்ளிபயரை இயக்கி விட்டு, பைனா... கேட்கும் இந்த ஒலியலை திடீரென அக்குதிரையைத் தாக்கியதும் அது மிரண்டு குழப்பம் செய்யும். இதன் மூலம் அக்குதிரையின் வெற்றி வாய்ப்பு நழுவி விடும்.

குதிரைப் பந்தயங்களைக் குழப்பி தமக்கு வேண்டிய குதிரையை வெற்றி பெறச் செய்து அதன் மூலம் பெரும் பணம் திரட்டும் பொருட்டே இந்த அல்ட்ரா சொனிக் பைனாகுலரை லெமிங் கண்டு பிடித்தார்.

இதில் விசேஷம் என்னவென்றால், அல்ட்ரா சொனிக் ஒலியலை பற்றி பிரிட்டானிக்கா கலைக்களஞ்சியத்தில் இருந்தும் விஞ்ஞான சஞ்சிகைகளில் இருந்துமே இவர் தெரிந்து கொண்டார். இத் துப்பாக்கியை உருவாக்குவதில் பத்தாயிரம் ஸ்டேர்லிங் பவுண்களை பெருநாட்டு போதைப் பொருள் கடத்தல்காரர் ஒருவர் லேமிங்குக்குக் கொடுத்தார்.

லேமிங்கின் திருவிளையாடலை யாருமே சந்தேகிக்கவில்லை. ஆனால் போதைப் பொருள் கடத்தல் தொடர்பாக அவர் விசாரணைக்குட்படுத்தப் பட்ட போதுதான் பைனாகுலர் விவகாரம் அமபலத்துக்கு வந்தது.

இங்கிலாந்தின் போதை வஸ்து கடத்தல் குழுவினர் குதிரைப் பந்தயங்கள் மூலம் பெரும் பணம் சேர்க்கும் திட்டத்தின் கீழ் லேமிங்கைப் பயன்படுத்தி இதுதுப்பாக்கியை உருவாக்கியிருக்கிறார்கள்.

இரண்டாவதாக வரக்கூடிய குதிரை மீது பணம் கட்டுவது, அல்லது இந்தக் குதிரை தான் வெல்லும் என ஏனையோருடன் பெரும் தொகைக்குப் பந்தயம் பிடிப்பது.

பின்னர் பந்தயம் ஆரம்பமானதும் வெற்றி பெறும் நிலையில் உள்ள குதிரையை சொனிக் அலை மூலம் மிரளச் செய்து விட்டு தமது குதிரையை வெற்றி பெறச் செய்வது. இதன் ஊடாக பெரும் பணத்தை குதிரைப் பந்தயங்கள் மூலம் தேடுவது.

– இதுதான் இப்போதை வஸ்து குழுவினரின் திட்டமாக இருந்தது.

இந்த விடயம் அமபலத்துக்கு வந்ததால் குதிரைப் பந்தயங்களை ஒழுங்கு செய்பவர்கள் பெரும் கண்டமொன்றில் இருந்து மீண்டனர்.

(ம–032)

# குர் ஆனை ஓது-மௌத்தை நினை பாவக்கறைகள் விலகி ஓடிவிடும்

—எம்.சி.கலீல்.—

உலகில் மகத்துவம் மிக்க அல்லாஹ்வினால் படைக்கப் பட்ட மனிதன், இன்று மனோ இச்சைக்கும் ஷைத்தானுக்கும் அடிபணிந்து தன் இதயம் என்னும் கண்ணாடியை துறைபடியச் செய்கின்றான்,

இதயம் ஒரு கண்ணாடியைப் போன்றது, அது எவ்வளவு மங்கலாக இருக்கிறதோ, அந்த அளவு ஞானத்தின் பிரதிபலிப்பு குறைந்து விடும், எந்த அளவுக்கு சுத்தமாகவும் தெளிவாகவும் இருக்கிறதோ அந்த அளவு அதில் ஞானம் பிரதி பலிக்கும்,

இதயமாவது இரும்பைப் போன்றது, இரும்பின் மீது தண்ணீர் பட்டால் இரும்பு எப்படி துருப்பிடித்து விடுகிறதோ, அதே போலவே அதிக பாவங்கள் செய்வதாலும் அல்லாஹ்வின் நினைவை விட்டு மறந்திருப்பதாலும் இதயம் துருப்பிடித்து விடுகிறது,

ஒரு சமயம் அண்ணல் நபி (ஸல்) அவர்களிடம் ஒருவர் வந்து "யாரசூலல்லாஹ்! பாவக் கறை போக்க தாஙகள் கூறும் அறிவுரை என்ன எனக் கேட்டதற்கு அவர்கள் அதிகமாக மௌத்தை நினைப்பதும் குர்ஆன் ஓதுவதுமே" என்று பதிலளித்தார்கள்,

(ஆதாரம் (ஷுஃபுல் ஈமான்)

மார்க்க மாமேதைகள் இந்த இதயத்தை சுத்தப்படுத்துவதற்காக வேண்டி "ரியாலாத்" என்னும் பயிற்சிகளையும் "மூஜாஹ்தாத்" என்னும் முயற்சிகளையும் திக்ருகளில் ஈடுபடுவதையும் எமக்கு சொல்லித் தந்துள்ளார்கள்,

ஒருவர் ஒரு பாவச் செயலை செய்யும் போது அவருடைய இதயத்தில் ஒரு கறுப்புப் புள்ளி விழுகிறது, அவர் உண்மையான முறையில் அதற்காகத் "தவ்பாக்" செய்து விட்டால் அப்புள்ளி நீங்கி விடுகிறது, அவ்வாறன்றி, மீண்டும் ஒரு பாவச் செயலைச் செய்தால், மற்றொரு புள்ளி விழுகிறது, இவ்வாறே பாவங்கள் செய்யச் செய்ய அப்புள்ளிகளும் அதிகமாகி இதயம் முற்றிலும் கறுப்பாகி விடுகிறது, பிறகு அந்த இதயத்தில் நன்மைகளின் ஆர்வம் ஏற்படுவதில்லை, மாறாக அது தீமைகளின் பக்கமே சாய்ந்து விடுகிறது,

ஒவ்வொரு பொருளுக்கும் ஒரு தனிச் சிறப்புண்டு, அதனைக் கொண்டு அவை பெருமையடைகின்றன, இதுபோல் தக்வா என்னும் இறையச்சம் அனைத்து காரியங்களுக்கும் அடிப்படையாகவே அமைந்துள்ளது, எந்த உள்ளத்தில் அல்லாஹுத்த ஆலாவின் அச்சம் ஏற்பட்டு விடுகிறதோ, அங்கு பாவங்கள் ஏற்படாது எவ்விதமான வறுமையும் நெருக்கடியும் ஏற்படாது,

இவற்றுக்கெல்லாம் சிகரம் வைத்தால்போல் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் இரண்டு உபதேசிகளை உங்களிடம் விட்டுச் சென்றுள்ளார்கள், ஒன்று பேசக் கூடியது மற்றொன்று மௌனமானது பேசக் கூடியது குர்ஆனாகும், மௌனமானது மௌத்தாகும்,

இந்தக் குர்ஆனை எடுத்துக் கொண்டால் இது கடந்த கால எதிர்கால நிகழ்வுகளை எமக்கு எடுத்தியம்புகிறது, உலகத்திலே உள்ள எவ்வளவு சிறப்பு வாய்ந்த பொருளும் இன்றில்லா விட்டாலும் நாளை ஒரு நாள் அழிந்து விடும், ஆனால் பரிசுத்த வேதத்தின் சிறப்பும் பெருமையும் என்றும் முடிவடையாமல் நிரந்தரமாக இருப்பதாகும்,

நாளும் திருக்குர்ஆனை ஓதி வருவது ஒளியாகும் என்று ரசூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் அருளியதாக ஹஸரத் பாலித் (ரஹ்) அவர்கள் அறிவித்துள்ளார்கள், அதாவது பூமியிலுள்ளவர்களுக்கு வானிலுள்ள நட்சத்திரங்கள் மின்னுவதைப் போல் பூமியில் குர்ஆன் ஷரீப் ஓதப்படும் வீடுகள் வானிலுள்ளவர்களுக்கு நட்சத்திரங்களைப் போன்று மின்னுகின்றன என்று,

(ஆதாரம் (தர்கிப்)

அல்லாஹுத்த ஆலாவுடைய தர்பாரில் நெருக்கம் பெறுவதற்கு பரிசுத்த குர்ஆனைவிடச் சிறந்த சாதனம் வேறெதுவுமில்லை எனவே எல்லா நேரங்களிலும் திருக் குர்ஆனை ஓதுவதில் ஈடுபட்டு மனோ இச்சைக்கும் ஷைத்தானின் வழிகேட்டில் நின்றும் எம்மை பாதுகாப்போமாக. (ஆமீன்)

(வ)

## அண்ணல் நபி(ஸல்) காட்டும் நல்வழி

# துருவக்கரடியின் குறை தீர்ந்தது

இங்கிலாந்து மிருகக்காட்சிச் சாலையில் வைக்கப்பட்டுள்ள மிஷா என்ற துருவக் கரடிக்கு ஒரே இடத்தில் தொடர்ந்து இருந்து வந்ததில் வாழ்க்கை போரடிக்க ஆரம்பித்தது!

இதை மெதுவாக மிருகக்காட்சிச்சாலை அதிகாரிகள் உணர்ந்து கொண்டதும், மிஷாவின் வாழ்க்கையில் எப்படி மகிழ்ச்சியையும் திருப்பத்தையும் உருவாக்கலாம் என்று மூளையைக் கசக்க ஆரம்பித்தனர்.

ஒரு ஐடியா கண்டுபிடிக்கப்பட்டது! மிஷா வழமையாக உணவு உண்ணும் மரக்கட்டைகளை எடுத்து விட்டு பதிலாக மாமிச வாசமும் வெள்ளைப் பூண்டு மணமும் கமழும் மரக்கட்டைகளை அங்கே வைத்தனர்.

என்ன அதிசயம்! மிஷாவிடம் இப்போது சோர்வில்லை! இம் மரக்கட்டைகளின் மீது வைக்கப்படும் உணவுகளை ஆர்வத்துடன் உண்ணுகிறது! மாமிச மணமும் வெள்ளைப் பூண்டு மணமும் மிஷாவின் வாழ்வில் திருப்பத்தை ஏற்படுத்தி விட்டன!

(ம—432)

## டெலிவிஷன்

21—1—1990

9-30 செய்திகள் — ஆங்கிலம்
10-00 பொனான்ஸா
10-50 ஒளிபரப்பு முடிவு

### ஐ. டி. என்.

சேவை — I

11-00 "விட் கிட்ஸ்"
11-30 "என்ட்ரீ விப்ரீ"




ஒரே இடத்தில் தொடர்ந்து இருந்து வந்ததில் வாழ்க்கை போரடிக்க ஆரம்பித்தது!

இதை மெதுவாக மிருகக்காட்சிச்சாலை அதிகாரிகள் உணர்ந்து கொண்டதும், மிஷாவின் வாழ்க்கையில் எப்படி மகிழ்ச்சியையும் திருப்பத்தையும் உருவாக்கலாம் என்று மூளையைக் கசக்க ஆரம்பித்தனர்.

ஒரு ஐடியா கண்டுபிடிக்கப்பட்டு வெள்ளைப் பூண்டு மணமும் கமழும் மரக்கட்டைகளை அங்கே வைத்தனர்.

என்ன அதிசயம்! மிஷாவிடம் இப்போது சோர்வில்லை! இம் மரக்கட்டைகளின் மீது வைக்கப்படும் உணவுகளை ஆர்வத்துடன் உண்ணுகிறது! மாமிச மணமும் வெள்ளைப் பூண்டு மணமும் மிஷாவின் வாழ்வில் திருப்பத்தை ஏற்படுத்தி விட்டன!

(ம—432)

## டெலிவிஷன்

21—1—1990

### ரூபவாஹினி

3-00 ஜிலெட் வேல்ட் ஸ்போட்ஸ் ஸ்பெஷல்
4-00 த வொண்டபுல் விஸட் ஆப் ஊஸ்
4-25 தூயகணிதம் (சா த)
4-50 த அல்வின் ஷோ
5-00 "ஸ்டோரி பேஜ்"
5-30 "சுடசுன" — கிறிஸ்தவ நிகழ்ச்சி
6-00 மும்மணிகளுக்கு அஞ்சலி
6-15 பியுஷர் அட்ரக்ஷன்ஸ்
6-30 செய்திகள் - தமிழ்
6-55 ஸ்போட்ஸ் மகசின்
7-15 ஹோப் போர் மிலியன்ஸ்
7-25 "அம்ப யஹலுவோ"
8-00 செய்திகள் - சிங்களம
8-30 சவசங்கித்த
9-30 செய்திகள் - ஆங்கிலம
10-00 பொனான்ஸா
10-50 ஒளிபரப்பு முடிவு

### ஐ. டி. என்.

சேவை — I

11-00 "விட் கிட்ஸ்"
11-30 "என்ட்ரீ லிப்ரீ"
12-00 வண்ணப்பூக்கள்
12-30 விசித்ர கீத்த
1-00 முத்துச்சரம்
1-30 நீந்தத் தெரியாத மீன்கள்
1-45 ஒளிபரப்பு முடிவு

சேவை — II

5-00 புட்போல் மேட் இன் ஜெர்மனி
6-00 மும்மணிகளுக்கு அஞ்சலி
6-15 "ரச தஹரா"
6-45 தெளரி கீத்த கட்டலு
7-00 சுப பிரார்த்தனா
7-30 வெரயிட்டி பெயார்
8-00 பட்டர்பிளைஸ்
8-30 செய்திகளும் கருத்துகளும
9-00 ரச விந்தன
9-30 கேஷிஸ் ரெயின்போஸ்
10-00 செய்திகள் - ஆங்கிலம்
10-26 கேஷில் ரெயின்போஸ்

— தொடர்ச்சி

## சின்னக் குழந்தை

— வி. எம். நஜிமுதீன் —

உன்னைத் தொட்டால் எந்தன் நெஞ்சு
உவகை கொட்டுது — அந்த
சின்னக் கண்ணை பார்த்தால் எனக்குக்
கற்பனை கூட்டுது

★

கையை ஆட்டும போது பாப்பா
காவியம பிறக்குது — நீ
மைய ஊர்ந்து வருகின்றபோது
மெய்யே களிக்குது

★


பல்லு இல்லா முரசைப் பார்த்து
பாவம என்குது — உந்தன்
பாலைப் போன்ற மனசு கண்டு
பாசம சுரக்குது

★

சின்னக் காலும, சின்னக் கையும,
சின்ன மூக்குமபோல் — இந்த
பென்னம பெரிய உலகில் என்னை
ஒன்றும கவராவே.

★



# காதலி தேடிக் கொடுத்த மனைவி

ஆர். இராஜலிங்கம்

—3—

அன்று இரவு திலீபனுக்கு தூக்கம் பிடிக்கவில்லை— படுக்கையில் புரண்டு புரண்டு படுத்துக் கொண்டிருந்தான்— சிந்தனை அலைகளில் அவன் உள்ளம் சிக்கித் தத்தளித்துக் கொண்டிருந்தது—

"சே... பிரேமினி கூட மாறி விட்டாள்— சோதிடத்தை உண்மையென்றே நம்பிவிட்டாள்— பாவம்... உயிருக்குப் பயந்து விட்டாள்— என்ன இருந்தாலும் பெண்தானே— இயற்கையான பலவீனம் அவளை ஆட்கொண்டு விட்டது—

இருந்தாலும்... அவளால் என்னைச் சந்திக்காமல் இருக்க முடியாது— நாளை கட்டாயம் வருவாள்—

சோதிடர் சொன்ன விசயம் உண்மையாகத்தான் இருக்குமோ? கடவுளே அப்படி மட்டும் இருக்கக் கூடாது— பிரேமினி இல்லாமல் என்னால் வாழ முடியாது—

ம்... அந்த சோதிடரைப் பார்த்தால் பொய் சொல்பவராகவும் தெரியவில்லையே! அவர் சொன்னது உண்மையாகத்தான் இருக்குமோ!

கடவுளே...! எனக்கு ஏன் இந்த சோதனை? சோதிடர் சொன்ன விசயம் சிலவேளை உண்மையில் நடந்து விட்டால்...?

இப்படிப் பலவாறு சிந்தித்துக் கொண்டு அவன் கவலைப்பட்டுக் கொண்டிருந்தான்— பின்னர் ஒருவாறு மனதைத் தேற்றிக் கொண்டு—

"சே... வீணாக மூளையைப் போட்டுக் குழப்பக் கூடாது— நாளை பிரேமினியை சந்தித்து ஒரு முடிவு செய்யலாம்— அவள் பெண்ணாக இருந்தாலும் என்னை விட மூளைசாலி— இந்தக் கஷ்டத்திலிருந்து தப்புவதற்கு ஏதாவது வழி சொன்னாலும் சொல்லுவாள் பார்க்கலாம் நாளை"

இப்படியே பலவாறு சிந்தித்துக் கொண்டு நித்திரையிலாழ்ந்தான்—

மறுநாள் காலைக்கடன்களை யெல்லாம் முடித்துக் கொண்டு குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னதாகவே பிரேமினியைச் சந்திக்கச் செல்லத் தயாரானான்—

குறிப்பிட்ட இடத்தில் அவனுக்கு முன்னரே வந்து காத்திருப்பாள் என்று தான் எதிர்பார்த்துச் சென்றான்— ஆனால், அவளோ அங்கு வந்திருக்கவில்லை— ஏமாற்றத்துடன் சுற்றும் முற்றும் நோக்கி விட்டு அவளை எதிர்பார்த்துக் காத்திருந்தான்—

நேரம் உருண்டு கொண்டிருந்தது அரை மணித்தியாலம், ஒரு மணித்தியாலம், இரண்டு மணித்

"பிரே... பிரேமினி வந்து விட்டாயா? எனக்குத் தெரியும் நீ நிச்சயம் வருவாய் என்று உன்னால் என்னை சந்திக்காமல் இருக்க முடியாது"

என்று பலவாறு உளறினான்—

கூறியது— ஆதலால் காதலைத் துறப்பதுதான் சரி என்ற முடிவுக்கு வந்தாள்—

"திலீபன் நான் நன்றாகச் சிந்தித்து விட்டேன்— வெறும் அற்பக் காதலுக்காக உயிரை இழப்

பது முட்டாள்தனம் அல்லவா?" என்று கேட்டாள்—

"பிரேமினி! என்ன சொல்கிறாய்? அற்பக் காதலா? நீயா அப்படிச் சொல்கிறாய்? நம காதல் தூய்மையானது, புனிதமானது என்று ஒரு காலத்தில் சொன்னாயே! அதெல்லாம் வெறும் வேஷம்தானா?"

தாக இருக்கட்டும், அதற்காக என் உயிரை மாய்த்துக் கொள்ள வேண்டுமா? உயிரோடு ஒப்பிடும் போது காதல் வெறும் அற்பம் அதனால்..." "அதனால்...?"

"அதனால் நம தொடர்பை முடித்துக் கொள்வதுதான் நல்லதென்று கருதுகிறேன்"

"பிரேமினி அப்படிச் சொல்லாதே நீ இல்லாமல் என்னால் வாழ முடியாது"

"அப்படி ஒரு நல்ல எண்ணம் இருக்குமானால் நீங்கள் என்னை மறந்து விட வேண்டும்"

மணந்து கொண்டால்தானே நான் இல்லாமல் போவேன் என்னை நீங்கள் மறந்து விட்டால் உயிருடனாவது இருப்பேன் தானே"

"அப்படிச் சொல்லாதே பிரேமினி உன்னை மறந்து என்னால் வாழ முடியாதே"

"அதாவது என்னை ஒரேயடியாக தீர்த்துக்கட்டிவிட வேண்டும் என்று கங்கணம் கட்டிக் கொண்டு இருக்கிறீர்கள் அப்படித்தானே"

"சே... என்னை மிகக் கீழ்த்தரமாக எடைபோட்டிருக்கிறாய்



பிரேமினி எதுவும் பேசவில்லை மௌனமாக நின்றாள்— தனக்காக அவன் எவ்வளவு நேரம் காத்திருக்கிறான் என்பதையும் தன் மீது அவன் வைத்திருக்கும் அன்பையும் நினைத்து வியந்தாள்—

நடுத்தர குடும்பப் பெண்ணான தன் மீது கோடீஸ்வரனான அவன் வைத்திருக்கும

## வாசல் அவள் பாராள்

—சோமலிங்கம்—

மனைவி எனக்கு வாய்த்து விட்டாள் என்
மாதாப் பிதாவின் புண்ணியத்தால்
துணையாய் என்னுடன் வாழுகிறாள் எந்த
தொல்லையும் வந்து கௌவவில்லை
எனையே உயிராய் மதித்திடுவாள் முன்
எழும்பிப் பணிகள் செய்திடுவாள்
அணையா விளக்காய் இருந்து நிதம்
அகத்தில் ஒளியைத் தருகின்றாள்!

★

உளத்துக்கும் உடலுக்கும் ஏற்ற விதம்
உணவு சமைத்து உண்ண வைப்பாள்
அளக்க முடியாப் பேரன்பால் எனை
அருந்த வைத்து மகிழ்ந்திடுவாள்
குளத்தை விட்டு வெளியேறா ஒரு
கோலத் தோணி என நானும்
இழுத்து அணையும் வேளைமட்டும் அந்த
இளமான் தன்னை விட்டகலேன்!

★

எதிர்வார்த்தை உரைத்தறியாள் தன்
இரு கைகளையும் நான் பற்றில்
புதிய உணர்வு பெற்றிடுவாள் நல்ல
புதுமலராக விளங்கிடுவாள்
எதிலும் எனையே நிதம் காண்பாள் நான்
இல்லாவேளைதனில் எல்லாம்
வதியும் அறையை விட்டு முன்றில்
வாசல் தனையும் அவள் பாராள்!

★

என்ன சொல்லி விடு— நான் போய் விடுகிறேன்"

"என் முடிவு...? அதைத்தான் சொல்லி விட்டேனே திலீபன்— உங்களுக்கென்ன குறை? உங்களைத் தேடிவர பல பெண்கள் இருக்கிறார்கள்— நீங்கள் நினைத்தால் மூன்று மாதத்திற்கு ஒரு பெண்ணைத் தெரிவு செய்து மணந்து கொள்ளலாம்— அதாவது ஒவ்வொருத்தியும் இறக்க இறக்க"

"கிண்டல் வேண்டாம் பிரேமினி— இது விளையாடுவதற்கு நேரமல்ல"

"நான் விளையாடவில்லை சீரியஸாகத்தான் சொல்கிறேன்"

"என்ன சொல்கிறாய்?"

"உங்களை மணந்து மூன்று மாதத்தில் இறக்கும் பெண்களின் பட்டியலில் என்னையும் ஏன் சேர்க்கிறீர்கள்— அதற்கு எத்தனையோ பெண்கள் இருக்கிறார்கள்தானே"

மாத காலத்தில் முடிந்துவிடும் என்பது உண்மையாக இருந்தால் அடுத்த பெண் நீண்ட ஆயுள் காலம் வாழ்வாள் என்பதும் உண்மையாகத்தானே இருக்கும்

அப்படியானால் இரண்டாவதாக நான் குறுகிய ஆயுள் உள்ள ஒருத்தியை மணந்து கொண்டாலும் அவளின் ஆயுள் கெட்டியாகி விடும்— அந்த வகை

தொடர் கதை

"நீ தவறாகப் புரிந்து கொண்டாய்? என் சோதிடம் அப்படிச் சொல்லவில்லை— முதலாவது மணக்கும் பெண் மட்டும்தான் மூன்று மாதத்தில் இறந்து விடுவாளாம்— அடுத்து நான் மணக்கும் பெண் தன்னுடைய குறிக்கப்பட்ட ஆயுளைவிட நீண்ட ஆயுள் காலம் சுமங்கலியாக வாழ்வாளாம்! அப்படித்தான் சோதிடர் சொன்னார்—

யில் பார்த்தால் ஆண்டவன் என்னை மிகுந்த பாவியாக படைத்து விடவில்லை"

இப்படி அவன் சொல்லி முடித்ததும் பிரேமினி சிந்தனைக்குள்ளானாள்— அவள் உள்ளம் ஏதோ ஒன்றை நினைத்துக் கொண்டது— இருந்தாலும் அவள் எதுவும் பேசவில்லை— சிறிது நேரம் மௌனமாக இருந்தாள்—



ஒரு முடிவு ... பெண்ணாக இருந்தாலும என்னை விட மூளைசாலி- இந்தக் கஷ்டத்திலிருந்து தப்புவதற்கு ஏதாவது வழி சொன்னாலும சொல்லுவாள் பார்க்கலாம நாளை"

இப்படியே பலவாறு சிந்தித்துக் கொண்டு நித்திரையிலாழ்ந்தான்-

மறுநாள் காலைக்கடன்களை யெல்லாம முடித்துக் கொண்டு குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னதாகவே பிரேமினியைச் சந்திக்கச் செல்லத் தயாரானான்-

குறிப்பிட்ட இடத்தில் அவன் தனக்கு முன்னரே வந்து காத்திருப்பாள் என்று தான் எதிர்பார்த்துச் சென்றான்- ஆனால், அவளோ அங்கு வந்திருக்கவில்லை- ஏமாற்றத்துடன் சுற்றும முற்றும நோக்கி விட்டு அவளை எதிர்பார்த்துக் காத்திருந்தான்-

நேரம உருண்டு கொண்டிருந்தது அரை மணித்தியாலம, ஒரு மணித்தியாலம, இரண்டு மணித்தியாலம், மூன்று மணித்தியாலம என்று நேரம நகர்ந்து கொண்டிருந்தது-

நேரம சென்று கொண்டிருந்ததே தவிர அவள் வருவதாகத் தெரியவில்லை- நம்பிக்கையை இழந்த திலீபன் இனியும காத்திருப்பதில் பயனில்லை என்று உணர்ந்து போகத் தயாரானான்-

அப்போது "திலீபன்" என்ற குரல் கேட்டு பின்னால் திருமபிப் பார்த்தான்- பிரேமினி நின்று கொண்டிருந்தாள்- அவனுக்கு மகிழ்ச்சி தாளவில்லை-

பிரேமினி எதுவும பேசவில்லை மௌனமாக நின்றாள்- தனக்காக அவன் எவ்வளவு நேரம காத்திருக்கிறான் என்பதையும தன் மீது அவன் வைத்திருக்கும அன்பையும் நினைத்து வியந்தாள்-

நடுத்தர குடும்பப் பெண்ணான தன் மீது கோடீஸ்வரனான அவன் வைத்திருக்கும அன்பை அவளால் ஒரேடியாக தட்டிக்கழிக்கவும முடியவில்லை- அதேசமயம அவனை அடைந்து தன் உயிரை இழக்கவும அவள் தயாரில்லை- இரு தலைக் கொள்ளி எறும்பு போல தவித்துக் கொண்டிருந்தாள்-

அவனிடம என்ன பேசுவது எப்படிப் பேசுவது என்றும அவளுக்குப் புரியவில்லை-

உயிரா? காதலா? என்ற கேள்வி அவள் உள்ளத்தில் எழுந்தது- அந்தக் கேள்விக்கு அவளின் உள்ளம உயிர் என்றே பதில் பது முட்டாள்தனம அல்லவா?" என்று கேட்டாள்-

"பிரேமினி! என்ன சொல்கிறாய்? அற்பக் காதலா? நீயா அப்படிச் சொல்கிறாய்? நம காதல் தூய்மையானது, புனிதமானது என்று ஒரு காலத்தில் சொன்னாயே! அதெல்லாம வெறும் வேஷம்தானா?"

"இப்பொழுது மட்டும என்ன சொல்கிறேன், தூய்மையான

"அதனால் நம தொடர்பை முடித்துக் கொள்வதுதான் நல்லதென்று கருதுகிறேன்"

"பிரேமினி அப்படிச் சொல்லாதே நீ இல்லாமல் என்னால் வாழ முடியாது"

"அப்படி ஒரு நல்ல எண்ணம இருக்குமானால் நீங்கள் என்னை மறந்து விட வேண்டும"

"என்ன சொல்கிறாய்?"

"ஆமாம் நீங்கள் என்னை மினி உன்னை மறந்து என்னால் வாழ முடியாதே"

"அதாவது என்னை ஒரேயடியாக தீர்த்துக்கட்டிவிட வேண்டும என்று கங்கணம் கட்டிக் கொண்டு இருக்கிறீர்கள் அப்படித்தானே"

"சே... என்னை மிகக் கீழ்த்தரமாக எடைபோட்டிருக்கிறாய் பிரேமினி- அப்படிப்பட்ட கயவன் அல்ல நான்- உன் முடிவுதான்

மணந்து கொள்ளலாம்- அதாவது ஒவ்வொருத்தியும இறக்க இறக்க"

"கிண்டல் வேண்டாம பிரேமினி- இது விளையாடுவதற்கு நேரமல்ல"

"நான் விளையாடவில்லை சீரியஸாகத்தான் சொல்கிறேன்"

"என்ன சொல்கிறாய்?"

"உங்களை மணந்து மூன்று மாதத்தில் இறக்கும பெண்களின் பட்டியலில் என்னையும ஏன் சேர்க்கிறீர்கள்- அதற்கு எத்தனையோ பெண்கள் இருக்கிறார்கள்தானே"

"நீ தவறாகப் புரிந்து கொண்டாய்? என் சோதிடம அப்படிச் சொல்லவில்லை- முதலாவது மணக்கும பெண் மட்டுமதான் மூன்று மாதத்தில் இறந்து விடுவாளாம- அடுத்து நான் மணக்கும பெண் தன்னுடைய குறிக்கப்பட்ட ஆயுளைவிட நீண்ட ஆயுள் காலம சுமங்கலியாக வாழ்வாளாம! அப்படித்தான் சோதிடர் சொன்னார்-

ஒரு பெண்ணின் ஆயுள் மூன்று

தொடர் கதை

கொண்டாலும அவளின் ஆயுள் கெட்டியாகி விடும- அந்த வகையில் பார்த்தால் ஆண்டவன் என்னை மிகுந்த பாவியாக படைத்து விடவில்லை"

இப்படி அவன் சொல்லி முடித்ததும பிரேமினி சிந்தனைக்குள்ளானாள்- அவள் உள்ளம ஏதோ ஒன்றை நினைத்துக் கொண்டு இருந்தாலும அவள் எதுவும பேசவில்லை- சிறித நேரம மௌனமாக இருந்தாள்-

(தொடரும)

# புளிப்பு எலுமிச்சையின் இனிப்பான பயன்

எலுமிச்சையின் சுவை புளிப்பானது. அதன் பயன்கள் அனைத்தும் இனிப்பானதாகும்- சமையல்களிலும் பானங்களிலும் மருந்துகளிலும் பெருமபாலும் பயன்படுத்தப்படுகிறது-

ஆகாரம் பானம் மருந்து ஆகிய மூன்றும் உள்ளடக்கியுள்ள ஒரு அதிசயப் பழம் எலுமிச்சையாகும்-

பல மாதங்களாக கடலில் பிரயாணம் செய்யும் மாலுமிகளுக்கு "ஸ்கர்வி" என்னும் நோய் வருவதுண்டு- இது ஒரு பயங்கரமான நோயாகும்- பல மாலுமிகள் இந்நோய்க்கு பலியாகியுள்ளார்கள்-


கடல் பிரயாணத்தில் மாதக் கணக்கில் சென்ற சில மாலுமிகள் வீடு திரும்புவது கிடையாது- நல்ல நிலையில் உள்ள கப்பல்கள் கடலில் மிதந்து கொண்டே இருக்கும்- ஸ்கோர்வி என்ற கடல் நோயினால் அநேகர் மரித்துப் போயிருக்கிறார்கள்-

"ஸ்கர்வி" நோயைப் போக்குவதற்கு சிட்ரஸ் (நாரத்தை எலுமிச்சை ஆரஞ்சு) மிகவும் சிறந்த மருந்தாகும்- இதை டாக்டர்கள் அனுபவ ரீதியில் கண்டுள்ளார்கள்- பின்னரே உலகுக்கு அறிமுகம் செய்துள்ளார்கள்-

பிரிட்டனில் கப்பல் சொந்தக்காரர்கள் அனைவரும் மாலுமிகளுக்கு சிட்ரஸ் பழங்களைக் கடல் பிரயாணத்தின் போது கொடுத்தனுப்ப வேண்டும் என்று கட்டாயமாக்கப்பட்டது-

நமது நாளாந்த சாப்பாட்டில்புத்தம் புதிய பழம் ஒன்று கண்டிப்பாக இடம்பெற வேண்டும்-

நாரத்தை எலுமிச்சம்பழம் ஆரஞ்சு போன்றவைகள் சிட்ரஸ் பழங்களாகும்- இவைகளில் விட்டமின் "சி" ஏராளமாக அடங்கியிருக்கிறது-



மேலும் தக்காளி - கீரை வகைகள் - கொய்யா - உருளைக் கிழங்கு ஆகியவைகளிலும கூட விட்டமின் "சி" ஏராளமாக பொதிந்து வைக்கப்பட்டுள்ளது- சமைத்த உணவுகளில் எலுமிச்சம பழத்தை பிழிந்து விடும பழக்கும ஊட்டச் சத்தை யூட்டும் சிறப்பான பழக்கங்களில் ஒன்றாகும்-

அதிகமான உணவை உண்டதாலோ அல்லது தவறான உணவை உண்டதாலோ வாந்தி எடுப்பதுண்டு- இவர்களுக்கு எலுமிச்சம் பழரசபானம் ஒரு நல்ல மருந்தாகும்-

காலையில் ஒரு டம்ளர் எலுமிச்சம் பழரசபானம் அருந்துவதினால் மலம் நன்றாகக் கழியும்-

(18ஆம பக்கம பார்க்க)

மேற்கு ஜெர்மனியிலுள்ள கெயில் துறைமுகத்தில் அண்மையில் உலகிலேயே மிகப்பெரிய இரு தொள்கலன் கப்பல்கள் வெள்ளோட்டம விடப்பட்டன. இரு கப்பல்களும வைபவ ரீதியாக வழி அனுப்பி வைக்கப்படும காட்சி.

(ம)

# பெற்றோர் கடன்

— ஜின்னாஹ் —

எப்பிழைகள் செய்தாலும் ஏற்புடைய தாகாதே
தப்பிழைக்கும் பிள்ளை தனைப்பெற்றோர் — ஒப்பாது
வைதல் அவர்தமக்கு வாய்விட்டுச் சாபங்கள்
செய்தல் எனவென் றறி.

★

விளையாட்டுக் காகவெனும் வேண்டாமே வார்த்தை
பிழையாகப் பிள்ளைகள் மேல் கூற — விளைவததால்
தீமைகள்தான் கெட்ட துயர்சூழும் பெற்றோர்கள்
தாமுணர வேண்டும் இதை

★

தெரிந்துந் தெரியாதுஞ் செய்தபிழை தன்னைப்
பெருந்தன்மை யோடு பொறுத்தே — வருந்துமவர்
வாழ்வுக் குகந்த வழிமுறைகள் சொல்வதொடு
வாழ்த்துவதும் பெற்றோர் கடன்

★

பெற்றோர் மனம்நொந்தால் பிள்ளைதம் வாழ்வினிலே
முற்றும் இடரன்றி வேறில்லை — சற்றும்
துயரணுகா தேபெற்றோர் தூயமனம் வாழ்த்திடுங்கால்
செயலெல்லாம் வெற்றி தரும.

# அவளின் கள்ளக் காதலுக்கு ஒரே சாட்சி நாரைதான்

## தோழியிடம் காதலி கூறியதாக குறுந்தொகை கூறும் தகவல்

பழந் தமிழ் நூல்களில் குறுந்தொகை அகவாழ்க்கை பற்றிப் பேசுகின்றது,

அகம் என்பது ஒருவனும் ஒருத்தியும் கூடிவாழும் வாழ்க்கை பற்றிக் கூறுவது,

அகத்திணையிலுள்ள பாடல்கள் அனைத்தையுமே நாடகப் பண்பு உடையவை என்று கூறிவிடலாம்,

நாடகம் சிறப்பதற்கு உரிய உறுப்புகளாகப் பாத்திரங்கள், உரையாடல், உடை, களம், முகபாவம் சூழ்ச்சி, ஆகியவற்றைக் குறிப்பிடலாம்,

ஆனால் குறுந்தொகை போன்ற நூல்களில் உள்ள பாடல்கள் நாடகமாக அமைக்கப்பட்டவையல்ல,

அவை ஒவ்வொரு சந்தர்ப்பத்தில், ஒரு சூழ்நிலையில் ஒரு தலைவனோ தலைவியோ என்ன பேசினார்கள் என்பதைக் குறிப்பனவாகும்,

எனவே இப்பாடல்களில் நாடகப் பண்பை மட்டும் எதிர்பார்க்கலாமே தவிர நாடகத்தை வருவது நின்று விட்டது,

ஒரு தலைவனைக் கண்ட தலைவி தொடுப்பாரும் அடுப்பாருமின்றி அவனுடன் களவொழுக்கத்தில் ஈடுபட்டாள்,

தோழிக்குக் கூடத் தெரியாமல் அவள் தலைவனுடன் கூடி மகிழ்ந்திருந்தாள், இவ்வாறு சில நாள் நடைபெற்று வந்தது, ஆனால் திடீரென்று தலைவன் வருவது நின்று விட்டது,

ஒன்று, இரண்டு, மூன்று என்று நாட்களை எண்ணி எண்ணித் தலைவி அசந்து விட்டாள்,

அவள் உடம்பு மெலிவதைக் கண்ட தோழிக்குக் கூட வருத்தம் ஏற்பட்டு விட்டது,

தலைவியின் இளைப்புக்குக் காரணம் யாதாக இருக்கலாம் என்று கேட்கிறாள் தோழி,

முன்னர் நடைபெற்ற பழைய நிகழ்ச்சியைக் கூறுகிறாள் தலைவி,

நாடகத்தில் ஏற்படும் பின்னோட்டம் போல் இங்கும் ஒரு பின்னோட்டக் காட்சி வருகிறது.

தலைவன் தலைவியை முதன் முதலில் சந்தித்த இடம், மனித சஞ்சாரமற்றது, அந்த இடத்தில் நடைபெற்ற அந்தச் சந்திப்புக்கு யார் இன்று சாட்சி சொல்ல முடியும்?

தோழி அவளைப் பார்த்துக் கேட்கிறாள் தலைவி! உயிர்ப் பிராணி ஒன்றும் இல்லாத அத்தகைய இடத்தில் எவ்வாறு நீ அவனைக் காண முடிந்தது? யாரும் காணாத இடமா அது? என்று தோழி கேட்டவுடன் தலைவிக்குப் பழைய ஞாபகம் வருகிறது,

**— ந. சிவபாதம் —**

தோழி! தனி இடத்தில்தான் தலைவன் என்னைச் சந்தித்தான், அன்று என் மனதைத் திருடிச் சென்றவன் இன்று வராதிருந்தால் யாரிடம் முறையிட முடியும்,?

அவன் என்னைச் சந்தித்ததை யார் அறிவார்கள்? ஆம்! ஒரே ஒரு சான்று மட்டும் உண்டு,

அவன் என்னைக் கண்ட நேரத்தில் தினையின் தாள் போன்ற பசிய கால்களை உடைய ஒரே ஒரு நாரை மட்டும் கொஞ்சமாக ஓடுகிற தண்ணீரில் மீன் ஏதாவது அகப்படுமோ என்று பார்த்துக் கொண்டே இருந்தது,

— இவ்வாறு கருத்துப்பட தலைவி கூறுகிறாள்.

> யாரும் இல்லைத் தானே கள்வன்
> தான் அது பொய்ப்பின் யான் எவன் செய்கோ?
> தினைத்தாள் அன்ன சிறுபசுங் கால
> ஒழுகு நீர் ஆரல் பார்க்கும்
> குருகும் உண்டுதான் மணந்த ஞான்றே

நாரைதான் சாட்சி என்று எண்ணும் தோழி மகிழ்ந்து விடப் போகிறாளே என்று எண்ணிய தலைவி அந்தச் சாட்சியின் பயனற்ற தன்மையையும் குறித்துக் காட்டுகிறாள்,

நாரையால் சான்று பகர முடியவே முடியாது, நாரை எங்களைக் காணவில்லை, தன் வயிற்றை நிரப்ப வேண்டி எங்காவது ஆரல் மீன் கிடைக்குமா என்று அதில் கவனம் செலுத்திற்று தவிர எங்களைக் கவனிக்க அதற்கு நேரம் ஏது?

— இவ்வாறு தன் வயிற்றெரிச்சலைக் கூறவந்த தலைவி நாடக முறையில் சுருக்கமாகவும் அழகாகவும் "ஒழுகு நீர் ஆரல் பார்க்கும் குருகும் உண்டுதான் மணந்த ஞான்றே?" என்று கூறுகிறாள்,

ஆரல் பார்க்கும் குருகும் உண்டு என்று தலைவி கூறும் பொழுது எவ்வளவு அவலச் சுவை சோகரஸம் அதில் வெளிப்படுகிறது,

வாழ்க்கையே அஸ்தமித்து விட்டது போன்ற ஒரு வருத்தம் தலைவியைப் பிடித்துக் கொண்டதை இந்த நான்கு சொற்களில் அறிய முடிகிறது,



இன்னொரு நாடகத்தையும் பார்ப்போம்,—

இந்த நாடகத்தின் பெரும் பகுதி உரையாடல் இல்லாமலே நடைபெறுகின்றது. நாடகம் முடிந்த பின் அதனைச் சொற்களால் கூறுகிறாள் ஒரு தலைவியின் செவிலித்தாய்,

பழைய கிரேக்க நாடகங்களில் வரும் "கோரஸ்" நாடகத்தில் நடந்ததையும் நடக்கப் போவதையும் கூறுவது போல் இச்செவிலித்தாய் கூறுகிறாள்,

நாடகம் நடைபெறும் இடம், சமையல் அறையும், உணவு பரிமாறும் முற்றமும் களங்கள்,

காட்சி முதல் இடமாகிய சமையல் அறையில் ஆரம்பமாகின்றது,

சமையல் வெகு மும்முரமாக நடைபெறுகின்றது, நல்ல கட்டித் தயிரைக் கைவிரல்களால் சிலுப்புகிறாள் தலைவி,

ஏன் தெரியுமா? இதோ மோர்க் குழம்பு தயாரிக்கிறாள், அதற்குத் தாளிதம் செய்கிறாள், அவள் செய்யும் தாளிதத்தின் மணம் இதோ வீசுகிறது, "குப்" என்ற சத்தத்துடனும் புகையுடனும் தாளிதம் செய்யப்படுதலின், இதனைக் "குய்ப்புகை" என்று பழந்தமிழர் கூறினர்,

சமையலும் முடிந்து விட்டது, கணவனும் இலை எதிரே அமர்ந்து விட்டான்,

இதோ அவள் குனிந்து அவனுக்கு உணவு பரிமாறுகிறாள்.

அவளுடைய புடைவையில் வெண்மையாக இருக்கும் கறை என்ன என்று எண்ணுகிறீர்கள்? தயிரைச் சிலுப்பிக் கடைந்த கையை அவசரத்தில் கழுவாமல் உடையில் துடைத்துக் கொண்டாள்,

இவ்வளவு உயர்ந்த உடையில் தயிர்க் கறையைத் தடவலாமா? அவள் பெரிய இடத்துப் பெண் அல்லவா?

இந்தத் தடல்புடலுடன் கணவனுக்குச் சோறு படைத்து விட்டாள், அவனும் நாக்கைச் சப்புக் கொட்டிக் கொண்டு சாப்பிடுகிறான்,

அடிக்கடி அவளைப் பார்த்து அவளின் சமையலைப் புகழ்கிறான், இதைவிடப் பெரிய மகிழ்ச்சி வேறு யாது உளது, எனவே அவள் தன் பெருமகிழ்ச்சியை வெளிக் காட்டாதுவிடினும் உள்ளூர அனுபவிக்கிறாள்,

ஒரு நல்ல குடும்பத்தின் நாடகம் இதோ கவிதையில் காட்சி தருகிறது,

> முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்
> கழுவுறு கலிங்கம் கழாஅது உடீஇக்
> குவளை உண்கண் குய்ப்புகை கமழத்
> தான் துழந்து அட்ட தீம்புளிப் பாகர்
> இனிது எனக் கணவன் உண்டலின்
> நுண்ணிதின் மகிழ்ந்தன்று நன்றுதல் முகனே,

பாடல் முழுவதிலும் தலைவன் கூற்றாக வருகிற சொல் ஒன்றே ஒன்றுதான் தலைவியின் உணவை உண்ணும்பொழுது அவன் "இனிது" என்று கூறினான்,

இதனைக் கேட்டவுடன் தலைவியினுடைய முகத்தில் தோன்றும் மாறுதலைக் கூடக் கவிதை குறிக்கிறது, (ம)

# கோயிலில் வசிக்கும்



58 ஆம் வருஷம் இங்க 16 கிரவுண்ட் இடம் வாங்கி சின்ன வயசில எனக்கு ஏற்பட்ட ஆசையை நிறைவேற்ற பாண்டுரங்கன் சாமிக்கு கோயில் கட்டினேன். அப்போயிருந்து, ஓரத்தில் இருக்கிற இந்த வீட்டில்தான் குடியிருந்து வர்றேன். ஆரம்பத்தில் சினிமாவில் நடிக்கிறப்போ கூட எனக்கு வேற பெயர் வைக்கணும் தயாரிப்பாளர்கள்

வீட்டில் அண்ணன் தம்பிகள் நாலு பேருக்கும் ஒரே முகூர்த்தத்தில் கல்யாணம் ஆச்சு. இது மாதிரி குழந்தை இல்லாதவங்க, வேலை இல்லாதவங்க, எல்லாம் நல்லது கிடைக்குமனு நம்பி இங்க வந்து வேண்டிக்கு வாங்க.

"இதெல்லாம் பார்த்திட்டு ஒரு சிலர் என்னை பெங்களூருக்கு



கண்ட தோழுக்கு கூட வருத்தம் ஏற்பட்டு விட்டது,

தலைவியின் இளைப்புக்குக் காரணம் யாதாக இருக்கலாம் என்று கேட்கிறாள் தோழி,

முன்னர் நடைபெற்ற பழைய நிகழ்ச்சியைக் கூறுகிறாள் தலைவி,

நாடகத்தில் ஏற்படும் பின்னோட்டம் போல் இங்கும் ஒரு பின்னோட்டக் காட்சி வருகிறது.

யார் அறிவார்கள்? ஆம்! ஒரே ஒரு சான்று மட்டும் உண்டு,

அவன் என்னைக் கண்ட நேரத்தில் தினையின் தாள் போன்ற பசிய கால்களை உடைய ஒரே ஒரு நாரை மட்டும் கொஞ்சமாக ஓடுகிற தண்ணீரில் மீன் ஏதாவது அகப்படுமோ என்று பார்த்துக் கொண்டே இருந்தது,

– இவ்வாறு கருத்துப்பட தலைவி கூறுகிறாள்.

... ஆரல் பார்க்கும் குருகும் உண்டுதான் மணந்த ஞான்றே?" என்று கூறுகிறாள்,

ஆரல் பார்க்கும் குருகும் உண்டு என்று தலைவி கூறும் பொழுது எவ்வளவு அவலச் சுவை சோகரஸம் அதில் வெளிப்படுகிறது,

வாழ்க்கையே அஸ்தமித்து விட்டது போன்ற ஒரு வருத்தம் தலைவியைப் பிடித்துக் கொண்டதை இந்த நான்கு சொற்களில் அறிய முடிகிறது,



இன்னொரு நாடகத்தையும் பார்ப்போம்,–

இந்த நாடகத்தின் பெரும் பகுதி உரையாடல் இல்லாமலே நடைபெறுகின்றது. நாடகம் முடிந்த பின் அதனைச் சொற்களால் கூறுகிறாள் ஒரு தலைவியின் செவிலித்தாய்,

பழைய கிரேக்க நாடகங்களில் வரும் "கோரஸ்" நாடகத்தில் நடந்ததையும் நடக்கப் போவதையும் கூறுவது போல் நடைபெறுகின்றது, நல்ல கட்டித் தயிரைக் கைவிரல்களால் சிலுப்புகிறாள் தலைவி,


ஏன் தெரியுமா? இதோ மோர்க் குழம்பு தயாரிக்கிறாள், அதற்குத் தாளிதம் செய்கிறாள், அவள் செய்யும் தாளிதத்தின் ... வின்

நண்ணிதன் மகிழ்ந்தன்று
நன்றுதல் முகனே,

பாடல் முழுவதிலும் தலைவன் கூற்றாக வருகிற சொல் ஒன்றே ஒன்றுதான் தலைவியின் உணவை உண்ணும்பொழுது அவன் "இனிது" என்று கூறினான்,

இதனைக் கேட்டவுடன் தலைவியினுடைய முகத்தில் தோன்றும் மாறுதலைக் கூடக் குவிதை குறிக்கிறது, (ம)

# கோயிலில் வசிக்கும் நடிகை!



நாலு படங்களில் தலை காட்டிய உடனேயே, கார், பங்களா, பத்திரிகைகளில் பக்கம் பக்கமாக பேட்டி என்று பந்தா பண்ணும் இன்றைய நடிகைகளுக்கு மத்தியில், வித்தியாசமாக இருக்கிறார், பெரிய நடிகை ஒருவர். தான் சம்பாதித்த பணத்தில் வாங்கிய பதினாறு கிரவுண்ட் நிலத்தை, கோயிலுக்கு தானமாகக் கொடுத்து விட்டு, அதன் மூலையில் ஒரு சிறு குடிசை போட்டு மிகவும் எளிமையாக வாழ்ந்து வருகிறார் அந்த நடிகை!

தரமான வேடங்களை ஏற்று, நானூறு படங்களுக்கு மேல் நடித்து புகழ் பெற்ற பண்டரிபாய் தான் அவர்!

சென்னை வட பழனி, கங்கை அம்மன் காலனியில் உள்ள பண்டரி கோயில் மிகவும் பிரசித்தம். முப்பத்தியொரு வருடங்களுக்கு முன்னால் கட்டப்பட்டது இக்கோயில்.

கோயில் உருவான கதையைத் தனது வார்த்தைகளால் விவரிக்கிறார் பண்டரிபாய்.

"சின்ன வயசிலயிருந்தே நான் கடவுள் மேல் ரொம்ப பக்தியா இருப்பேன். கிருஷ்ணர் என்னோட இஷ்ட தெய்வம். பிறந்து நாலு வருசம் வரைக்கும் எனக்கு வீட்டில் பெயர் வைக்கவில்லை. பேபி, கண்ணா அப்படீன்னு ஏதாவது செல்லமா வார்த்தைகளைச் சொல்லி கூப்பிடுவாங்க.

"கர்னாடக மாநிலம் கார்வார் பக்கத்தில் எங்க குடும்பம் இருந்திச்சு. அங்க பாண்டுரங்கன் பெயர் கொண்ட கிருஷ்ணர் கோயில் இருக்கு. அந்த கோயிலில் உள்ள சாமின்னா சின்ன வயதில் எனக்கு ரொம்ப பக்தி. அந்த மாதிரி இருந்ததால் எனக்கு அந்த சாமியோட பெயரையே வச்சு நாலு வயசுக்கு மேல பண்டரின்னு கூப்பிட ஆரம்பிச்சாங்க.

"ஒரு நாள், கொஞ்சம் தாமதமா நான் கோயிலுக்கு போனேன். அப்போது போனப்போ, நேரம் ஆயிடுச்சுன்னு கதவை பூட்டிட்டாங்க. நாம நெனைச்ச நேரத்துக்கு போக முடியலை. வரமுடியலையேன்னு வருத்தமா இருந்திச்சு. ஏன் நாமே பாண்டுரங்கனுக்கு கோயில் கட்டி, நாம விரும்பின நேரத்துல கடவுளை வணங்கக் கூடாதுன்னு தோணுச்சு. சின்ன வயசில் ஏற்பட்ட அந்த நினைப்பு சென்னைக்கு வந்து சினிமாவில நடிகையான பின்னால் நிறைவேறிடுச்சு.

"நான் மொத மொதல்ல "பஹார்"ன்ற இந்தி படத்தில் நடிச்சேன். அப்புறம் "சிவபக்தன"ங்கற கன்னடப் படம். அதுக்கப்புறம் மூணாவதா 52 இல் "பராசக்தி" தமிழ் படத்தில் சிவாஜிக்கு ஜோடியாக நடிச்சேன். அதைத் தொடர்ந்து நிறைய படங்களில் நடிக்க ஆரம்பிச்சேன்.

58 ஆம் வருஷம் இங்க 16 கிரவுண்ட் இடம் வாங்கி சின்ன வயசில எனக்கு ஏற்பட்ட ஆசையை நிறைவேற்ற பாண்டுரங்கன் சாமிக்கு கோயில் கட்டினேன். அப்போயிருந்து, ஓரத்தில் இருக்கிற இந்த வீட்டில்தான் குடியிருந்து வர்றேன். ஆரம்பத்தில் சினிமாவில் நடிக்கிறப்போ கூட எனக்கு வேற பெயர் வைக்கணும்னு தயாரிப்பாளர்கள் சொன்னாங்க. கடவுள் மேலே உள்ள பக்தியினால், இந்த பெயர் தான் எனக்கு இருக்கணும்னு கண்டிப்பா மறுத்திட்டேன்.

"இந்த கோயிலுக்கு முக்கியஸ்தர்கள் தவிர சினிமாவை சேர்ந்தவங்களும் வருவாங்க. இங்க குடியிருக்கிற பொது மக்களும் நம்பிக்கையோட இங்க சாமி கும்பிட வர்றாங்க. ஒரு குடும்பத்தில் 4 பொண்ணுங்க யாருக்குமே கல்யாணம் ஆகலை. சமீபத்தில இங்க வந்து வேண்டிக்கிட்டாங்க. கொஞ்ச நாள்லயே அவங்க நாலு பேருக்கும் ஒரே வீட்டில் அண்ணன் தம்பிகள் நாலு பேருக்கும் ஒரே முகூர்த்தத்தில் கல்யாணம் ஆச்சு. இது மாதிரி குழந்தை இல்லாதவங்க, வேலை இல்லாதவங்க, எல்லாம் நல்லது கிடைக்கும்னு நம்பி இங்க வந்து வேண்டிக்குவாங்க.

"இதெல்லாம் பார்த்திட்டு ஒரு சிலர் என்னை பெங்களூருக்கு அருகில் ஆசிரமம் ஒன்று அமைத்து, அங்கு வந்து உட்காரச் சொன்னார்கள். "நீங்கள் சும்மா மட்டும் வந்து இருங்கள். மற்ற நிர்வாகம், வரவு – செலவுகள் நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்" அப்படீன்னாங்க. நான் மறுத்திட்டேன்.

அந்த மாதிரிதான் கடவுளுக்கு தொண்டு செய்யணும்னு கெடையாது; அதில் தப்பும் இல்லை. இருந்தாலும் மனசில ஆண்டவனை நெனைச்சுகிட்டு இந்த கோயிலுக்கு வர்ற பக்தர்கள் பொது மக்களை ஏமாற்றாம, நம்மால முடிஞ்ச நாலு உதவிகளை செஞ்சா போதும்னு இங்கயே இருந்திட்டேன்" என்றார்.



பண்டரிபாய்

கோயிலுக்குள் குடியிருப்பதை பெருமையாகக் கருதும் பண்டரிபாயை போன்றவர்களும் சினிமா உலகில் இருக்கத்தான் செய்கிறார்கள். (ம–10)

# சமூக பிரச்சினைகளை அலசுகிறார்

மக்களின் பெரும் பொழுது போக்குச் சாதனமான சினிமாவில் மனித வாழ்க்கையின் யதார்த்தங்களையும் படமாக்கி அதை வெற்றி பெறச் செய்தவர் சத்யஜித்ரே.

இசையமைப்பு, படத் தொகுப்பு, கதை, வசனம் டைரக்ஷன் என்று எல்லா துறைகளிலும் சகல கலா வல்லவராகத் திகழும் சத்யஜிரே 25 படங்களைத் தயாரித்திருக்கிறார். அவரது பல படங்கள் விருதுகளைப் பெற்று உள்ளன. "ரே"வுக்கு பிரான்ஸ் நாட்டின் விருது வழங்கப்பட்டது.

கடந்த 5 ஆண்டுகளாக உடல் நலமில்லாமல் அவர் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வந்தார்.

ரே கடைசியாகத் தயாரித்த "ஹாரே பாய்ரே" படப்பிடிப்பின் போது ஒரு வித்தியாசமான கதையை அடுத்து படமாக்கப் போவதாக அறிவித்தார். ஆனால் டாக்டர்கள் அவரைக் கடுமையான வேலை எதுவும் செய்யக் கூடாது என்று எச்சரிக்கை செய்திருந்தார்கள். இதை அவர் பொருட்டாகவே மதிக்கவில்லை.

அவ்வப்போது ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வந்தாலும் கதை எழுதுவதிலும், எடிட்டிங் செய்வதிலும், இசை அமைப்பதிலும் இறந்து போன தந்தையைப் பற்றி டாக்குமெண்டரி படம் தயாரிப்பதிலும் ஈடுபட்டார். டாக்டர்கள் ஆலோசனைப் படி வெளிப்புற படப்பிடிப்பில் கலந்து கொள்ளவில்லை.



சத்யஜித்ரே

5 ஆண்டுகளாக சினிமா சத்யஜித்ரே, மீண்டும் படம் தயாரிக்கிறார் என்றவுடனே, படம் எடுக்காமல் இருந்தது அவருக்கு அலுத்துப் போனதோ என்னவோ தெரியவில்லை. மீண்டும் திரை உலகுக்கு வந்து விட்டார்.

நோர்வே நாட்டு எழுத்தாளர் ஹென்றிக் இப்சென்னின் "ஆன் எனிமி ஆப் தி பீப்பிள்" என்ற நாடகத்தை ஞான சத்ரு என்ற பெயரில் படமாக்கினார்.

உடல் நலம் பாதிக்கப்பட்டிருந்த நிலையிலும் "ரே" படம் முழுவதையும் ஒரே ஸ்டுடியோவில் எடுத்து முடித்தார். ரேயை கவனித்துக் கொள்ள படப்பிடிப்பில் அவருடன் எப்போதும் 2 டாக்டர்கள் இருந்தனர்.

அவருக்கு நிதியுதவி அளிக்க 3 தயாரிப்பாளர்கள் முன்வந்தனர். ஆனால் ரே தேசிய சினிமா வளர்ச்சிக் கழகத்தின் நிதியுதவியை விரும்பினார். படத்திற்கான செலவு போக மீதியை அவர் தேசிய சினிமா வளர்ச்சிக் கழகத்துக்கே கொடுத்து விட்டார்.

"ரே" எப்போதும் அரசியலைப் பற்றி படம் எடுப்பதில்லை. அவரது படங்கள் சமூக நீதிகளையே வற்புறுத்துவதாக இருக்கும். சமூக பிரச்சினைகளை அக்கு வேறு, ஆணி வேறாக அலசிவிடுவார்.

(ம–10

# ஷியாவின் உயிர் பறித்த விமான விபத்து ஒரு சதி!

## அதை மூடி மறைக்க சிலர் முயன்றனர் என சந்தேகம்

— பொன். சுரேந்திரன் —

[illegible]ண்டிப்பாக இது கடவுளின் செயல்!

பாகிஸ்தான் ஜனாதிபதி ஜெனரல் ஷியா உல் ஹக் விமான விபத்தில் இறந்த செய்தியை இவ்வாறுதான் தற்போதைய பிரதமர் பெனாசிர் பூட்டோ குறிப்பிட்டார்—

அனுதாபமோ ஆதங்கமோ இதில் இல்லை— ஆனால் நடக்க வேண்டியது நடந்துள்ளதால் கடவுளுக்கு நன்றி கூறுவது போல அது அமைந்தது—

ஜனாதிபதி ஷியாவை பெனாசிர் பூட்டோ வெளிப்படையாகவே வெறுத்தவர்— அவரது தந்தை சுல்பிகார் அலி பூட்டோவை பிரதமர் பதவியிலிருந்து அகற்றியதோடு அவரைத் தூக்குத் தண்டனைக்கும் ஆளாக்கியவர் அதன் மூலம் பூட்டோ குடும்பத்தையே பாழாக்கியவர்—

இத்தனைக்கும் ஷியா இராணுவ உயர் பதவி பெற உதவியவர் அலி பூட்டோவே— இதற்கு நன்றியாக ஷியா மதிப்பளிக்க பூட்டோவின் தலையிலிருந்து ஒரு மயிர் உதிர்வதைக் கூட நான் பொறுத்துக் கொள்ள மாட்டேன் என்று கூறியவர்— ஆனால் அவர் நடந்து கொண்ட விதம் என்ன!

பெனாசிர் தலையெடுத்த அரசியலில் பிரவேசிப்பதற்கு ஷியா ஏற்படுத்திய இடர்கள் ஏராளம்— தேர்தல் பிரசாரத்தில் போது பெனாசிரைச் செல்லவிடாது தடுப்பதற்காக பெனாசிரின் பிரசவ காலத்தைப் பார்த்து தேர்தல் திகதியை ஷியா தீர்மானித்தார்—

இப்போது வெளியாகியுள்ள ஒரு தகவல்— "ஷியாவைக் கொல்வதற்கு நான் ஐந்து தடவை முயற்சித்துள்ளேன்— என்னால் இது முடியாத பட்சத்தில் எனக்குப் பதிலாக எவராவது இதில் வெற்றியடைவார்கள்"

இதைச் சொன்னவர் பெனாசிரின் சகோதரர் முர்த்தசா—

அலி பூட்டோ தூக்கிலிடப்பட்டதை அடுத்து இரு புதல்வர்களும் அடைக்கலம் தேடி அயல் நாடான அப்கானிஸ்தானுக்குத் தப்பி ஓடினார்கள்— இவர்களில் மூத்த சகோதரர் முர்த்தசா அப்கான் அரசு ஆதரவோடு அல்—சுல்பிகார் என்ற பெயரில் தீவிரவாதக் குழு ஒன்றைத் தாபித்தார்— அவர் செய்த சபதம் ஷியாவைக் கொல்வது—

இது தொடர்பாக இவர் பிரபல்யமான லண்டன் டெய்லி டெலிகிராப் பத்திரிகைக்கு அளித்த பேட்டியிலேயே இந்த முயற்சிகள் பற்றி விரிவாக விளக்கியிருந்தார்—

1981 தொடக்கம் ஷியாவைக் கொல்வதற்கு நாலு முறைகள் பெரும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன— பாதுகாப்புத்தக் [illegible] பணியாக போனதாக [illegible]



ஷியா உல்ஹக்

வழங்க முடியாது— உன்னைக் கடவுளால் மட்டுந்தான் கௌரவிக்க முடியும்" என பிரத்தியேக விருந்தொன்றில் ஷியா கூறினார்

சோவியத் ஆப்கானை விட்டு தனது படைகளை விலக்கிக்கொள்கிறது— சர்வதேச ரீதியில் சோவியத் ரஷ்யாவுக்கு இது மாபெரும் தோல்வி— ஆப்கானிஸ்தானுக்கு மரண அடி—

இதற்குக் காரணமான ஷியா, அக்தார் இருவரையுமே ஒழிப்பது இவர்களுக்கு முக்கியமாகிறது—

விமான விபத்தில் ஷியா, அக்தார் மற்றும் அனைவருமே இறந்து போகிறார்கள்— இது தொடர்பாக இடைக்காலப் பாகிஸ்தானிய அரசு மேற்கொண்ட பூர்வாங்க விசாரணையில் இரு விடயங்கள் தெட்டத் தெளிவாகின்றன—

ஷியாவும் சகாக்களும் பயணமான மேற்படி விமானத்தில் எந்தவிதமான தொழில்நுட்பக் கோளாறுகளும் இருக்கவில்லை— அதைச் செலுத்திய இரு விமானிகளும் எவ்வித குறைபாடுகளையும் கொண்டிருக்கவில்லை—

இந்த நிலைமையில் முக்கியமான ஒரு கேள்வி எழுகின்றது—

அதாவது தொழில்நுட்பக் கோளாறுகளோ விமானியின் தவறுகளோ இல்லையானால், இந்த விமான விபத்து எப்படி ஏற்பட்டது—

ஜனாதிபதி ஷியா குறிப்பிட்ட விமான விபத்திற்கான பயணத்தைத் திட்டமிட்டிருக்கவில்லை— பாதுகாப்புக் காரணங்களுக்காக அந்தப் பயணம் பின்போடப்பட்டே வந்தது— அப்படி இருந்தும் அந்தப் பயணத்தை அவர் மேற்கொள்ள வேண்டுமென அவருக்கு வேண்டுகோள் விடுக்கப்படுகின்றது— குறிப்பிட்ட அந்த நிகழ்ச்சியில் [illegible] நோக்கிலா [illegible] அவர் வலியுறுத்தப்படுகிறார்

ளான விமானமும் அதே நிலையில்தான் பறக்கின்றது— ஆனால் அவர் இதில்தான் செல்கின்றார் என்பதை அவரது எதிராளிகளுக்கு அறிவிக்கும் கால அவகாசத்தை மேற்படி பயணம் ஏற்படுத்துகிறது—

இந்த விமானம், நிகழ்ச்சி நடைபெறும் இடத்திற்கு அருகாமையில் உள்ள முல்தான் தளத்தில் தாராளமாக தரையிறங்க முடியும்— அந்தளவுக்கு அது பெரியது— ஆனாலும் அது மிகவும் சிறிய ஒடுங்கிய தளமான வகவல்பூரில் தரை இறங்குகின்றது—

இதன் காரணமாக இரு விமானங்களுக்கு இடமில்லாத நிலையில் இங்கு ஷியா சென்ற விமானம் மட்டும் தரிக்க விடப்படுகின்றது— அடுத்த விமானம்



தில் ஷியா செல்கின்றார் என்பதை ஊர்ஜிதம் செய்வது எதிராளிகளுக்கு எளிதாக்கப்படுகிறது— இங்கே இன்னும் ஒரு கேள்வி எழுகிறது— எவர் இந்த ஏற்பாட்டைச் செய்தார்? விசாரணையில் இந்த விவகாரம் ...இடம்பெறவில்லை—

ஷியா நிகழ்ச்சிக்குச் சென்றதும் அந்த விமானம் மூன்று வேறுபட்ட முக்கிய அமைப்புகளினால் காவல் செய்யப்படுகிறது— வழமையான விமான நிலையப் பாதுகாப்பு விசேட இராணுவப் பிரிவு உள்ளூர் பொலீஸ் என்ற அந்த அமைப்புகள் இருந்தபோதும் அவற்றுக்கிடையே இணைப்பு

பொலீஸ் அதிகாரி பார்க்கிறார்— சிறு திருத்தங்களைச் செய்வதற்காக வந்துள்ள இவர்கள் மீது அவருக்குச் சந்தேகம்— ஆனாலும் அவர்களை விசாரணை செய்யும் அதிகாரம் அவருக்கு இருக்கவில்லை—

அந்த விமானத்தின் தலைமை விமானியான மசூட் பாரூக், துணை விமானி சஷீட் சௌத்திரி இருவரும் விமானம் மீண்டும் பறப்பதற்கான சோதனைகளைப் பூர்த்தியாக்கி சகலதும் சரியானதும் பிற்பகல் 3–30 அளவில் ஜனாதிபதி ஷியா தனது சகாக்கள் சகிதம் மறுபடியும் விமானத்திற்குத் திரும்புகிறார்—



சுல்பிகார் அலி பூட்டோ

பறக்கும் விமானத்துடன் தொடர்பு கொள்ள முயன்று தோற்றுப் போகின்றார்—

பதற்றம் கொண்ட அவர் சக்லாலா தளத்தில் நிற்கும் அடுத்த விமானத்திற்கு அவசரமாய் இதை அறிவித்த போது அதன் விமானிகள் பறந்து கொண்டிருக்கும் ஜனாதிபதியின் விமானத்தோடு தொடர்பு கொள்ள முயற்சிக்கிறார்கள்— ஆனால் அவர்களால் ஒரே ஒரு வசனத்தை மட்டுந்தான் கேட்க முடிகின்றது— "ஐயோ மசூட், நீ என்ன செய்து கொண்டிருக்கிறாய்?"

இதன் பிறகு இந்த விமானத்திலிருந்து எந்தச் சத்தமும் அவர்களுக்குக் கேட்கவில்லை— ஏனெனில் இதன் பிறகு இது விபத்துக்குள்ளாகிறது—

இந்த விமானம் மேலே எழு [illegible]

விபத்துக்குள்ளாகிறது— ஜனாதிபதியோடு அனைவரும் அந்த இடத்திலேயே மரணமாகிறார்கள்—

இந்த விமானத்துள் ஏதும் வெடிக்கும் சாதனங்கள் வைக்கப்பட்டு அதனால் விபத்து ஏற்பட்டதா? இதை ஊர்ஜிதப்படுத்தும் வகையில் இறந்தவர்கள் மீது பிரேத பரிசோதனை செய்திருக்க வேண்டும்—

இந்த விபத்தில் இறந்தவர்களாக, மிகவும் சிதைவு படாத சிலரின் உடல்கள் வகவல்பூர் இராணுவத் தள வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன— இவற்றின் மீது பிரேத பரிசோதனைக்கு அங்குள்ள வைத்தியர்கள் தயாராகிறார்கள்—

ஆனால் பரிசோதனை ஆரம்பமாகு முன்பே அவர்கள் தடுக்கப்பட்டு, உடல்கள் அகற்றப்பட்டு உடனேயே அடக்கம் செய்யப்படுகின்றன—

விபத்துக்குள்ளான ஷியாவின் விமானம் வகவல்பூர் தளத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த போது உள்ளூர் பொலீஸார் சில சந்தேகமான சம்பவங்களை அவதானித்திருக்கிறார்கள் [illegible] ஷியாவின் அந்தப் [illegible] பாதுகாப்பு [illegible] விசாரணை [illegible] மேற்கொள்ளப்படவில்லை—

இந்த விபத்தின் போது [illegible] பாகிஸ்தானுக்கான [illegible] அமெரிக்கத் தூதுவர் [illegible] அதிகாரியும் [illegible]

எனவே இந்த விபத்துக்கான காரணத்தை அறியும் கடமைப் பாடு அமெரிக்காவையும் சேர்ந்தது— எனவே அமெரிக்காவின்

# புது சிருஷ்டியாக வாழ இயேசு அருள் புரிவார்

## கிறிஸ்தவ நற்பிரசாதம்

— பிலிப். அ. புவனேஸ்வரி —

புத்தாண்டு பிறந்து ஒரு சில நாட்களும கடந்து வாரங்களாகி மாதமாகும் தறுவாயில் நாம நிற்கிறோம—

எம் வாழ்வில் கடந்து போன ஆண்டும மாதமும நாட்களும ஏன் நாழிகையும் கூட ஒரு போதும் ஒருவருக்கும திரும்பக் கிடைக்கப் போவதில்லை—

இதனால்தான் என்னவோ "பொன்னான நேரத்தை மண்ணாக்காதே..." என்று சொல்கிறார்கள் போலும்— வேதம் கூட இதைப்பற்றி எமக்கு "காலத்தை பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள்" என எபே 5–16 கூறுகின்றது—

கடந்த வருட வாழ்வுப் பாதையை நாம சற்று திரும்பிப் பார்த்தால்... அப்பப்பா... எண்ணி முடியாத அளவு கூட நம் மனத்திரையில் நிகழ்ச்சிகள் கணப் பொழுதிலே தோன்றி மறைகின்றன— ஆம் நம வாழ்விலே அநேக உதவிகளை பெற்றிருப்போம்—

அநேக சந்தோஷத்தை அனுபவித்திருப்போம— அநேக வெற்றிகளைக் கொண்டு வாழ்க்கையின் தரமகூட உயர்ந்திருக்கும்—

இது மட்டுமா? இல்லை இதற்கு மாறாக பலவித துன்பப் புயலில் மீட்பார் யாருமின்றி மனம் நொந்திருப்போம்—

பலவித் தோல்விகளையும் வெட்கங்களையும் சந்தித்திருப்போம்— அன்பானவர்களே எதுவானாலும் சரி எல்லாவற்றையும் கடந்து புதியதோர் ஆண்டிலே நாம் வந்துள்ளோம்!

எமது சிந்தையிலே கடந்த வாழ்க்கையிலே கர்த்தர் செய்த நன்மைகளை ஒருகணம எண்ணிப் பார்த்தால் எத்தனை இனிமையானது—

103ஆம சங் 2ஆம் வசனத்தின்படி நாம் கர்த்தரை ஸ்தோத்திரம செய்து அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாமல் இருப்பதேயாம்—

ஆம்... நாம் கடந்து வந்த துன்பமும் வியாதியும் வெட்கமும் அல்ல அன்பானவர்களே! தேவன் நமக்கு செய்த ...சகல உபகாரங்களையும் நன்மைகளையுமே நாம் நினைக்க வேண்டியுள்ளது—

ஆம் தேவன் நமக்கு செய்த யாவற்றையும் எண்ணிப் பார்த்தால் எத்தனை ஆச்சரியமும அற்புதமுமான வழியிலே நம்மை நடத்தி வந்துள்ளார்—

உள்ளம் சோர்ந்து போன எத்தனை வேலைகள் உலக மக்கள் எம்மை கைவிட்டகுன்ற நேரங்கள் வியாதியின் கடும வேதனையில் துடித்த பொழுது சுற்றத்தார் நம்மை வெட்கப் படுத்தின அந்த நாட்கள்... இவை போன்ற துன்ப வேளைகளில் எமக்கு உள்ளத்தை ஆற்றித் தேற்றி ஆறுதல் தந்தவர் யார்?

எல்லாத் துன்பப் பொழுதின் இரவிலும் எமக்கு சுகமான நித்திரை தந்தவர் யார்? இக்கட்டான பொழுதிலும் எம கடமைகளை சரிவர செய்யத் தைரியம் தந்தவர் யார்?

ஓ... எனது சுய பெலனும் சக்தியும் என் தரமும் தகுதியும் என்று சொல்லப் போகிறீர்களா? இல்லவே இல்லை—

அன்பானவர்களே! அருமை இரட்சகரான ஆத்ம நண்பன் "இயேசு" எம்மோடு இருந்ததினால் மட்டும்தான்!

உலகப் பிரகாரமாய் உதவி செய்த ஒருவருக்கு ஆபத்தில் உதவிய நண்பனுக்கு அல்லது வைத்திய பரிசோதனையில் தனது கடமையை செய்த டாக்டருக்கு அல்லது எமது ஆலயத்தில் உள்ள குருவானவருக்கு நாம நத்தார் புத்தாண்டு நாட்களிலே எத்தனை விருந்துபசாரம் செய்து எமது நன்றியை காட்டியிருப்போம—

அன்புள்ளங்களே நம்மை இக்கட்டுகள் மத்தியிலே துயரக் கண்ணீரின் வேளையிலே தாக்கி சுமந்த இயேசு சுவாமிக்கு நாம் என்ன கைமாறு செய்தோம—

ஏ பீ 13–5ன்படி வாக்குத்தத்தம் செய்தபடியே எம்மை விட்டு விலகாமலும் எம்மை கைவிடாமலும் இருந்த ஆத்ம சகோதரனுக்கு என்ன செய்தோம்?

குறைந்தது நத்தார் புத்தாண்டு நாட்களிலாவது முழு நாளையும் இறைபாதம் அமர்ந்து பக்தியாய் பரிசுத்தமாய் அனுசரித்தோமா? இல்லவே இல்லை— தேவனை கண்ணீர் விட வைக்கும காரியங்களைக் கூட அந்நாட்களில் நாம் செய்திருப்போம்—

சரி கடந்து சென்ற காரியங்கள் முடிந்தவையாக இருக்கட்டும— இனி தொடரும் புத்தாண்டு ஜீவியம் புனிதமாய் அமைய வேண்டாமா?

இப்புதிய ஆண்டிலே நாம் புதியவர்களாய் ஜீவிப்போம்— புதுப் பெலனும் புது ஜீவனையும் பெற்ற புதிய சிருஷ்டியாய் தேவனுக்காக வாழ்வோம—

கர்த்தருக்கு நாம் இப்புதிய ஆண்டிலே கொடுக்கப் போகும் காணிக்கை பொருள் உபகாரங்களை விட எம் உள்ளத்தை ஆலயமாக்கி காணிக்கையாக அர்ப்பணிப்போம்...

ஏனெனில் தேவன் விரும்புவது நொருங்குண்ட இதயத்தையே! நாம் தேவனை அண்டினால் மாத்திரமே அவர் நமக்கு கேடகமாயிருப்பார்—

எனவே கடந்து வரும் வாழ்வு நாட்களை தேவ கரத்திலே கொடுப்போம்— அது மாத்திரமல்ல 1 பேது 5–7 சங் 55–22 ஆகியன கூறுவது போல தேவன் மீது நம் கவலை பாரங்களை வைத்து விடுவோம்— அவர் எமமை விசாரித்து ஆதரித்து வழி நடத்துவார்—

கலா 5–19ன்படி மாம்சக் கிரியைகளை கொண்ட வாழ்வை ஒழித்து கலா 5–22ல் கூறப்படும் ஆவியின் கனி கொண்ட வாழ்வை பற்றிப் படர்ந்து வாழ்வோம்—

2 கொரி 5—17ன்படி நாம கிறிஸ்துவுக்குள்ளிருந்து புதிய சிருஷ்டியாய் வாழ்வோம்— இதையே புதிய ஆண்டில் தீர்மானமாகக் கொண்டு கடந்து போவோம்—

"இன்றைக்கு நான் செய்யும் இந்தத் தீர்மானத்தை என்றைக்கும் காத்திட ஆவியால் நிர...ர்..." என பக்தனின் பாடலைப் போல இதை வாசித்து இப்புதிய ஆண்டிலே இயேசுவுக்காக தீர்மானமுள்ள வாழ்வை வாழ எண்ணும் உங்கள் அனைவரையும் தேவன் தாமே அளவில்லா ஆசிர்வாதத்துடன் வழிநடத்துவாராக!

"ஆமென்"

[த].


## திருவடி துணை

அடி உதவுவது போல அண்ணன் தமபி உதவ மாட்டார்கள் என்பது பழமொழி. அதன் உண்மைப் பொருள் என்ன தெரியுமா?

ஒருவருக்கு கஷ்டம வரும போது அண்ணன், தமபி உதவா விட்டாலும கூட இறைவன் திருவடியே சரணம என்று நமபி செயல்கள் புரிந்தால் கஷ்டம எப்படியாவது நீங்கும.

இறைவனின் திருவடியை நமபினால் உதவி ஏதாவது ஒரு வழியில் கிடைக்கும என்பதே கருத்து இறைவனின் திருவடி உதவுவது போல அண்ணன் தம்பி உதவ மாட்டார்கள். என்ற பழமொழியில் முதலில் உள்ள "இறைவனின் திரு" வார்த்தைகள் மறைந்து போயிருக்க வேண்டும.

(ம–10)







விலை. 12 கொண்டது ரூ. 24/
20 கொண்டது ரூ. 40

JWT CTC 20625

**ஜோன் பிளேயர் · கோல்ட் லீஃப்**

அர்சாங்க எச்சரிக்கை:
புகைபிடித்தல் உடல் நலத்துக்குக் கேடாகலாம

## பேராசை எது?

"தன் பொருள் மேல் உண்டாகும விருப்பத்திற்கு "பற்று" என்றும பிறர் பொருள் மீது உண்டாகும விருப்பத்திற்கு "ஆசை" என்றும கிடைக்காத பொருள் மீது உண்டாகும விருப்பத்திற்கு "பேராசை" என்றும பெயர்.

## பிறந்த நாள் வாழ்த்து



முக்மமது பயாஸ்

காத்தான்குடி 6 ம் குறிச்சி நாகையடி அவுலியா ரோட்டைச் சேர்ந்த பரீட்—முனீரு தம்பதிகளின் அன்புப் புதல்வன் முகம்மது பயாஸ் தனது முதலாவது பிறந்த நாளை (20-01-1990) நேற்று தமது இல்லத்தில் மிகச் சிறப்பாக கொண்டாடினுர்.

இவரை உம்மா, வாப்பா, உம்மும்மா, உமமுவாப்பா, வாப்பா உமமா, வாப்புப்பா மற்றும் மாமாமார்களான பாயிஷ் அக்ரம, அம்ஜசன், அக்மல், அன்சார், சாச்சா, சாச்சிமார்களான முப்லிசூா, மலிகா, முஸீரா, கலீலுர் ரஹ்மான் மாமா, ஸஹிரு மாமி, ஸாபிரு மாமி, நிஸ்மி மச்சான், நிபாஷ் மச்சான், நிஜஸ் மச்சான், ஆகியோரும் மற்றும் குடும்பத்திலுள்ள உறவினர்களும, நண்பர்களும எல்லாம் வல்ல அல்லாஹ்வின் அருளால் சகல சௌபாக்கியங்களும் பெற்று பல்லாண்டு காலம் நலம் பெற்று வாழ வாழ்த்தியுள்ளார்கள்—

வி இ 4287

## பிறந்த நாள் வாழ்த்து



# குடும்பத்தை காக்க கடல் கடந்த அபலைப் பெண்ணின் வாழ்வு முடம்

## பணிப்பெண் வேலை தேடித்தந்த அவலம்

குடும்பத்தின் கஷ்ட நிலை பொறுக்க முடியாமல் கடல் கடந்து அரபு நாட்டில் தொழில் புரிய சென்றார் இளம குடும்ப மாது ஒருவர்—

— ஆனால் வாழ்நாள் முழுவதுமே இனி நடக்க முடியாத விதத்தில் இரு கால்களையும் இழந்த அனாதரவான நிலையில் வந்து படுத்த படுக்கையாக அவர் இருக்கும் பரிதாபக் காட்சி பார்ப்போரை மனம நெகிழ வைக்கிறது—

புத்தளம் தேர்தல் தொகுதியைச் சேர்ந்த விருதோடை முஸ்லிம் கிராமத்தைச் சேர்ந்த கப்பித்தான்சேனை என்னுமிடத்தைச் சேர்ந்தவர் அப்துல் லதீப் பாத்திமா நூர் ஆயிஷா (31) என்னும் இரு குழந்தைகளின் தாய்!

ஆரமப காலந்தொட்டு வறுமையில் வாடிய தனது குடும்பத்தை வறுமைப் பிணியிலிருந்து காப்பாற்ற வேண்டுமானால் அரபு நாட்டுக்குச் சென்று உழைப்பதே சிறந்ததென நினைத்தார்—

அதன்படி ஷார்ஜாவில் ஒரு வருடமும் மதீனா நகரில் இரண்டு வருடங்களும் பணிப் பெண்ணாக சேவையாற்றி பொருளீட்டிக் கொண்டு தாயகம் திரும்பினார்—

தனது குடும்பத்தின் வறுமையை விரட்டி ஓரளவு நிம்மதியாக வாழ ஆரம்பித்தார்—

உழைத்த பணத்தில் ஆயிஷா அழகிய வீட்டையும் தனது கிராமத்தில் கட்ட ஆரம்பித்தார்— ஆனால் பணம் போதவில்லை—

மீண்டும் அரபு நாடு சென்றால்தான் வீட்டைக் கட்டி முடிக்கலாம்! குடும்பத்தையும காப்பாற்றலாம் என்று கருதிய ஆயிஷா மறுபடியும் கடந்த 19—6—1989 ஆம் திகதி சவூதி அரேபியாவுக்குப் பயணமானார்—

ரியாத் நகரில் ஒரு பொலீஸ் அதிகாரியின் இல்லத்திலேயே அவருக்குப் பணிப்பெண் வேலை கிடைத்தது—

பொலீஸ் அதிகாரி அவரது மனைவி இரு குழந்தைகள் கொண்ட சிறிய குடும்பம—

நல்ல இடத்தில்தான் வந்து சேர்ந்துள்ளோம் என நினைத்த அபலை ஆயிஷா வீட்டுக் கருமங்களை சுறுசுறுப்புடன் ஆற்றத் தொடங்கினார்—

—ஏ. எஸ். புல்கி—

[புத்தளம நிருபர்]

சிறிது சிறிதாக எஜமானியம்மாள் தமது கொடூரத்தைக் காட்டத் தொடங்கினாள்— கடுமையான வேலைகளைத் கொடுத்தாள்— அடியும் உதையும் விழத் தொடங்கியது—

நேரத்திற்கு உணவு கொடுப்பதில்லை— அவர்கள் சாப்பிட்டபின் மிகுதி உணவே கிடைத்தது—

ஆயிஷா அந்த வீட்டுக்கு போன நாள் முதல் வீட்டு எஜமானனுக்கு அவர் மீது ஒரு "கண்" பலமுறை ஆயிஷாவுக்கு "அன்புத் தொல்லை"களைக் கொடுக்கத் தொடங்கினார்—

இதனைக் கண்டும் காணாத எஜமானியம்மாள் ஆயிஷாவுக்குத் தொல்லை கொடுப்பதை அதிகப்படுத்தினாள்— தினமும் அடியும் உதையும் தாராளமாக வழங்கப்பட்டன [illegible] எதுவித குற்றமும் செய்யாவிட்டாலும் ஆயிஷா தண்டிக்கப்பட்டாள்—

அதிகாலையில் நேர காலத்துடன் எழுந்து வீட்டு வேலைகளைச் செய்ய ஆரம்பித்து நள்ளிரவுக்குப் பின்னரே படுக்கைக்குப் போக வேண்டும—

ஆயிஷாவின் படுக்கை சமையலறைப் பக்கம் மாற்றப்பட்டது— வீட்டார்கள்— ஆயிஷாவை சமையலறைக்குள் வைத்து பூட்டி விட்டே படுக்கைக்குச் சென்றனர்—

இதேவேளையில் எஜமானின் அன்புத் தொல்லைகள் விஸ்வருபம் எடுத்தன—

ஆயிஷாவைக் கெடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன—

பலாத்காரம் செய்ய எஜமான் நெருங்கிய போதெல்லாம வேங்கையெனச் சீறினார் ஆயிஷா—

சீற்றம் கொண்ட எஜமான் ஆயிஷாவின் வாழ்வுக்கே முடிவு கட்ட எண்ணினான்—

ஓர் இரவு மூன்றாம் மாடியை (50 அடி உயரம்) சுத்தம் செய்யுமபடி எஜமான் பணித்தான்—

மூன்றாம் மாடியில் தரையை சுத்தம் செய்து கொண்டிருந்த ஆயிஷா எஜமான் பின்னால் வந்ததைக் கவனிக்கவில்லை—

தனது இச்சைக்கு இணங்குமபடி எஜமான் வற்புறுத்தினான்— ஆனால் ஆயிஷா தனது பிடியில் உறுதியாக இருந்தாள்—

ஆத்திரமும கோபமும அடைந்த எஜமான் அந்த மூன்றாம் மாடியில் இருந்து ஆயிஷாவை கீழே தள்ளினான்— அவ்வளவுதான்! கீழே விழுந்தது மாத்திரமே அவருக்குத் தெரியும.

அதன் பிறகு என்ன நடந்தது என்பதை சுமார் நாலரை மாதங்களுக்குப் பின்னர் ரியாத் மத்திய ஆஸ்பத்திரியில் கண் விழித்தபோததான் ஆயிஷாவினால் உணர முடிந்தது—

அன்றைய தினம் வரை நினைவற்ற நிலையில் அதாவது சுய நினைவற்ற நிலையில் "கோமா" நிலையிலேயே ஆயிஷா இருந்திருக்கிறார்—





அரபு நாடான ஷார்ஜாவில் பணிப் பெண்ணாக தொழில் புரிந்தபோது அழகி ஆயிஷாவின் தோற்றத்தை முதலாவது படத்தில் காணலாம. பின்னர் சவூதி அரேபியாவிலுள்ள ரியாத்தில் கடமை புரிந்த போது எஜமானால் 50 அடி உயரமான வீட்டின் மூன்றாம மாடியிலிருந்து தள்ளிவிடப்பட்டு நாலரை மாதங்கள் நினைவற்ற நிலையிலிருந்து தற்சமயம இடுப்புக்குக் கீழே செயலற்ற நிலையில் உருக்குலைந்த நிலையில் காணப்படும ஆயிஷாவின் தோற்றத்தை இரண்டாவது படத்தில் காணலாம,

(ம)

அழகிய முகம் சின்னாபின்னமாய் விட்டது— பற்கள் அனைத்துமே கொட்டி விட்டன—

ஆஸ்பத்திரியில் அவர் சுய உணர்வின்றி இருந்த காலத்தில் ஒருநாள் இரவு நேரத்தில் யாரோ இருவர் வந்து ஏதோ பத்திரத்தில் அவரது பெருவிரல் அடையாளத்தை பதித்து விட்டு சென்றதாக பக்கத்து கட்டிலில் இருந்த பெண்மணி கூறினார்—

"தற்கொலை செய்து கொள்வதற்காக மாடியிலிருந்து நானே குதித்தேன்" என்று அந்தக் குறிப்பில் எழுதப்பட்டிருந்ததாம்!

ஆயிஷாவுக்கு உணர்வு வந்தபின் சில நாட்கள் ஆஸ்பத்திரியில் வைத்திருந்து விட்டு அவரது உடல் முழுவதும் "புண் [illegible]

வரவில்லை— இது சம்பந்தமாக நான் ஏஜன்சியிடம் 13 முறை சென்று விசாரித்தேன்— அவர்களும் எதுவித தகவல்களும் கிடைக்கவில்லை என கையை விரித்து விட்டனர்—

நவம்பர் மாதம் எனக்கு தந்தியொன்று வந்தது— மனைவி வருகின்றார் என்ற ஆவலில் 29—11—1989 ஆம் திகதியன்று கட்டுநாயக்கா விமான நிலையத்திற்கு சென்றேன்—

குறிப்பிட்ட நேரத்தில் விமானமும் வந்து சேர்ந்தது— அதிலிருந்து பிரயாணிகளும் வெளியேறிக் கொண்டிருந்தனர்— என் மனைவியைத் தேடினேன்— அவரைக் காணவில்லை—

ஒருவேளை அவர் வரவில்லையோ என நினைத்து நான் [illegible]

மனைவி" என்றுஅவர் கைகளால் சைகை செய்தார்— அவ்வளவுதான் எனக்கு மயக்கம் ஏற்பட்டு அவ்விடத்திலேயே வீழ்ந்து விட்டேன்— பின்பு அயலவரின் உதவியுடன் வீடு வந்து சேர்ந்தோம்—

இதுவரை மனைவியின் வைத்திய செலவுக்காக சுமார் 50 ஆயிரம் ரூபா வரை செலவு செய்து விட்டோம்— எதுவித பிரயோசனமும் இல்லை— படுத்த படுக்கையாகவே கிடக்கிறார்—

மலசலகூடத்திற்கு அவரை நானே தூக்கிக் கொண்டு செல்கிறேன்—

இவரால் கட்டப்பட்ட புது வீட்டை அடகு வைத்தே வைத்திய செலவு செய்தேன்— இதற்கு [illegible]

## ஆடம்பர திருமணங்கள் எந்நாளும் ஓய்வதில்லை

இந்தியாவின் மத்தியப் பிரதேச மாநிலம சாகர் மாவட்ட கலெக்டர் மகளுக்கு திருமணம்! [illegible] பிட வந்தவர்கள் 25 ஆயிரம பேருக்கு மேலே! அமைச்சர்கள் பலர் உட்பட பல பிரமுகர் [illegible]

வாப்பா உமமா, வாப்புப்பா மற்றும் மாமாமார்களான ராயிஷ் அக்ரம், அஃசன், அக்மல், அன்சார், சாச்சா, சாச்சிமார்களான முப்லிகா, மலிகா, முஷீரா, தஷீலூர் ரஹ்மான் மாமா, ஷஹிரு மாமி, ஸாபிரு மாமி, நிஸ்மி மச்சான், நிபாஷ் மச்சான், நிஜஸ் மச்சான், ஆகியோரும் மற்றும் குடுமபத்திலுள்ள உறவினர்களும, நண்பர்களும எல்லாம் வல்ல அல்லாஹ்வின் அருளால் சகல செளபாக்கியங்களும் பெற்று பல்லாண்டு காலம் நலம் பெற்று வாழ வாழ்த்தியுள்ளார்கள்-

வி இ 4287

இரண்டு வருடங்களும் பணிப்பெண்ணாக சேவையாற்றி பொருளீட்டிக் கொண்டு தாயகம் திரும்பினார்-

தனது குடும்பத்தின் வறுமையை விரட்டி ஓரளவு நிம்மதியாக வாழ ஆரம்பித்தார்-

உழைத்த பணத்தில் ஆயிஷா அழகிய வீட்டையும் தனது கிராமத்தில் கட்ட ஆரம்பித்தார்- ஆனால் பணம் போதவில்லை-

மீண்டும் அரபு நாடு சென்றால்தான் வீட்டைத் [illegible] முடிக்கலாம்! குடும்பத்தையும காப்பாற்றலாம் என்று கருதிய ஆயிஷா மறுபடியும் கடந்த 19—6—1989 ஆம் திகதி

ஆயிஷா அந்த வீட்டுக்கு போன நாள் முதல் வீட்டு எஜமானனுக்கு அவர் மீது ஒரு "கண்" பலமுறை ஆயிஷாவுக்கு "அன்புத் தொல்லை"களைக் கொடுக்கத் தொடங்கினார்-

இதனைக் கண்டும் காணாத எஜமானியம்மாள் ஆயிஷாவுக்குத் தொல்லை கொடுப்பதை அதிகப்படுத்தினாள்- தினமும் அடியும் உதையும் தாராளமாக வழங்கப்பட்டன [illegible] தவித குற்றமும் செய்யாவிட்டாலும் ஆயிஷா தண்டிக்கப்பட்டாள்-

அதிகாலையில் நேர காலத்துடன் எழுந்து வீட்டு வேலைக

(50 அடி உயரம்) சுத்தம் செய்யுமபடி எஜமான் பணித்தான்-

மூன்றாம் மாடியில் தரையை சுத்தஞ் செய்து கொண்டிருந்த ஆயிஷா எஜமான் பின்னால் வந்ததைக் கவனிக்கவில்லை-

தனது இச்சைக்கு இணங்குமபடி எஜமான் வற்புறுத்தினான்- ஆனால் ஆயிஷா தனது பிடியில் உறுதியாக இருந்தாள்-

ஆத்திரமும கோபமும அடைந்த எஜமான் அந்த மூன்றாம் மாடியில் இருந்து ஆயிஷாவை கீழே தள்ளினான்- அவ்வளவுதான்! கீழே விழுந்தது மாத்திரமே அவருக்குத் தெரியும.

அதன் பிறகு என்ன நடந்தது என்பதை சுமார் நாலரை மாதங்களுக்குப் பின்னர் ரியாத் மத்திய ஆஸ்பத்திரியில் கண் விழித்தபோததான் ஆயிஷாவினால் உணர முடிந்தது-

அன்றைய தினம் வரை நினைவற்ற நிலையில் அதாவது சுய நினைவற்ற நிலையில் "கோமா" நிலையிலேயே ஆயிஷா இருந்திருக்கிறார்-

கண்விழித்து சுய உணர்வு பெற்ற பின்னரே இனிமேல் எந்தக் காலத்துக்குமே தன்னால் எழுந்து நடமாட முடியாது என்பதை ஆயிஷா உணர்ந்தார்-

இடுப்பு எலும்பு முறிந்து இரு கால்களுக்கும் சக்தி இல்லாமல் போய் விட்டது-

மூக்கு எலும்பு உடைந்து



வற்ற நிலையிலிருந்து தற்சமயம இடுப்புக்குக் கீழே செயலற்ற நிலையில் உருக்குலைந்த நிலையில் காணப்படும ஆயிஷாவின் தோற்றத்தை இரண்டாவது படத்தில் காணலாம,

(ம)

அழகிய முகம் சின்னாபின்னமாய் விட்டது- பற்கள் அனைத்துமே கொட்டி விட்டன-

ஆஸ்பத்திரியில் அவர் சுய உணர்வின்றி இருந்த காலத்தில் ஒருநாள் இரவு நேரத்தில் யாரோ இருவர் வந்து ஏதோ பத்திரத்தில் அவரது பெருவிரல் அடையாளத்தை பதித்து விட்டு சென்றதாக பக்கத்து கட்டிலில் இருந்த பெண்மணி கூறினார்-

"தற்கொலை செய்து கொள்வதற்காக மாடியிலிருந்து நானே குதித்தேன்" என்று அந்தக் குறிப்பில் எழுதப்பட்டிருந்ததாம்!

ஆயிஷாவுக்கு உணர்வு வந்த பின் சில நாட்கள் ஆஸ்பத்திரியில் வைத்திருந்து விட்டு அவரது உடல் முழுவதும் "பண்டேஜ்" கட்டி விமானத்தில் ஏற்றி இலங்கைக்கு அனுப்பி வைத்திருக்கிறார்கள்-

ஆயிஷாவின் கணவன் ஜனாப் ஏ ஜே எம் லாஹிர் (35) கவலை ததும்பக் கூறியதாவது-

மனைவி கடந்த ஜூன் மாதம் சவூதி அரேபியா சென்ற பின் எனக்கு எதவிதமான கடிதமோ பணமோ வரவில்லை- இது சம்பந்தமாக நான் ஏஜன்சியிடம் 13 முறை சென்று விசாரித்தேன்- அவர்களும் எதுவித தகவல்களும் கிடைக்கவில்லை என கையை விரித்து விட்டனர்-

நவம்பர் மாதம் எனக்கு தந்தியொன்று வந்தது- மனைவி வருகின்றார் என்ற ஆவலில் 29—11—1989 ஆம் திகதியன்று கட்டுநாயக்கா விமான நிலையத்திற்கு சென்றேன்-

குறிப்பிட்ட நேரத்தில் விமானமும் வந்து சேர்ந்தது- அதிலிருந்து பிரயாணிகளும் வெளியேறிக் கொண்டிருந்தனர்- என் மனைவியைத் தேடினேன்- அவரைக் காணவில்லை-

ஒருவேளை அவர் வரவில்லையோ என நினைத்து நான் வீட்டுக்குத் திரும்ப நினைத்த போது உடல் முழுவதும் வெள்ளை பண்டேஜ் துணியால் சுற்றப்பட்ட உருவமொன்று முச்சக்கர வண்டியில் அமர்ந்திருந்தவாறு கைகளால் சைகை காட்டி என்னை அழைத்தது-

திடுக்குற்ற நான் அதன் அருகில் சென்று பார்த்த போது எனக்கு தலையே சுற்றியது-

"நான்தான் உங்கள் மனைவி" என்றுஅவர் கைகளால் சைகை செய்தார்- அவ்வளவுதான் எனக்கு மயக்கம் ஏற்பட்டு அவ்விடத்திலேயே வீழ்ந்து விட்டேன்- பின்பு அயலவரின் உதவியுடன் வீடு வந்து சேர்ந்தோம்-

இதுவரை மனைவியின் வைத்திய செலவுக்காக சுமார் 50 ஆயிரம் ரூபா வரை செலவு செய்து விட்டோம்- எதுவித பிரயோசனமும் இல்லை- படுத்த படுக்கையாகவே கிடக்கிறார்-

மலசலகூடத்திற்கு அவரை நானே தூக்கிக் கொண்டு செல்கிறேன்-

இவரால் கட்டப்பட்ட புது வீட்டை அடகு வைத்தே வைத்திய செலவு செய்தேன்- இதற்கு மேல் செலவு செய்ய என்னிடம் எதுவுமே கிடையாது-

பொது நிறுவனங்களோ அரசோ எங்களது அவல நிலையைக் கருத்திற்கொண்டு உதவ வேண்டும்-

— இவ்வாறு கண்ணீர் மல்க வேண்டினார் அந்த அப்பாவிக் கணவர்!]

[ம-241]

## ஆடம்பர திருமணங்கள் எந்நாளும் ஓய்வதில்லை

இந்தியாவின் மத்தியப் பிரதேச மாநிலம சாகர் மாவட்ட கலெக்டர் மகளுக்கு திருமணம்! இத் திருமணத்தில் விருந்து சாப்பிட வந்தவர்கள் 25 ஆயிரம பேருக்கு மேலே!] அமைச்சர்கள் பலர் உட்பட பல பிரமுகர்கள் பஙகுபற்றினர்.

திருமணத்தில் ரூ 50 லட்சம வரை "மொய்" வருமானம், பரிசுப் பொருட்களில் 20 கலர் டி வி செட்டுகள், 15 ரெப்ரிஜிரேட்டர், வி சி ஆர் மற்றும அழகு சாதனைப் பொருட்கள் ஏராளமாக வந்து குவிந்திருந்தன.

ஏதோ வெள்ளைக்காரர் காலத்தில் தான் இப்படி ராஜா வீட்டுத் திருமணஙகள் நடக்கும என்பார்கள், இப்படி ஒரு பெரிய ஆடம்பர திருமணம இப்போது யாராவது கேள்விப்பட்டிருக்க முடியுமா?

(ம-10)

## பிறந்த நாள் வாழ்த்து



பாத்திமா நிப்லா

கம்பளை, இல்லவத்துறை இல-12/4ல் வசிக்கும், நவாஸ்—நிஸாரா தம்பதிகளின் செல்வப் புதல்வி "பாத்திமா நிப்லா தனது முதலாவது பிறந்த தினத்தை நேற்று (20-01-1990) உம்மம்மா வீட்டில் கொண்டாடினர்-

இவரை ரியாதில் இருக்கும வாப்பா மற்றும் உம்மா, உம்மமா, ஜித்தா பவீல் பூமாமா, அஸீரா பூமாமி, இஜாஸ் மாமா, நிஸாயா சாச்சி, ஆண்டியாகடவத்தை அப்பா, வாப்பம்மா, நிஸாம் பூவாப்பா, பௌஸியா பூம்மா, பஸ்லி மாமா, நூர் ஜஹான் மாமி, இஸ்மாயில் சாச்சா, ஹஜ்ஜுன்னிசா சாச்சி, ஷர்மிளா மாமி, பஹ்ரேன் நிஸ்தார் அஙகுள், ரியாத் இர்பான் அஙகுள், நிஷாமா மாமி, பிராஸ் மச்சான் மற்றும் அப்பாமார், வாப்பம்மாமார், உம்மமாமார், மாமாமார், மாமிமார், சாச்சிமார் ஆகியோர் அல்லாஹ்வின் அருளால் மார்க்கக் கல்வி கற்று நோய், நொடியின்றி நாடு போற்றும் உத்தமியாய் பல்லாண்டு வாழ்க என்று வாழ்த்தியுள்ளார்கள்-

வி இ 029447

## பிறந்த நாள் வாழ்த்து



தூர்ரதுல் முனீரா

வத்தளை ஹுனுப்பிட்டி 114 சி பாதிலியாதுடுவ வீதியைச் சேர்ந்த நிஸாம்தீன்—அம்ரா தம்பதிகளின் செல்வப் புதல்வி தூர்ரதுல் முனீரா தனது முதலாவது பிறந்த தினத்தை 19-1-90 திகதி நாவலப்பிட்டி உம்மும்மா வீட்டில் கொண்டாடினர்-

இவரை உமமா, வாப்பா, அப்பா, வாப்பும்மா, கியாம் சாச்சா, உம்முமமா, மருதானையைச் சேர்ந்த ஹாஜி அப்பா, மாமிமார், மாமாமார், பெரியம்மாமார், பெரியப்பாமார், குவைட்டில் இருக்கும் ஹாஜி மாமா, மைத்துனிகள், மைத்துனர்கள், நானுமார்கள், தாத்தாமார்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருளால் பாத்திமா நாயகியின் அடிச்சுவட்டைப் பின்பற்றி வாழ்வில் வளமும், சீரும், சிறப்பும் பெற்று வாழ வாழ்த்தியுள்ளார்கள்-

வி இ 029903

## கீழ்ப் படிந்து நடப்பதற்கு யாரும் இல்லையே

ஒவ்வொருவனும கட்டளையிடவே விரும்புகின்றான், கீழ்படிந்து நடப்பதற்கு ஒருவரும தயாராக இல்லை. பண்டைக் காலத்தில் நிலவி வந்த வியப்பிற்குரிய பிரம்மசரிய முறை இந் நாளில் மறைந்து போனததான் இதற்குக் காரணம, முதலில் கீழ்ப்படிவதற்குக் கற்றுக் கொள். பிறகு கட்டளையிடும பதவி உனக்குத் தானாக வந்து சேரும, எப்போதும முதலில் வேலைக்காரனாக இருக்கக் கற்றுக் கொள்.

அதன் பின்பு எஜமானனாகும தகுதி உனக்கு தானாகவே வந்து சேரும!

— விவேகானந்தரின் அறிவுரை

(ம-10)

# 57 வருடங்களுக்கு முன்னர்

## அழகு நடிகை ஏற்படுத்திய அதிர்ச்சி

ஹொலிவூட்டுக்கு அடி எடுத்து வைத்த நடிகைகள் ஏராளம் அதில் புகழ்க்கொடி நாட்டியவர்கள் வெகு சிலர் — அவர்களில் உலக மக்களால் அதிகம விமர்சனம செய்யப்பட்ட முதல் நிர்வாணப் புகழ் நடிகை ஹெட்விக் மரியா கெய்சர்!, பின்னாளில் "ஈடிலாமர்" என்று அழைக்கப்பட்டார்-

படவுலகில் 1930இல் அடியெடுத்து வைத்தார்- அதுவும ஆஸ்திரியா - ஜெர்மன் கூட்டு தயாரிப்பு படஙகளில் கதை உதவியாசிரியராகவும, சிறு வேடஙகளை தாஙகிய நடிகையாகவும அறிமுகமானார்-

1933 இல் இவர் உலக புகழ் பெற்றார்- எப்படி? அதுவும தான் நடித்த படஙகளில் நடிப்பு மூலம் அல்லாமல் செக்கஸ்லோவாக்கியா" படமான "எக்ஸ்டாஸ்" படத்தில் 10 நிமிடஙகள் முழு நிர்வாணமாக நடித்ததன் மூலமாக! இதனால் உலகமெஙகும மிகுந்த பரபரப்பான நடிகையாக இவர் பேசப்பட்டார்.



மரியா கெய்சர்

அந்த நேரத்தில் ஆஸ்திரியாவின் மிகப்பெரிய யுத்த தளவாடம (போர் கருவிகள்) விற்பனை செய்யும பணக்காரரான "பிரிட்ஸ் மண்டலை" மணந்தார்- உடனடியாக பிரிட்ஸ் தன் மனைவி நடித்த அனைத்து பிலிம் பிரிண்டுகளை பெரும விலை கொடுத்து வாஙகினார்- அதே கால கட்டத்தில் லாமர் பிரிட்ஸை விவாகரத்து செய்தார்-

அதன் பிறகு திரும்பவும லாமரின் நிர்வாண படம உலகமெஙகும் திரையிடப்பட்டது- மிகுந்த பரபரப்பையும, ஆவலையும தாண்டியது- ஏனெனில் ஆரமப காலத்தில் இந்தளவுக்கு ஆபாசமாக யாரும நடித்ததில்லை-

அதே பரபரப்புடன் லாமர் 1958 இல் ஹொலிவூட்டுக்கு வந்தார். ஹொலிவூட்டின் முதல் தயாரிப்பான "அல்ஜீரியர்ஸ்" படத்தில் நடித்தார்- அப்போது இவரை ஹொலிவூட்டின் தலைசிறந்த அழகியாக ஏற்றுக் கொண்டனர்- அத்தோடு அழகு தேவதையாக கூட கருதப்பட்டார்- எனினும நடிப்பால் அந்தளவுக்கு சிறந்து விளஙகவில்லை

கதாசிரியர் "ஜீனி மார்கி"யையும மூன்றாவதாக நடிகர் "ஜான் லோடரை"யும மணந்து சிறிது காலம வாழ்ந்து பின் விவாகரத்து செய்தார்- மேலும மூன்று முறை மணம்புரிந்து விவாகரத்தும செய்துவிட்டார்- (மொத்தம் ஆறு தடவை)

இவரிடம் ஒரு நிருபர் "நீஙகள் முதன்முதலாக முழு நிர்வாணமாக நடித்தது குறித்து வெட்கப்படவில்லையா?" என்றார்-

லாமரும அவரை பார்த்து "என்னுடைய இளமையான உடமபை உலக மக்கள் கண்டு களித்தனர்- அந்த பத்து நிமிடத்தில் நடித்ததற்கே நான் உலக புகழ்பெற்றேன்- அதனால்தான் இந்த கேள்வியை உஙகளால் கேட்க முடிந்தது- அத்தோடு எனது முதல் கணவர். பிரிட்ஸ் அந்த படத்தின் அனைத்து பிரிண்டுளையும ஏன் அதிக விலை கொடுத்து வாஙகினார்- என்னுடைய அற்புதமான உடலழகை தான் மட்டும் ரசிக்கத் தானே?" என்று கூறியதோடு "ஏன் நீஙகள் கூட அந்தப் படத்தைப் பார்த்திருப்பீர்களே?" என்றார்-

நிருபரும் அசடு வழிந்தார்-

(ம-10)

# அ. தி. மு. க. வை விட்டு ஹண்டே விலகியது எதற்காக?

அ தி மு கவை விட்டு ஹண்டே விலகியது ஏன்? என்பதற்கு எஸ் டி சோமசுந்தரம விளக்கும அளித்தார், "பதவிக்கு ஆசைப்பட்டு சீக்கிரமாக அற வடை செய்வதற்காக கட்சியை விட்டுப் போய்விட்டார்" என்று அவர் சொன்னார்-

ஹண்டே சொல்லும் குற்றச் சாட்டுகள் எதுவுமே உண்மை இல்லை- ஒரு கட்சித் தலைமை சமுதாய நலனைக் கருதித் தான் முடிவு எடுக்கும என்றைக்குமே சமுதாய நலனுக்கு விரோதமாக இந்தத் தலைமை (ஜெயலலிதா) எந்த முடிவையும எடுத்தது கிடையாது-

கேள்வி- அ தி மு கஎம் எல் ஏக்கள் 9 பேர் கட்சியை விட்டு விலக இருப்பதாக பேசப்படுகிறதே?

பதில்- அ தி மு கவை விட்டு யாரும் போக விருமபவில்லை-

பதவி கிடைக்கவில்லை என்பவர்கள் தான் கட்சியை விட்டு போய்க் கொண்டு இருக்கிறார்கள்-

கேள்வி- அ தி மு க முன்னணித் தலைவர்கள் பலரிடமும் அதிருப்தி நிலவுவதாக, ஹண்டே கருத்துத் தெரிவித்திருக்றாரே? அது உண்மையா?

பதில்- கட்சியில் யாருக்கும அதிருப்தி இல்லை- எதையாவது எதிர்பார்ப்பவர்களுக்கு கட்சியில் கசப்புணர்வு வருவது இயற்கை- தியாக உணர்வு உள்ளவர்களுக்கு கசப்புணர்வே வராது- பதவிக்கு வர வேண்டும என்கிறவர்களுக்குத்தான் அத்தகைய உணர்வுகள் வரும-

இவ்வாறு சோமசுந்தரம கூறினார்-

..."என்னைத் தாக்குவது போல ஜெயலலிதாவை எஸ் டி சோமசுந்தரம் தாக்குகிறார்" என்று ஹண்டே கூறினார்-

நான் அறவடைக்காக ஜனதா தளத்தில் சேர்ந்து இருப்பதாக எஸ் டி சோமசுந்தரம கூறி இருக்கிறார்- அறுவடை செய்து எனக்குப் பழக்கம இல்லை- இப்படி இருக்க என்னை குறைகூறும எஸ் டி சோமசுந்தரமே அறுவடை மன்னர் ஆவார்-

நான் தினமும மக்களை சந்தித்து தொண்டு செய்பவன்- எனவே நான் தேர்தலில் போட்டியிட டிக்கெட் கேட்பதில் தவறு இல்லை- எந்தத் தொகுதி வேண்டும் என்று கட்பது எனது உரிமை-

"திராவிட பாரம்பரியம பற்றி பேச ஹண்டேக்கு தகுதி இல்லை என்று இவர் என்னைப் பார்த்துக் கேட்கவே தகுதி இல்லாதவர்- என்னை கேள்வி கேட்கும இவர், துணிவு இருந்தால் ஜெயலலிதாவிடம இதே கேள்வியைக் கேட்க வேண்டும்- திராவிட இயக்கத்தில் இருக்க என்னைவிட ஜெயலலிதாவுக்கு தகுதி உண்டா? ஜெயலலிதாவை மனதில் வைத்துத்தான் இப்படி சொல்லி இருப்பார் என்று கருதுகிறேன்-

ஆசை இருக்கலாம பேராசை இருக்கக் கூடாது என்றும என்னைப் பார்த்து கூறி இருக்கிறார். பேராசை எனக்கா? ஜெயலலிதாவுக்கா? முதல் அமைச்சர் பதவிக்காக பேராசைப்பட்டு அ தி மு கவை உடைத்தார்- பிறகு நடந்த தேர்தலில் முதல் அமைச்சர் ஆகலாம் என்ற பேராசை நிராசை ஆனதால் ஜெயலலிதா



ஹண்டே

ராஜினாமா கடிதம் எழுதினார்-

இப்போது நடந்த பாராளு மன்றத் தேர்தலில் ராஜீவ் காந்தி மீண்டும் ஆட்சிக்கு வந்தால் தி மு க ஆட்சி கலைக்கப்படும- பின்னர் நடக்கும் தேர்தலில் இ காங்கிரசுடன் சேர்ந்து வெற்றி பெற்று முதல் அமைச்சர் ஆகலாம என்று பேராசைப்பட்டார்-

அதுவும நிறைவேறாததால் மீண்டும் விரக்தி அடைந்து ராஜினாமாச் செய்வதாக அறிவித்தார்- எனவே எஸ் டி சோமசுந்தரம ஜெயலலிதாவைத்தான் மறைமுகமாகத் தாக்கி இருக்கிறார்-

"ஜெயலலிதாவைப் பார்த்தால் கூப்பிடத் தோன்றுகிறது என்றவர் காளிமுத்து. பின்பு அவரே வந்து ஜெயலலிதா காலில் விழுந்தார். கூலிக்கு பாண்டு வாத்தியம வாசிப்பவரை போன்றவர் காளிமுத்து. அவர் யோக்யதை இப்படி இருக்க என்னைப் பற்றி விமர்சிக்க அவருக்கு யோக்யதை ஏது?" என்று ஹண்டே கேட்டார்.

காளிமுத்துவின் யோக்யதையைப் பற்றி எனக்கு தெரியாதா. ஜானகியைப் பார்த்தால் கை எடுத்து கும்பிடத் தோன்றுகிறது, ஜெயலலிதாவைப் பார்த்தால் கூப்பிடத் தோன்றுகிறது கட்டிலைத் தேடச் சொல்கிறது என்று சொன்னவர்தானே இந்த காளிமுத்து.

ஜெயலலிதாவுக்கு ஆதரவு இருக்கிறது, அவர் பக்கம ஓட்டு இருக்கிறது என்ற ஒரே காரணத்திற்காகத்தானே காளிமுத்து மீண்டும ஜெயலலிதாவிடமே ஓடி வந்தார்.

ஜெயலலிதாவின் கையில் சால்வை கொடுத்து அவரது காலில் குனிந்து விழுந்தவர் இவர். என் கண்ணால் பார்த்த காட்சி இது. இவரா என்னை பார்த்துக் கிண்டல் செய்வது.

கலைஞருக்கு கடிதம எழுதினார். தி மு க வில் சேர்த்துக் கொள்ளுங்கள் என்று கேட்டார், கலைஞர் இவரைச் சேர்த்துக் கொள்ளவில்லை. இதனால் போக வேறு இடம இல்லாமல் மீண்டும ஜெயலலிதா காலிலேயே வந்து விழுந்தார்.

— இவ்வாறு ஹண்டே கூறினார்,

"நான் ஜெயலலிதாவை தாக்கிப் பேசினேன், ஜெயலலிதா ஏற்றுக் கொண்டார்- அதைப் பற்றி நாங்கள் இருவரும்தான் கவலைப்பட வேண்டும், ஹண்டே ஏன் கவலைப்பட வேண்டும? என்று காளிமுத்து கேள்வி விடுத்தார்-

ஹண்டே போனதால் அ தி மு க பாதிக்காது- குருவி குடித்து சமுத்திரம வற்றிப் போகாது-

ஜெயலலிதாவை நான் முன்னர் விமர்சனம் செய்தது உண்மை- அவர்கள் பதில் சொன்னதும உண்மை- ஆனால் புரட்சித் தலைவரின் புகழைக் காக்க அ தி மு க என்கிற கூடாரத்திலே ஒன்றுபட்டு பணியாற்றினால்தான் அந்தத் தலைவனின் திருப் பெயரைக் காக்க முடியும என்கிற காரணத்தினால்தான் நாம் ஒன்றாகச் சேர்ந்து இருக்கிறோம- பேசியது காளிமுத்து அதை ஏற்றுக் கொண்டவர் ஜெயலலிதா- கவலைப்பட்டால் நாங்கள் இரண்டு பேரும கவலைப்பட வேண்டுமே தவிர, ஹண்டேக்கு என்ன கவலை? இவ்வாறு கேட்டார் அவர்-

(ம-10)


## அறிவித்தல்

மாவுனல்லே பிரதான வீதி 232 ம் இலக்கத்தில் இயங்கி வந்த ஏ எஸ் எம அப்பாஸ் அன் கம்பனியை அதன் பழைய நிர்வாகத்தினர் 12-1-90 ம் திகதி முதல் மீண்டும கையேற்று இருப்பதால் 12-1-90 ம் திகதி வரை முன்னைய நிர்வாகத்தினர் மேற்கொண்ட எந்த வகையான கொடுக்கல் வாங்கல்களுக்கும நாம் எவ்வகையிலும பொறுப்பாளிகள் அல்லர் என்பதை இத்தால் அறியத் தருகிறோம்-

இப்படிக்கு

ஏ எஸ் எம் அப்பாஸ் அன் கம்பனி

அல்-ஹாஜ் எம் ஏ எஸ் காதர்

உரிமையாளர்-


# ஜெயலலிதாவின் வனவாசம்

"தேர்தலில் வெற்றி பெற்ற பின்னும கொடைக்கானலுக்கு வனவாசம் போவது ஏன்?" என்று ஜெயலிதாவுக்கு அமைச்சர் நாஞ்சில் மனோகரன் கேள்விக் கணை விடுத்து உள்ளார்-



தேர்தலில் தோற்றதும துவண்டோமா? இனி இக் கட்சியில் இருந்தென்ன பயன் என்று முடங்கி விட்டோமா? தோல்வியையும் வெற்றியையும் சமமாகக் கருதுபவன்தான் தி மு க காரன் ஆனால் வெற்றி பெற்றவர்கள் காரணம் சொல்லாமல் கானகம


## மௌலவி மௌலவியா முஅஸ்ஸின்கள் தேவை

எமது பரிபாலனத்தின் கீழுள்ள பள்ளி வாசலுக்கு பேஷ் இமாமாகவும் குர்ஆன் மத்ரஸாக்களில் முஅல்லிமாக கடமை புரிய மௌலவிகளும் குர்ஆன் மத்ரஸாக்களில் முஅல்லிமாத்தாகக் கடமையாற்ற கல்விப் பொதுத் தராதரப் பரீட்சையில் சித்தியடைந்த (பெண்) மௌலவியாக்களும் தேவை. அனுபவமுள்ள முஅஸ்ஸின்களும் தேவை நல்ல சம்பளமும உணவும தங்க இடவசதியும் அளிக்கப்படும். கல்வித் தராதரங்கள், அனுபவம், வயது குறித்து 31-01-1990 க்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

Chairman,

Chinafort Mosque Society

11, NaleemHajiar Mawatha, Beruwala




20-01-89 தினம் அகால மரணமடைந்த (இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்) மர்ஹூம் ஜனாப் கோயா அப்பாஸ் அவர்களுக்கான ஓராண்டு நினைவாஞ்சலி

## நினைவாஞ்சலி

பிரியமானவனே!
பிரியாத விடைபெற்று
பாருலகில் ஓராண்டு
பறந்து விட்டதே
பதறுகின்றதே எம் மனம்
மறக்குதில்லை உம் நினைவு
மங்குதில்லை உம் நிழல்கள்!

அன்புருவே!
வீர மரணமடைந்து
விண்ணுலகெய்தி விட்டாய்
மண்ணுலகில் உன்னழகு உரு
வாழுதடா எம்முள்ளத்தில்!

இன்னுயிரே!
ஈன்றெடுத்த அன்னை
இல்லறத் துணைவி
ஆசை மக்கள் நால்வர்

ராஜினாமா கடிதம் எழுதினார்-
இப்போது நடந்த பாராளு மன்றத் தேர்தலில் ராஜீவ் காந்தி மீண்டும் ஆட்சிக்கு வந்தால் தி மு க ஆட்சி கலைக்கப்படும-

இருக்கிறது, அவர் பக்கம ஓட்டு இருக்கிறது என்ற ஒரே காரணத் திற்காகத்தானே காளிமுத்து மீண்டும ஜெயலலிதாவிடமே ஓடி வந்தார்.

நாஙகள் இரண்டு பேரும கவ லைப்பட வேண்டுமே தவிர, ஹண்டேக்கு என்ன கவலை? இவ்வாறு கேட்டார் அவர்-

(ம-10)

## அறிவித்தல்

மாவனல்லை பிரதான வீதி 232 ம் இலக்கத்தில் இயங்கி வந்த ஏ எஸ் எம அப்பாஸ் அன் கம்பனியை அதன் பழைய நிர்வாகத்தினர் 12-1-90 ம் திகதி முதல் மீண்டும கையேற்ற இருப்பதால் 12-1-90 ம் திகதி வரை முன்னைய நிர்வாகத்தி னர் மேற்கொண்ட எந்த வகையான தொடுக்கல் வாஙகல்க ளுக்கும நாம் எவ்வகையிலும பொறுப்பாளிகள் அல்லர் என் பதை இத்தால் அறியத் தருகிறோம்-

இப்படிக்கு
ஏ எஸ் எம் அப்பாஸ் அன் கம்பனி
அல்-ஹாஜ் எம் ஏ எஸ் காதர்,
உரிமையாளர்-

# ஜெயலலிதாவின் வனவாசம்

"தேர்தலில் வெற்றி பெற்ற பின்னும கொடைக்கானலுக்கு வனவாசம் போவது ஏன்?" என்ற ஜெயலிதாவுக்கு அமைச்சர் நாஞ்சில் மனோகரன் கேள்விக் கணை விடுத்து உள்ளார்-

தேர்தலில் தோற்றதும துவண் டோமா? இனி இக் கட்சியில் இருந்தென்ன பயன் என்று முடங்கி விட்டோமா? தோல்வியை யும் வெற்றியையும் சமமாகக் கருதுபவன்தான் தி மு க காரன் ஆனால் வெற்றி பெற்றவர்கள் காரணம் சொல்லாமல் கானகம செல்லத் தயாராகிவிட்டார்கள்-

இவ்வாறு மனோகரன் கூறி னார்-

அ தி மு க பொதுச் செயலா ளர் ஜெயலலிதா "திடீர்" என்று பெஙகளூர் சென்றார்- அஙகு ரகசிய இடத்தில் தஙகி அவர் ஓய்வு எடுத்தார்- சென்னை போயஸ் கார்டன் வீட்டுக்குச் சென்ற தலைவர்கள், ஏமாற்றத் துடன் திருமபிச் சென்றார்கள்-

கடந்த சில ஆண்டுகளாக ஜெயலலிதா முடக்குவாதம், மூட்டுவலி போன்றவற்றால் உடல் நலம குன்றி உள்ளார்- அடிக்கடி அதற்காக வைத்தியச் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகி றது- இயற்கை வைத்தியமும செய்யப்படுகிறது-

ஆண்டுக்கு ஒரு முறை ஜெய லலிதா பெஙகளூர் சென்று இயற்கை மூலிகை எண்ணெய் வைத்தியச் சிகிச்சை பெறுவது வழக்கம- ஏறத்தாழ ஒரு மாத காலம் இவ்வாறு தங்கியிருந்த சிகிச்சை பெறுவார்-

இதற்காக அவருக்கு தனி "காட்டேஜ்" (குடில்) வசதி செய்யப்பட்டு அஙகு ரகசியமாக சிகிச்சை அளிக்கப்படும- அவர் தஙகி இருக்கும இடம் யாருக் கும தெரிவிக்கப்படுவது இல்லை- அவரைப் பார்க்க யாரும அனு மதிக்கப்படுவதுமில்லை-



ஜெயலலிதா

சமீபத்தில் உடல் நலக் கோளாறு காரணமாக அரசிய லில் இருந்தும பொது வாழ்வில் இருந்தும விலகப் போவதாகவும முழு ஓய்வு எடுக்கப் போவதாக வும "திடீர்" அறிவிப்பு ஒன்றை விடுத்த ஜெயலலிதா 23 மணி நேரத்தில் தன் விலகல் அறிவிப்பு நாடகத்தைத் திருமபப் பெற்றுக் கொண்டார்-

அதன் பின் கொடைக்கானலில் ஒரு மாதம தங்கி ஜெயலலிதா ஓய்வு எடுக்கப் போவதாக அ தி மு க வட்டாரத் தகவல் ஒன்று கூறியது- அவர் தஙகி இருப்ப தற்கு வசதியான பஙகளாவை அ தி மு க தலைவர்கள் நேரில் சென்று பார்த்து ஏற்பாடு செய்து விட்டதாகவு கூறப்பட்டது

ஆனால் ஜெயலலிதா "திடீர்" என்று பெஙகளூர் புறப்பட்டுப் போய்விட்டார்-

(ம-10)

## சாயும் கோபுரம்

உலக அதிசயங்களில் ஒன்றா கக் கருதப்படும் பீஸா நகரத்து சாய்ந்த கோபுரம மீது எவரும ஏற முடியாதவாறு மூடப்பட்டுள் ளது! இக் கோபுரம் விழுந்து விடக் கூடிய அபாயம் இருப்ப தாக தெரிய வந்ததை அடுத்தே 800 ஆண்டுகளாக மூடப்படாத இக் கோபுரம் முதல் தடவையாக மூடப்பட்டுள்ளது!

பீஸா நகர அதிகாரிகளின் எதிர்ப்பையும் பொருட்படுத்தா மல் ரோம் நிர்வாகம் இம மூடு விழாவை நடத்தி முடித்தது!

இனி எப்போது இக் கோபுரம் பொது மக்களுக்காகத் திறக்கப் படும் என்பது பின்னர் அறிவிக்கப் படுமாம்! அதுவரை பீஸா நகரம் செல்பவர்கள் தூரத்தில் இருந்து கோபுரத்தைக் கண்ணாரக் கண்டு விட்டு திரும்பி வர வேண் டியதுதான்! (ம-032)


## இலங்கை துறைமுக அதிகார சபை

# டெண்டர் அறிவித்தல்

துறைமுக பண்டக சாலைகளிலும இறங்குதுறைகளிலும வைக்கப்பட்டிருக்கும அகற்றி எடுத்துச் செல்லப்படாத பொருட்கள்

### விற்பனை

கொழும்பு துறைமுக பண்டகசாலைகளிலும இறங்குதுறைகளிலும அகற்றி எடுத்துச் செல்லப் படாத நிலையில் உள்ள பொருட்களை கொள்வனவு செய்து அகற்றிச் செல்லும பொருட்டு முத் திரையிடப்பட்ட டெண்டர்கள் கோரப்படுகின்றன. பொருட்களின் பட்டியல் பின்வருமாறு-

01 மிட்சுபிஷி பஜிரோ வாகனம, டயர்களும், டியூப்களும், கண்ணாடி ஷீட்டுகள், மரப் பலகைகள், குவளைகள், நியூஸ் பிரின்ட் கிராப்ட் காகிதம, பொக்ஸ் போர்ட், அஙகில் அயென், பிளெட் அயன், ரவுண்ட் பார்ஸ், டிபோம பார்கள், ஜமபர் ஸ்டீல், உருக்குத் தகடுகள், ஜி ஐ வயர், நெயில் வயர், லிப்டுக்கான பாகஙகள், கேபில்ஸ், பீடி இலை, பிளாஸ்டிக் பொருட்கள், பொலிதீன் இழை, தியணைக்கும சாதனம், மெதி விதைகள், பாடிங, மோட்டார் உதிரிப்பாகங் கள், சைக்கிள் பாகஙகள் கைவினை உபகரணஙகள், வானொலி பாகஙகள், குளியலறை உபகர ணஙகள், இயந்திர உதிரிப்பாகஙகள், மின்குமப உதிரிப்பாகஙகள், மின்சார பொருட்கள், கம் பளி நூல், மற்றும ஏனைய பொதுவான வர்த்தகப் பொருட்களும-

டெண்டர்கள் 90-01-26 அன்று 1000 மணித்தியாலஙகளுக்கு மேற்படாத நேரத்துக் குள் கிடைக்கக் கூடியதாக முகாமையாளர் இலஙகை துறைமுக அதிகார சபை, கொமிசாரியட் வீதி, கொழும்பு-1 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்- இக்கால எல்லை முடிவுற்றதும டெண்டர்கள் வர்த்தக முகாமையாளர் காரியாலயத்தில் திறக்கப்படும-

90-01-25 ஆம திகதி 1400 மணித்தியாலம வரை இலஙகை துறைமுக அதிகார சபையின் வர்த்தக முகாமையாளர் காரியாலயத்தில் டெண்டர் தொடர்பான ஆவணஙகளை பெற்றுக் கொள்ள முடியும- இதன் பொருட்டு திருப்பிப் பெறக் கூடிய 5,000/- ரூபாவும திருப்பி வழங கப்படாத 250/- ரூபாவும செலுத்தப்பட வேண்டும-

விற்பனைக்கு விடப்படவுள்ள பொருட்களை அவை வைக்கப்பட்டுள்ள பண்டகசாலைகளிலும இறஙகுதுறைகளிலும 90-01-24 க்கும் 90-01-25 க்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் வேலை நேரத்தில் பார்வையிடலாம-

டெண்டர்களைச் சமர்ப்பிப்போர் டெண்டர் ஆவணஙகளில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்த னைகளுக்கு உட்பட இணக்கம தெரிவிக்க வேண்டும-

வர்த்தக முகாமையாளர்
இலஙகை துறைமுக அதிகார சபை

90-01-16
வர்த்தக பிரிவு,
இலஙகை துறைமுக அதிகார சபை,
கொமிசாரியட் வீதி,
கொழும்பு-1.


## நினைவாஞ்சலி

பிரியமானவனே!
பிரியாத விடைபெற்று
பாருலகில் ஓராண்டு
பறந்து விட்டதே
பதறுகின்றதே எம் மனம்
மறக்குதில்லை உம் நினைவு
மங்குவில்லை உம் நிழல்கள்!

அன்புருவே!
வீர மரணமடைந்து
விண்ணுலகெய்தி விட்டாய்
மண்ணுலகில் உன்னழகு உரு
வாழுதடா எம்முள்ளத்தில்!

இன்னுயிரே!
ஈன்றெடுத்த அன்னை
இல்லறத் துணைவி
ஆசை மக்கள் நால்வர்
அருமை உடன் பிறப்புக்கள்
சிறகொடிந்த பறவை போல்
சிந்தை கலங்கச் செய்து விட்டாயே
சகம் உள்ளளவும்
சலிக்குமா உன் நினைவு?

அழகனே!
மருமக்கள் உள்ளங்களில்
மங்கா இடம் பெற்றவனே
மாய்கிறோம் ஒவ்வோர் நாளும்
மனம் உள்ளளவும்
உன் நினைவு மணக்கும்!

இளையவனே!
சமூக சேவகனும்
சமூகத்துக்குழைப்பவனும்
உண்மை ஊழியனும்
ஊருக்குழைப்பவனும்
வாழ்ந்தாயப்பா
ஊழூழி காலம்
உலகுள்ளளவும்
உன்னை நினைந்துருகுகிறோம்!

இறுதியாய்,
இறைவன் உமக்கு நற்பதவி வழங்க
இறைஞ்சுகின்றோம்
யா அல்லாஹ்!
சுவனபதி வாயிலினில்
சோபனம் முழங்கட்டும் — உமக்காக
ஜன்னத்துல் பிர்தௌஸ் சுவர்க்கம்
ஜகஜ்ஜோதியாய் மிளிரட்டும் — உமக்காக
ஏக்கத்துடன் கேட்கும் எம் துஆக்களை
ஏற்றுக் கொள் வல்லவனே!
ஆமீன், ஆமீன், ஆமீன்
யாரப்பல் ஆலமீன்!

பிரிவுத் துயரால் வாடும்
உற்றார், உறவினர், குடும்பத்தினர்

125, பிரதான வீதி,
தெக்கிருவ-

## மணிக் கவிதை

### இ... காதல்

கன்னியே உன் இரு கண்களிலும்
ஒரே நேரத்திலிரு உருவங்களா
அதனால் தான் என்னையும்
அவனையும் காதலிக்கிறாயா?

★ சுந்தரன்

### சுயரூபம்!

உன் அழகினைக் கண்டு
நான் விரும்பியதும் உண்மை!
உன் சுயரூபம் தெரிந்ததும்
நான் வெறுத்ததும் உண்மை!

★ பர்ஸானா ஹனீபா

### நித்திரை!

எந்தனது கனவுகளில்
உந்தனது காட்சிகளே!
நித்திரையை விரும்புகிறேன்
நித்தம் உனைக் காண்பதற்கே!

★ சு சரவணன்

### இதய ஏக்கம்

உன் பார்வையால் நான் தாக்கும்
என் மனதில் நீ தேக்கம்
என் இதயத்தில் உன் ஏக்கம்
உன் பதிலில் என் உளம் பூக்கும்
தந்திடாதே, ஏமாற்றம்......

★ எஸ் ருவைஸா

### இணைவோம்!

அன்புச் சின்னம் தாஜ்மஹால்
அன்பு கொள்கிறேன் உன்பால்!
இதை ஏற்க வேண்டும் மனதால்
இணைவோம் இதயங்களால்!

★ பௌசுனா றசாக்

### நீங்காத நினைவு

வரைவீர்கள் மடலென்று
வனிதை நான் தினமும்
வழி பார்த்துக் காத்திருந்தேன்!
மன்னவனே... உன் இதயம்
என் நினைவை மறந்தாலும்
என் நெஞ்சம் என்றென்றும்
உன் நாமம் மறக்காது!

★ ஹஸ்ஸானா நயீம

### திருவருள் தா!

தினம் தினம் கவிதை பாடி
திருப்புகழ் பரப்பிடவே
திருவருள் அளித்திடுவாய்
திருமலை வாழ் விக்னேஸ்வரா!


★ கோவி ஜெயராமன்

### காதலி—மனைவி

# போதும் என்ற மனம்

முன்னொரு காலத்தில் ரலோஸ் எனும தோட்டத்தில் சுப்பன் எனும ஓர் ஏழை விவசாயி வாழ்ந்து வந்தான். அவன் எதிலுமே திருப்தி இல்லாதவன்.

அதே ஊரில் உள்ள சிவம எனும ஒரு பணக்காரர் இடத்தில் வயல் வேலை செய்து வந்தான். ஒரு நாள் சிவத்தின் வயலுக்கு இரவுக் காவலுக்குச் சென்ற சுப்பன் தன் வறுமையான வாழ்வுக்கும சிவத்தின் வளமான




வாழ்வுக்கும உள்ள வித்தியாசத்தை எண்ணி உள்ளம பொருமிக் கொண்டிருந்தான்.

அப்பொழுது அவன் "கடவுளே உனக்கு ஏன் இந்த வஞ்சகம்? என்னை ஏழையாகவும சிவத்தை பணக்காரராகவும ஏன் படைத்தாய்? நீ சக்தி உள்ள தெய்வமாக இருந்தால் என்னையும சிவத்தைப் போல் பணக்காரன் ஆக்கு" என்று வாய்விட்டுப் புலமபினான் .

அச்சமயம அவன் எதிரே, ஜோதி மயமாக ஒரு பெண் தோன்றினாள். அவளைப் பார்த்

தான்- அவனுக்கு ஒன்றும புரியாமல் போகவே ஒரு லட்சாதிபதியை அழைத்து ஆலோசனை கேட்டான்-

அதற்கு அந்த லட்சாதிபதி "சுப்பையா லட்சாதிபதி என்பது அப்பளம் பொரிக்கிற மாதிரி சுலமானது அல்ல அதற்கு நிறையப் பாடுபட வேண்டும- புத்திசாலித்தனமும வேண்டும்- ரத்தின வியாபாரம செய்தால் அதுவும அதிர்ஷ்டம இருந்தால் நீ லட்சாதிபதி ஆகலாம என்றான்-

எனக்குத்தான் அதிர்ஷ்டம இருக்கிறதே! அதிஷ்டம் உள்ள

இப்பொழுது பஞ்சவர்ணமும எப்படியோ பெரிய பணக்காரனாகி கப்பல் வியாபாரம செய்த வருகிறான்- சுப்பையா அவனிடம "கோடீஸ்வரன் ஆவது எப்படி? என்று கேட்டான்

சுப்பா ஒரு காலத்தில் சிவத்திடம வேலைக்காரனாக இருந்த நீ அதிஷ்டவசத்தால் லட்சாதிபதியாகி "சுப்பன்" என்ற பெயரை விட்டாய்- "சுப்பையா" என்று நாகரிகமாக மாற்றிக் கொண்டாய்-

இப்படிப்பட்ட அறிவாளியான நீ கோடீஸ்வரன் ஆவதில் ஒரு

ருப்தி அடைந்த சுப்பையா தன்னிடம உள்ள ரூபாய்களை எல்லாம போட்டு நிலம வாங்கினான்-

வானொலி தொலைக்காட்சி புகழ் அபுநானா ஆரிபா, உமமுகுலது, ஹலோ பௌமி இணைந்து பாடியுள்ள சினிமாப் பாடல் மெட்டில் அமைந்த நகைச் சுவைப் பாடல் (கெஸட்) ஒலிப் பதிவு நாடா ஒன்று கடந்த வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டுள்ளது.

வயிறு குலுஙக சிரிக்க வைக்கும துணுக்குகளைக் கொண்ட மேற்படி அபுநானாவின் "மெட்டுக்குப் பாட்டு" கெஸட் இலஙகையில் வெளியிடப்பட்டுள்ள முதல் "மெட்டுக்குப் பாட்டு" கெஸட்டாகும.

ஆம திகதி பொஙகல் தினத்தன்று ரூபவாஹினியில் பார்க்க முடிந்தது.

"பொஙகல் பரிசு" என்ற பெயரில் ஒளிபரப்பப்பட்ட இந்த நாடகத்தை சி. சண்முகம எழுதியிருந்தார். அறுபது எழுபதுகளில் சண்முகம பல சிறந்த



ஸ்ரீதர் பிச்சையப்பாவும் ரஞ்சனி ராஜ்மோகனும் ஒருவருக்கொருவர் ஈடுகொடுத்து நடிக்கும் ஒரு சுவையான கட்டத்தையே இங்கு காண்கிறீர்கள்!

ரேடியோ நாடகஙகளையும மேடை நாடகஙகளையும எழுதி பெயரும புகழும பெற்று விளஙகிய ஒரு பழமபெரும நாடகாசிரியராவார். அப்போது அவருடைய மனைவி ராஜேஸ்வரி சண்முகமும அவருடைய நாடகஙகளில் நடித்து சண்முகத்தின் நாடகஙகளுக்கு மேலும சிறப்பைத் தேடித்தந்தார்.

பின்னர் நாடகம எழுதும பணியை சண்முகம முற்று முழுதாக ஏன் கைவிட்டாரோ தெரியாது. அவர் ஒதுஙகிக் கொண்டது கொழுமபில் நாடகக் கலைக்கு இழப்பாக இருந்து வந்தது. அவர் மீண்டும நாட ...

ஒரு தரமான நகைச் சுவை நாடகமாக விளஙகியது. இந்நாடகத்தில் ஸ்ரீதர் பிச்சையப்பா, ரஞ்சனி, எஸ் எஸ் கணேசபிள்ளை, மணிமேகலை, கு ராமச்சந்திரன் ஆகியோர் நடித்தனர்.

ஸ்ரீதரும ரஞ்சனியும ஒருவருக்கு ஒருவர் ஈடுகொடுத்து நடித்தார்கள். ஸ்ரீதருக்கு நல்ல "ரலண்ட்" இருக்கிறது. அவர் முயன்றால் "ஏ" கிளாஸ் ஹாஸ்ய நடிகராகப் பிரகாசிக்க இடமுண்டு. அப்படியே ரஞ்சனியும. ரஞ்சனியின் நடிப்பைப் பார்த்தபின், "நல்ல பெண் நடிகைகள் இலஙகையில் இல்லை" என்ற கூற்று பொருத்தமற்றது என்று ஆகி விட்டது.

கணேசபிள்ளை ஒரு பண்பட்ட நடிகர். அவர் தமக்கு அளிக்கப்பட்ட பக்கத்து வீட்டு யாழ்ப்பாணத்துக்காரர் — ஐடியா அப்பாத்துரையின் பாகத்தைக் கனகச்சிதமாக நடித்தார். மணிமேகலையும சோடை போகவில்லை.

... செய்து முடித்தார். அவருடைய அரிச்சந்திர தனம சுவையாக இருந்தது.

நகைப்பு வெடிக்கும வண்ணம வசனஙகளை "டைம பண்ணிச்" சொல்வதில் ஸ்ரீதர், ரஞ்சனி, கணேசபிள்ளை, ராமச்சந்திரன் ஆகியோர் திறமை காட்டினார்கள். நகைச்சுவை நாடகம சோபிப்பதற்கு "டைமிங" மிக முக்கியமானதாகும. நாடகத்தின் வெற்றியே இந்த "டைமிங்" கில் தான் தஙகியிருந்தது என்று சொல்ல வேண்டும. பல கட்டஙகளில் "குபீர் சிரிப்பு" ஏற்படுத்தும வண்ணம "டயலாக்"குகள் பேசப்பட்டன.

இந்த டி வி நாடக குரூப் தொடர்ந்து இன்னும நல்ல பல நகைச்சுவை நாடகஙகளை ரசிகர்களுக்கு தர வேண்டும என்று கேட்டுக் கொள்கிறோம.

— சஞ்ஜயன்.

## கே. எஸ். பாலா தந்திடும் நாடா

பிரபல வானொலி, மேடை, திரைப்பட, தொலைக்காட்சிக் கலைஞரும, எழுத்தாளரும, தயாரிப்பாளருமான கலைஞர் கே எஸ் பாலச்சந்திரனுக்கு ஐரோப்பிய நாடுகளில் "தனி மனித நடிப்பு" நிகழ்ச்சிகளில் கலந்து கொண்ட முதலாவது இலஙகைக் கலைஞர் என்ற பாராட்டுக் கிடைத்திருக்கிறது.



கே எஸ் பாலச்சந்திரன்

இவர் எழுதி வானொலியில் ஒலிபரப்பான "கிராமத்துக் கனவுகள்" தொடர் நாடகம ஒலிப்பதிவு நாடா வடிவில் வெளி வருகிறது.

எதிர்வரும 28 ஆம திகதி ஞாயிற்றுக்கிழமை வெள்ளவத்தை இராமகிருஷ்ண மண்டபத்தில் நடைபெறும முத்தமிழ் விழாவில் இந்த ஒலிப்பதிவு நாடா வெளியிடப்படுகிறது.

(ம)

தயாரிப்பு: சஞ்ஜயன்

# சித்ர கானங்கள் சிந்தை கவர்ந்தன

எஸ் ராமதாஸின் தரமான தயாரிப்பிலான நம உள்ளூர்க் கலைஞர்களின் சினிமாப் பாடல் நிகழ்ச்சி நிச்சயமாக சினிமா ரசிகர்களை இமமுறை மகிழ்ச்சியிலாழ்த்தியிருக்கும் என்பதில் சந்தேகமே இல்லை!

இலஙகையின் பிரபல இசைக் குழுவினர்களான அப்சராஸ், சித்தாரா, சுப்பர் சித்தாரா, சுப்பர் சன்ஸ், கானரா, நைட் ரைடர்ஸ் ஆகியோர் தயாரித்துக் கொண்ட இந்நிகழ்ச்சியில் பஙகு பற்றிய பாடகர்கள் ஒவ்வொருவருமே சோடை போகவில்லை!

பாடல்கள் ஒவ்வொன்றும "ஒறிஜினல்" கானோ என்றெண்ணுமளவுக்கு எமமாலும தென்னிந்தியத் திரைப்படப் பாடல்களைத் தரமுடியும என்பதற்கேற்ப இந்நிகழ்ச்சி ஒரு சவாலாக அமைந்திருந்தது!

இந்நிகழ்ச்சியின் ரசிப்புக்கு மேலும மெருகூட்டிய சிரியந்த ஆட்டிகலையின் எடிட்டிங்கும், மிக்ஸிஙகும பிரமாதம!

நம உள்ளூர்க் கலைஞர்கள் பாடும பொழுது திரைப்படப்



பாடல் காட்சிகளையும பின்னணியில் மிக்ஸ் பண்ணிப் படத் தொகுப்பினைப் பிரியந்த இந்த விதம அவரது திறமைக்கு ஒரு 'டை போட வைத்த வகையில் அருமையானதொரு தொழில்நுட்பக் கலைஞரை அன்று திரை மறைவில் கண்டோம!

இந்நிகழ்ச்சியில் புதிய மோகன்ராஜ், கணேஷ்ராஜ், கலைக்கமல், சகாயம பெர்னாண்டோ, சந்திரமோகன், முகிந்த குமார், கிருஷ்ணகுமார், சிவகுமார், பாலமுரளி, கான்ஸ் மௌலானா, நிலாமதி, ராணி ஜோசப் துஷிதா தர்ஷினி நளினி பிரோஷா விராஜினி எலலோருமே தஙகளது பாடல்கள் மூலம டி வி ரசிகர்களைக் கவர்ந்தார்கள்—

குறிப்பாகக் குள்ளக் கமல் வேடத்தில் தோன்றி "ஒன்னுனெனச்சே பாட்டுப் படிச்சேன் தஙகமே ஞானத்தஙகமே..." என்ற பாடலை பாடிய மோகன்ராஜ் — இந்நிகழ்ச்சியில் தனித்து நின்று ஒளி வீசினார்!

கணேஷ்ராஜும "மாஙகுயிலே பூஙகுயிலே சேதி ஒன்னு கேளு" என்று மனதைக் கவரும வகையில் மதுர கீதமிசைத்தார்—

"த வே யூ மேக் மீ பீல்" என்ற மைக்கல் ஜக்ஸனின் ஆஙகிலப் பாடல் மெட்டமைப்பில் அமைந்த "நியாயத் தராசு" படப் பாடலான "வெண்ணிலா என்னோடு வந்த ஆடவா" என்ற பாடலை சுப்பர் சித்தாராவின் இசையில் கிருஷ்ணகுமார் பாடி நிகழ்ச்சிக்கே ஒரு கலகலப்பூட்டினார்—

குள்ளக் கமல் பாடிய பாடலை அதே வேடத்தில் மோகன்ராஜ் பாடும காட்சி.

மொத்தத்தில் இம்முறை வாஹினியின் தைப்பொஙகல் நிகழ்ச்சி ரசிகர்களின் மனதில் தஙகும மகிழ்ச்சியாகவே அமைந்தது—

# வானொலியில் கர்நாடக இசைப் பரிசோதனை

இலஙகை வானொலி கர்நாடக இசைக் கலைஞர்களைத் தெரிவு செய்வதற்கான இசைப் பரிசோதனை பெப்ரவரி மாத முற்பகுதியில் நடைபெறும. தமிழ்ச் சேவைப் பணிப்பாளர் திரு வீ ஏ திருஞானசுந்தரம இத்தகவலைத் தெரிவித்துள்ளார்.

வாய்ப்பாட்டுக்கும, வயலின் வீணை, மிருதஙகம, புல்லாஙகுழல், கஞ்சிரா வாத்திய வாசிப்புக்கும 300 க்கும மேற்பட்டோர் விண்ணப்பித்திருக்கிறார்கள். இசைத் துறையில் மூத்த கலைஞர்கள் குழுவொன்று, பரிசோதனையை நடத்தும.

இப்பரிசோதனையில் தெரிவு செய்யப்படுவோரின் பெயர்கள் தமிழ்ச் சேவையின் அஙகீகரிக்கப்பட்ட கலைஞர் பட்டியலில் சேர்க்கப்படும. பின்னர், வரிசைக் கிரமத்தில் அவர்களுக்கு வாய்ப்பு அளிக்கப்படும.

கூட்டுத்தாபனத்தின் தலைவரும, பணிப்பாளர் நாயகமுமான திரு ஹட்சன் சமரசிஙகாவின் பணிப்புரையின் பேரில் புதிய கலைஞர்களைத் தெரிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ம)

MOTHER & CHILD




# உணவூட்டி பிள்ளைகளின் உடலை வளர்த்து விட்டால் போதாது

## உளரீதியான வளர்ச்சி பெற உதவுங்கள்

குழந்தையினை வளர்த்தெடுப்பதில் தாயின் பங்கு முக்கியமானது. வளர்ப்பு எனும போது அது வெறுமனே உடல் ரீதியிலான வளர்ச்சியை மட்டும கருத்திற் கொள்வதாக அநேக தாய்மார்கள் நினைக்கின்றோம. இது தவறு.

ஏனெனில், குழந்தையைப் பொறுத்து, அதனது உடலும உள்ளமும ஒருங்கிசைத்தாற் போல வளர்ந்து செல்வது அவசியம.

குழந்தை பிறந்ததிலிருந்து பெருமளவு அரவணைப்பு தாயிடமிருந்தே கிடைக்கின்றது. பிள்ளைக்கு சத்தான உணவு வகைகளைக் கொடுத்தல், சீதோஷ்ண நிலைமைக்கேற்ப ஆடை வகைகளை அணிவித்தல், உடல் நலத்தைச் சீராகப் பேணுதல் ஆகியன உடல், உள வளர்ச்சியினை மேமபடுத்துபவை.

இத்தகைய நிலைமைகளில் அன்னையுடன் தந்தையும தமது பங்களிப்பினை மனமுவந்து நல்க வேண்டும. ஏனெனில் குடும்பம ஒரு கோயில் அல்லவா?

பொதுவாக ஒரு குழந்தையின் மன எழுச்சி இளமைக் காலத்திலேயே பேணப்படுகின்றது. அந்த வயதிலிருந்தே தான் வாழும சூழலுடன் ஒட்டிப் பழக ஆரம்பித்து விடுகிறது.

இந்நிலையில் அதனது தேவைகள் சீராகக் கவனிக்கப்படல் அவசியம.

அதனது தேவைகள் கவனிக்கப்படாத காரணத்தால் தானே பல்வேறு நடத்தை ரீதியிலான பிரச்சினைகள் உருவெடுக்கின்றன. எனவே, அவர்களது தேவைகள் என்ன? அவற்றை எப்படி அறிந்து செயல்படுத்துவது போன்ற தன்மைகளை தாய்மார் உணர்ந்திருத்தல் அவசியமாகும.

சிறு குழந்தைகள் தமது சூழலுக்கேற்பவே பழக்க வழக்கங்களையும அனுசரித்து நடக்கத் தொடங்குகின்றன. அவர்களது உள ரீதியிலான மகிழ்வுக்குத் தேவையானது அன்பும அமைதியும கலந்த வீடுதான்.

அன்புக்குத்தான் எத்தனை மகத்துவம. அமைதியுடன் அன்பும சேர்ந்தால் அதனால் ஏற்படும பாசப்பிணைப்பினை சொல்ல முடியுமா?

அன்புடன் நேசிப்பது; ஆதரவான வார்த்தைகளைக் கூறுவது, அவர்களது தேவைகளை முடிந்தமட்டில் நிறைவு செய்வது; ஏனையவருடன் ஒத்துப் பழகுவது; ஒருவர் மீது இன்னொருவர் அன்பைப் பொழிவதனாலன்றோ அவர்களது நல்ல பண்புகளும, பழக்கங்களும வளரும.

இவ்வாறான சிறார்களே எதிர்காலத்தில் இன, மத, பேத மற்ற நிலையில் சிறந்த சந்ததியினராக பலரும போற்ற வாழ்க்கை நடாத்தி, புகழின் உச்சிக்கே சென்றுவிடுகின்றனர்.

இத்தகைய நிலைமைகளில் வளர்த்தெடுக்கப்படாத குழந்தைகள் தான், பெரியவரானதும பயம, வெறுப்பு, பிறரை ஏமாற்றுவது, தனது உள்ளக்கிடக்கை வெளிப்படுத்த முடியாத பயம விரக்தி ஆகியன உருவாகி, சமூகத்திற்கே பெருந் தீங்கினை உண்டாக்குவரென்றால் மிகையாகாது.

எனவே, பெற்றோருக்கேற்ற குழந்தைகளாக வளர்த்தெடுக்க, அதனது சூழ்நிலையே அவசியமாகும.

தாயும, தந்தையும ஒவ்வொரு நாளும குழந்தையுடன் பழகுவதற்கென்றே குறிக்கப்பட்ட நேரத்தை ஒதுக்குதல் அவசியம.

அவ்வாறு இருந்தால்தான், அது அன்பால் பிணைக்கப்பட்டு, பல்வேறு சாதனைகளைப் புரிந்து, வாழ்வில் உயர்வு நிலை பெற வழிவகுக்கும.

— காவியா செல்வம் —

குழந்தைகளுக்கு சிறு வயதிலிருந்தே உற்சாகத்தையூட்ட வேண்டும. அவர்கள் மத்தியில் மூடக் கருத்துக்களைத் திணித்து வளர்ப்பதை விட, தன்னமபிக்கையூட்டக் கூடிய கருத்துக்களைப் புகட்ட வேண்டும.

சிறார்களது மனக் குழப்பங்களை, அவர்கள் எதிர்நோக்கும பிரச்சினைகளைத் தீர்ப்பது அவசியம. அது அனுதாபம கலந்ததாக, உண்மைப் பற்றுள்ளதாகவிருக்கும வேளையில்தான் அன்பு பிறக்கும.

எதிர்காலத்தில் தமது பிரச்சினைகளை பெற்றோருடன், அன்புக்கு உரியவர்களுடன் தீர்த்துக் கொள்ள முற்படும.

சில குடும்பங்களில் தகப்பனைக் கண்டாலே பிள்ளைகளுக்குப் பிடிக்காது; அந்தளவிற்கு அவர்கள் மனதில் பயப் பிராந்தியை வளர்த்து விட்டுள்ளனர்.

இதனை மரியாதை, பணிவு என தந்தை நினைத்தாலும, அது பிள்ளையின் பயத்தின் வெளிப்பாடே. இதனால், அவர்களது சுய உணர்வுகள், எண்ணங்கள் கட்டுப்படுத்தப்படுகின்றன. எனவே, தந்தைமார் தமது நிலையினை மாற்றுவது அவசியமாகும.

பிள்ளைகள் மத்தியில் எமமுள் அநேகர் வன்மையான சொற்களையே பாவிக்கின்றோம. எவ்வளவு இனிமையான சொற்கள் இருக்கின்றன. அவற்றையெல்லாம மறந்து விடுகிறோமல்லவா?

இனிய சொற்களைப் பயன்படுத்தி, அவர்களது பேச்சு வன்மையையும தூண்டல் அவசியம. அவர்களுடன் சேர்ந்து பழக மற்றையவர்களையும தூண்டுவித்தல் வேண்டும.

இதனால், எக்காலமும அவர்கள் மகிழ்ச்சியின் உச்சாணியில்தானே இருப்பர். இல்லாவிடில், அவர்களது மனம கவலை பயம போன்றவற்றால் ஆக்கிரமிக்கப்பட்டு உள நோய், உடல் ரீதியிலான பாதிப்புக்களை ஏற்படுத்தும.

இரண்டும பாதிக்கப்பட்ட பிள்ளையின் ...

இத்தகைய நிலைமைகளில் பெற்றோர் அதனை அலட்சியப் படுத்தாது, தேவைப்படும சந்தேகங்களை நிவர்த்தி செய்தல் அவசியம.

குழந்தைகள் தவறு விடுவதும சகஜம. ஆனால், தவறின் காரணம யாதென அறியாமல் எமமுள் பலர் அதனைத் தண்டிக்கின்றோம.

இந்நிலை மாற வேண்டும. தவறுக்கான காரணம யாதெனக் கண்டறிந்து, தீர்வினை மேற்கொள்ளல் அவசியம.

எனவே, இயல்பாகவே, தூய்மையுடைய குழந்தையின் உள்ளத்தை அதற்கேற்ற வகையில், குற்றமற வளர்த்தெடுப்பது எம கடமையும, தேவையுமாகும.

(த—408)

# குழந்தை மனதில் அரக்க குணம் ஏன்?

சிறு வயதில் குழந்தைகள் சுட்டித்தனத்தில் இறங்குவது இயல்பு— சுட்டித்தனம் செய்யாவிட்டால் குழந்தைகள் ஆரோக்கியமாக இல்லையென்றுதான் கருத வேண்டும்— ஆனால் சில குழந்தைகள் அளவுக்கு மீறிய சுட்டித்தனத்தில் — சுட்டித்தனம் என்று சொல்வதை விட பெற்றோரின் கௌரவத்திற்கும் பொருள் நாசத்திற்கும் வழிவகுக்கும் வன்முறை போக்குக் கொண்ட செயல்களில் — இறங்கி விடுவதுண்டு— மிகச் சிறு வயதினிலேயே அசுரத்தனம் ஏற்படுவது ஏன்?

இத்தகைய குழந்தைகள் நிறைய உண்பவர்களாகவும் உடல் வளர்ச்சி கொண்டவர்களாகவும் இருப்பது வழக்கம— இதற்கும் அவர்களது வன்முறையான சுட்டித்தனத்திற்கும் இடையே தொடர்பு இருக்கிறதா?

நாசம் விளைவிக்கும செயல்களில் குழந்தைகள் ஈடுபடுவதற்கு அடங்காப்பசியே காரணம என்று சொல்லப்படுகிறது—

...

பில்லி நித்திரை செய்யும் போதும அவனது மூளை வேகமாக இயங்கிக்கொண்டிருந்தது— ஆழ்ந்த நித்திரை செய்யாத தூக்கத்தில் எழுந்து நடமாடுவது வழக்கம்— படுக்கையறை ஜன்னலைத் திறந்து கொண்டு சிலசமயம் வெளியே பாய்ந்து விடுவான் பில்லி!

ஒரு கோலா போத்தலைக் காலி செய்த பதினைந்து நிமிடங்களில் பில்லியின் மனோநிலை மாறத் தொடங்கி விடும என்கிறார் அவனது 36 வயதான தாயார்— கோலா அருந்திய பதினைந்தாவது நிமிடத்தில் பதட்டமான காரியங்களைச் செய்யத் தொடங்கி விடுவானாம்— இதைத் தடுத்தால் கோபமும எரிச்சலும அடையும் பில்லி வன்முறையில் இறங்க ஆரம்பிப்பானாம— ஒருமுறை இரும்புக் கம்பி ஒன்றை தூக்கி தனது தந்தையைத் தாக்க முற்பட்டிருக்கிறான் இப்பன்னிரெண்டு வயதுச் சிறுவன்—

# ஆபத்து வேளையில்

## பெண்கள் உயிர்தப்ப



றது. அந்த வயதிலிருந்தே தான் வாழும சூழலுடன் ஒட்டிப் பழக ஆரம்பித்து விடுகிறது.

இந்நிலையில் அதனது தேவைகள் சீராகக் கவனிக்கப்படல் அவசியம.

அதனது தேவைகள் கவனிக்கப்படாத காரணத்தால் தானே பல்வேறு நடத்தை ரீதியிலான பிரச்சினைகள் உருவெடுக்கின்றன. எனவே, அவர்களது தேவைகள் என்ன? அவற்றை எப்படி அறிந்து செயல்படுத்துவது போன்ற தன்மைகளை தாய்மா[illegible] உணர்ந்திருத்தல் அவசியமாகும.

சிறு குழந்தைகள் தமது ...யினராக பலரும போற்ற வாழ்க்கை நடாத்தி, புகழின் உச்சிக்கே சென்றுவிடுகின்றனர்.

இத்தகைய நிலைமைகளில் வளர்த்தெடுக்கப்படாத குழந்தைகள் தான், பெரியவரானதும பயம, வெறுப்பு, பிறரை ஏமாற்றுவது, தனது உள்ளக்கிடக்கை வெளிப்படுத்த முடியாத பயம விரக்தி ஆகியன உருவாகி, [illegible]மூகத்திற்கே பெருந் தீங்கினை உண்டாக்குவரென்றால் மிகையாகாது.

எனவே, பெற்றோருக்கேற்ற வழிவகுக்கும.

குழந்தைகளுக்கு சிறு வயதிலிருந்தே உற்சாகத்தையூட்ட வேண்டும. அவர்கள் மத்தியில் மூடக் கருத்துக்களைத் திணித்து வளர்ப்பதை விட, தன்னம்பிக்கையூட்டக் கூடிய கருத்துக்களைப் புகட்ட வேண்டும.

சிறார்களது மனக் குழப்பங்களை, அவர்கள் எதிர்நோக்கும பிரச்சினைகளைத் தீர்ப்பது அவசியம. அது அனுதாபம கலந்ததாக, உண்மைப் பற்றுள்ளதாகவிருக்கும வேளையில்தான் அன்பு பிறக்கும.

...டு. இதனால், ... சுய உணர்வுகள், எண்ணங்கள் கட்டுப்படுத்தப்படுகின்றன. எனவே, தந்தைமார் தமது நிலையினை மாற்றுவது அவசியமாகும.

பிள்ளைகள் மத்தியில் எமமுள் அநேகர் வன்மையான சொற்களையே பாவிக்கின்றோம. எவ்வளவு இனிமையான சொற்கள் இருக்கின்றன. அவற்றையெல்லாம மறந்து விடுகிறோமல்லவா?


இனிய சொற்களைப் பயன்படுத்தி, அவர்களது பேச்சு வன்மையையும தூண்டல் அவசியம. அவர்களுடன் சேர்ந்து பழக மற்றையவர்களையும தூண்டுவித்தல் வேண்டும.

இதனால், எக்காலமும அவர்கள் மகிழ்ச்சியின் உச்சாணியில்தானே இருப்பர். இல்லாவிடில், அவர்களது மனம கவலை பயம போன்றவற்றால் ஆக்கிரமிக்கப்பட்டு உள நோய், உடல் ரீதியிலான பாதிப்புக்களை ஏற்படுத்தும.

இரண்டும பாதிக்கப்பட பிள்ளையின் நிலைமையினை சற்று எண்ணிப் பாருங்கள். அவர்கள் தமது வளர்ச்சிக் கட்டம ஒவ்வொன்றிலும, அவர்கள் மத்தியில் புதுப்புதுக் கருத்துக்களை, பொருட்களை அறிமுகம செய்வதால் அவர்களது அறிவு பிரகாசிக்கிறது.

சில குழந்தைகள் சதா தொந்தரவு செய்தும, நச்சரித்துக் கொண்டுமதான் இருக்கின்றன. புதுப்புது விடயங்களை ஆராய அறிய ஏற்படும ஆசை உணர்வே அதற்குக் காரணம.

# ஆபத்து வேளையில் பெண்கள் உயிர்தப்ப வழி இருக்கிறதா?



ஆபத்து வரும் வேளையில் பெண்கள் உயிர் தப்ப வழி இருக்கிறது.

பெண்கள் எதிர்பாராத வகையில் முரடர்களிடம் சிக்கிக் கொள்ள நேர்ந்தால் அவர்களிடமிருந்து தப்பிக்க கராத்தே ஜூடோ தெரிந்திருக்க வேண்டிய அவசியமில்லை. முரடனின் உடம்பின் சில பாகங்களின் மீது எப்படி அதிரடி தாக்குதல் நடத்தினால் அவன் அலறிக் கொண்டு ஓடுவான் என்பதை அறிந்தால் போதும!

1 முடி— கொத்தாக உடும்புப்பிடி போட்டு பிடித்திழுத்து வலிமையாக அருகில் உள்ள சுவற்றிலோ மரத்திலோ மோதலாம.

2 காது— கையை கிண்ணம் போல் குவித்து இரு காதருகில் நெற்றிப் பொட்டில் பலமாக அறையலாம.

3 முகம்— பெரிய நகம வளர்ந்திருந்தால் முகத்தை ரத்தம் வர பிராண்டலாம.

4 கண்கள்— நடு விரலையும் மோதிர விரலையும் "V" வடிவில் வைத்துக் கொண்டு கண்களை பலமாகக் குத்தி முழியைப் பிடுங்கி விடலாம. அல்லது பேனா பென்சில் கட்டைவிரல் போன்றவற்றாலும் கண்களைக் குத்தி குருடாக்கலாம.

5 மூக்கு— கை முஷ்டியால் மூக்கின் கீழிலிருந்து மேலாகப் பலமாகத் தாக்கலாம. அல்லது தலையால் மூக்கின் மேல் பலமாக மோதலாம்.

6 முகவாய்— மூக்கைப் போன்றே கை முஷ்டியால் முகவாய் பகுதியையும் கீழிலிருந்து மேலாக தாக்க வேண்டும்.

7 தொண்டை— இறுகச் சேர்ந்த கைவிரல்கள் முஷ்டி அல்லது முழங்கை கொண்டு தாக்கலாம. தொண்டைக்குழி அல்லது சற்று கீழே குறி பார்த்து தாக்குவது நல்ல பலனைத் தரும.

8 விரல்கள்— கை விரல்களை பின்பக்கமாக வளைத்து முறுக்கி விட வேண்டும். இதனால் அவனின் பிடி நழுவி விடும.

9 கைகள்— பலம் கொண்ட வரை பற்களால் கடித்துக் குதற வேண்டும். விரல் நகங்கள் பென்சில் பேனா கத்தி போன்ற கூரிய ஆயுதங்களால் தாக்கலாம.

10 அடி வயிறு— வேகமாக முழங்காலால் எட்டி உதைக்க வேண்டும். பின்புறமாக தாக்க வந்தால் கை முஷ்டிகளை விறைப்பாக மடக்கி பின்பக்கமாக குத்து கொடுக்கலாம.

11 முழங்கால்— பலமாக உதைக்க வேண்டும.

12 முழங்கால் கணுக்கால்— இடைப்பட்ட பகுதி— குதிகால் அல்லது செருப்பு ஷூ முனை கொண்டு வேகமாக எட்டி உதைக்கலாம.

13 பாதங்கள்— பின்புறம் இருந்து தாக்க வந்தால் பாதங்களின் மீது அழுத்தமாக ஏறி நின்று அசையவிடாமல் செய்யலாம.

— இந்த ஆலோசனைகளை ஒரு பெண் விடுதலை வீராங்கனையே கூறியிருக்கிறார். அபலைப் பெண்கள் தற்பாதுகாப்பிற்காக பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் தாம் இவை. ஆனால் பெட்டிப் பாம்பாக அடங்கி ஒடுங்கி இருக்கும் கணவனை மேலும் வருத்துவதற்கு தாய்மாரே தயது செய்து இந்த வழிமுறைகளை பின்பற்றி விடாதீர்கள்.

[ம—10]



## இடுப்பில் சொறி புண்ணா?

பெண்கள் புடைவையை இறுக்கமாக அணிவதால் ரத்த ஓட்டம தடைப்பட்டு அரிப்பு சொறிவதால் புண்ணாகி விடும். இதற்கு இரவு படுக்கும் போது உடையைத் தளர்த்தி விட்டு புண்களில் தேங்காய் எண்ணெய்யை தடவி காலையில் குளிர்ந்த நீரில் கடலை மாவு தேய்த்து குளித்து வர விரைவில் குணமாகும்.

(ம—10)

## அறிவுள்ள குழந்தை பிறக்க...

"கருவுற்றிருக்கும் போது நல்ல பேச்சுக்களும் நல்ல சைவ உணவுகளும் நல்ல எண்ணங்களும் மகிழ்ச்சியும கொள்ள வேண்டும. அப்போதுதான் அறிவுள்ள குழந்தை பிறக்கும். அதை விட்டு மண் சாம்பல் செங்கல்பொடி இவற்றை தின்றும் அழுது கொண்டு சண்டை போடுவதுமாக இருந்தால் முரட்டுக் குழந்தைதான் பிறக்கும்!

[ம—10]

# குழந்தை மனதில் அரக்க குணம் ஏன்?

சிறு வயதில் குழந்தைகள் சுட்டித்தனத்தில் இறங்குவது இயல்பு. சுட்டித்தனம் செய்யாவிட்டால் குழந்தைகள் ஆரோக்கியமாக இல்லையென்றுதான் கருத வேண்டும். ஆனால் சில குழந்தைகள் அளவுக்கு மீறிய சுட்டித்தனத்தில் — சுட்டித்தனம் என்று சொல்வதை விட பெற்றோரின் கௌரவத்திற்கும் பொருள் நாசத்திற்கும் வழிவகுக்கும் வன்முறை போக்குக் கொண்ட செயல்களில் — இறங்கி விடுவதுண்டு. மிகச் சிறு வயதினிலேயே அசுரத்தனம் ஏற்படுவது ஏன்?

இத்தகைய குழந்தைகள் நிறைய உண்பவர்களாகவும் உடல் வளர்ச்சி கொண்டவர்களாகவும் இருப்பது வழக்கம. இதற்கும் அவர்களது வன்முறையான சுட்டித்தனத்திற்கும் இடையே தொடர்பு இருக்கிறதா?

நாசம் விளைவிக்கும செயல்களில் குழந்தைகள் ஈடுபடுவதற்கு அடங்காப்பசியே காரணம என்று சொல்லப்படுகிறது.

சில குழந்தைகள் அவை கருவில் இருக்கும் போதே அடங்காப் பசி உணர்வு ஏற்படுவதற்கான அத்திவாரம் போடப்பட்டு விடுகிறது என்றும் இதன் காரணமாக அவர்கள் சிறு வயதிலேயே வன்முறை சம்பந்தப்பட்ட செயல்களில் இறங்கி விடுகிறார்கள் என்றும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இச் சிறு வயது வன்முறையாளர்கள் பிற்காலத்தில் சில்லறை திருட்டுகளிலும் பின்னால் சமூக விரோதிகளாகவும் உருவாகி விடுகிறார்கள் என்று மருத்துவ நிபுணர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள்.

இக் கோளாறு எவ்வளவு மோசமானதென்பதற்கு ஒரு உதாரணமாக இங்கிலாந்தைச் சேர்ந்த பதின்மூன்றே வயதான பில்லியின் வாழ்க்கையை எடுத்துக் கொள்ளலாம.

பில்லிக்கு இரண்டு வயதான போதே தடுக்குத்தனம் தலைவிரித்தாடத் தொடங்கியது. ஒருமுறை தனது சகோதரியின் படுக்கையை பில்லி அந்த வயதிலேயே தீவைத்துக் கொளுத்தினான். ஒரு தடவை வீட்டுச் சமையலறைக்கும் பில்லி தீவைத்தான்.

பில்லி அடங்காப்பசி கொண்டவன். எப்போதும் எதையாவது தின்று கொண்டிருக்க வேண்டும். அல்லது குடிக்க வேண்டும. இனிப்பு என்றால் பில்லிக்கு உயிர்!

தனது பதினோராவது வயதில் பில்லி தினம் இரண்டு கிலோ சீனியைக் காலி செய்தான். மேலும் இரண்டு கிலோ சீஸ் தினமும அவனுக்குத் தேவையாக இருந்தது. சுமார் ஐம்பது கப் கோப்பியும் ஏராளமான கொக்காகோலாவையும தினமும. பில்லி காலி செய்தான்.

இப்படித் தினமும் உண்பதற்கு காசு வேண்டாமா? இதனால் பில்லி தனது பன்னிரெண்டாவது வயதில் சில்லறைத் திருட்டில் இறங்கினான். காசு திருடுவது உணவுப் பொருட்களைத் திருடுவது என்று அவன் கைவரிசையைக் காட்டவே பெற்றோருக்கு அது தலைவலியாகப் போயிற்று. தன் பதின்மூன்றாம் வயதில் தன்னை விட வயதுக்கு மூத்த ரௌடிகளுடன் பமகுமளவுக்கு பில்லி இவ்விவகாரங்களில் தேர்ந்து போனான். உடல்வாகும் ஏற்றதாக இருக்கவே வீதி வன்முறைகளில் இறங்கினான். தனது அடங்காப் பசியைத் தணிப்பதற்காக இவற்றை அவன் செய்ய வேண்டியிருந்தது.

பில்லி நித்திரை செய்யும் போதும அவனது மூளை வேகமாக இயங்கிக்கொண்டிருந்தது. ஆழ்ந்த நித்திரை செய்யாது தூக்கத்தில் எழுந்து நடமாடுவது வழக்கம். படுக்கையறை ஜன்னலைத் திறந்து கொண்டு சிலசமயம் வெளியே பாய்ந்து விடுவான் பில்லி!

ஒரு கோலா போத்தலைக் காலி செய்த பதினைந்து நிமிடங்களில் பில்லியின் மனோநிலை மாறத் தொடங்கி விடும என்கிறார் அவனது 36 வயதான தாயார். கோலா அருந்திய பதினைந்தாவது நிமிடத்தில் பதட்டமான காரியங்களைச் செய்யத் தொடங்கி விடுவானாம். இதைத் தடுத்தால் கோபமும எரிச்சலும அடையும் பில்லி வன்முறையில் இறங்க ஆரம்பிப்பானாம. ஒருமுறை இரும்புக் கம்பி ஒன்றை தூக்கி தனது தந்தையைத் தாக்க முற்பட்டிருக்கிறான் இப்பன்னிரெண்டு வயதுச் சிறுவன்.

பில்லிக்கு 13 வயதான போது நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டான். பில்லி சார்பாக நீதிமன்றத்தில் ஆஜராயிருந்த சட்டத்தரணி அவனது உணவு பழக்கத்திற்கும் வன்முறைத் தன்மைக்கும இடையே தொடர்பு இருக்க வேண்டும் என்று குறிப்பிட்டு பில்லியை மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தும்படி கோரினார்.

இப்போது பில்லி விடுதி ஒன்றில் வைக்கப்பட்டுள்ளான். அவனுக்கான உணவுகளில் பெரும் மாறுதல் செய்யப்பட்டுள்ளது. கோதுமை பார்லி ஈஸ்ட் சீனி கோப்பி கோலா பாலுணவு பொருட்கள் பழங்கள் எதுவுமே பில்லிக்கு வழங்கப்படுவதில்லை. காய்கறிகள் முட்டை இறைச்சி சோறு கலோரி குறைவான பானங்கள் ஆகியவை மட்டுமே வழங்கப்படுகின்றன.

இரண்டு மாத உணவு சிகிச்சையின் பின்னர் பையன் இப்போது சாதுவாகி விட்டான் என்று மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறார் அவனது தாயார்!

தனது தவறான உணவுப் பழக்கமதான் தன்னை படுகுழியில் தள்ளியதென்பதை இப்போது பில்லி உணர்ந்து கொண்டுள்ளான். பில்லியின் வயிற்றில் அளவுக்கு அதிகமான ஈஸ்ட் சேர்ந்ததுதான் தொல்லைக்கு அடிப்படைக் காரணமாக அமைந்தது என்கிறார் பையனைப் பரிசோதித்த டாக்டர் கொக்ஸ்.

இதன் காரணமாக பில்லி கோப்பியையும் சீனியையும் அதிகம சாப்பிட வேண்டியிருந்தது. இனிப்பும கொழுப்பும மிக்க உணவுகளைத் தேடிச் சாப்பிடத் தொடங்கினான். இந்த அதிகப்படி உணவு அவனது வளர்ச்சியையும் மனோ நிலையையும் தூண்டியது. பாதிக்கவும செய்தது.

— இப்படி டாக்டர் கொக்ஸ் பில்லியின் உடல் — மன கோளாறை விவரித்திருக்கிறார்.

பில்லி விவகாரம ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம மாகிரித்தான். இவ்வாறான பல பில்லிகள் உலகெங்கும ஏன் நம்மிடையே கூட இருக்கிறார்கள்.

சிறு வயதிலேயே ஆவேசமாக உண்பவர்கள் சந்தோஷப்படக் கூடாது. அதை ஒரு நோயாகவே கருதி டாக்டரிடம் ஆலோசனை பெறுவது புத்திசாலித்தனமானது.

[ம—032]

# மனையும் மங்கையும்

## ஆடை ஆபரணம் அணிய நிதானபுத்தி அவசியம்

### அளவுக்கு மிஞ்சினால் ஆபத்து வரலாம்

பெண்கள் தங்கள் இயற்கை அழகை அதிகரித்துக் கொள்வதற்காகவே ஆபரணங்களை அணிகின்றனர். இது இன்று நேற்று ஏற்பட்ட ஒரு வழக்கமல்ல. ஆதி தொட்டே இருந்து வரும் ஒரு வழக்கமாகும்.

ஆபரணங்களை அணிந்து அழகு பார்க்கும் ஆசை பெண்களிடம் இயற்கையாகவே அமைந்துள்ளது. ஆனால், இந்த ஆசையை நிதானப் புத்தியோடு நடந்து கொள்ள வேண்டும்.

தங்க நகைகளை அணிந்து அழகு பார்க்க வேண்டுமென்ற ஆசைக்காக எல்லோராலும் பணத்தை வாரியிறைக்க முடியுமா? பணம் படைத்தவர்களால் மட்டும்தான் முடியும் அதற்காக ஏனையோர் ஆபரணங்களை அணியாமல் இருக்க முடியுமா? அதுவும் முடியாது.

ஆபரணங்களை அணியத்தான் வேண்டும்; ஆனால் அதற்கு ஒரு அளவு, கட்டுப்பாடு, ஒரு வரையறை இருப்பதுதான் விரும்பத்தக்கது.

போதிய பண வசதி இல்லாத குடும்பத்திலுள்ள பெண்கள் பணக்காரப் பெண்களைப் போன்ற நகைகளை அணிய விரும்பினால்; அதற்காக வீணே கடன் பட்டுப் பல தொல்லைகளை அனுபவிக்க நேரிடும்.

அதனால் குடும்பத்தில் நிலவும் அமைதியும், சமாதானமும், சந்தோஷமும் பாதிக்கப்படும். குடும்பத் தலைவனுக்குப் பல கஷ்டங்கள் ஏற்படும்.

ஆதலால், பெண்கள் தங்களுடைய பொருளாதார நிலைக்கேற்ப வாழ்க்கைத் திட்டத்தை வகுத்து, தங்களுக்கு வேண்டிய ஆபரணங்களை அளவோடு அணிவதே சிறந்தது.

சில பெண்கள் திருமணம், விருந்துகள் போன்ற பல்வேறு வைபவங்களில் வந்து கலந்து கொள்வதற்காகத் தங்களிடமில்லாத உயர்தர விலையிலுள்ள நகைகளை அண்டை அயலாரிடமிருந்து இரவலாகப் பெற்று, மணப் பெண்கள் போல தங்களை அலங்கரித்துக் கொள்வதை நம நாட்டிலுள்ள பெண்களிடம் சர்வ சாதாரணமாகக் காண்கின்றோம்.

அவ்வாறு செய்வது பெருந் தவறு மட்டுமல்ல, அறியாமையும் கூட என்றுதான் கூற வேண்டும்.

ஏனெனில் இரவலாகப் பெறும் நகைகள் கை தவறிக் கீழே விழுந்துவிடுமானால் அவற்றை ஈடு செய்யக் கூடிய சக்தி நமக்கு இருக்க வேண்டும்.

அவ்வாறான சக்தியில்லாத போது பிறர் நகைகளை இரவலாகப் பெற்றுக் கைதவற விட்டுப் பின்னர் கண்ணீர் சிந்துவது புத்திசாலித்தனமல்ல.

— பரீக்கா அரிபீன் —

எனவே, சகோதரிகளே! ஒரு வைபவத்திற்கு நீங்கள் போக நேர்ந்தால், தங்களிடமுள்ள சொந்த ஆபரணங்களை மட்டுமே அணிந்து செல்லுங்கள்.

தங்களிடமுள்ள நகைகளை மட்டும் அணிந்து செல்வதனால் அந்தஸ்தோ, கௌரவமோ குறைந்துவிட மாட்டாது. இரவலாகப் பெற்று ஏராளமான நகைகளை அணிந்தால்தான் பெண்களது அந்தஸ்தும், கௌரவமும் உயர்கின்றனவென்று அவர்கள் எண்ணிக் கொண்டாலும் அவர்களது பொருளாதார நிலையை நன்கறிந்தவர்கள் எதிரில் ஏதும் சொல்லாமலிருந்தாலும், மறைவிலாவது அவர்களைப் பற்றி ஏளனமாக பல வசைமொழிகள் கூறுவர்.

இது நம நாட்டு பெண்களில் பெரும்பான்மையோரிடம் காணப்படக் கூடிய அருவருக்கத்தக்க செயலாகும். இதனால் அதற்கு இடமளிக்காதிருப்பதே விவேகமாகும்.

ஆபரணங்களை அளவோடு அணிந்தால்தான் அழகு அதிகரிக்கும் என்பதை ஒவ்வொரு பெண்ணும் கவனத்திற் கொள்ள வேண்டும்.

அளவுக்கு மீறிய ஆபரணங்களை அணிவதனால் பெண்கள் சில வேளையில் ஆபத்துகளை எதிர்நோக்க நேரிடும் என்பதை மறக்கக் கூடாது.

எனவே பணம் இல்லாதவர்களாயினும் சரி, பணம் படைத்தவர்களாயினும் சரி பெண்களே! அளவோடு ஆபரணங்கள் அணிவதே நல்லது.

(த)

## ஓயாத திருமணம்

மகாராஷ்டிர மாநிலத்தில் பால்தார் மற்றும் ககானா என இரண்டு கிராமங்கள் இருக்கின்றன— இவ் ஊர்களைச் சேர்ந்த ஆண்கள் குறைந்தது ஆறு தடவையாவது திருமணம் செய்து கொள்கிறார்கள்—

மணமகளைத் தேர்ந்தெடுக்கும் முறை எப்படி தெரியுமா? ஏலம் போடும் முறை— பெண்களின் தோற்றம்— கவர்ச்சி வயது இதன் பின்னணியில் ஏலத் தொகை ஆரம்பமாகும்— ஏலம் ஆண்களின் ரசனைக்கு ஏற்ப கூடும்— குறையும்— புதிய மனைவியை தேர்ந்தெடுக்கும் பொழுதே பழைய மனைவியை ஏலம் விட்டு விடுவார்கள்—

[ம—10]

## பெண்கள் நெற்றிக்கு ஸ்டிக்கர் பொட்டு வைப்பது சரிதானா?

வேலை செய்யும் பெண்கள் காலையில் அவசரமாக அலுவலகத்திற்குப் புறப்படும் போது நெற்றிக்கு ஸ்டிக்கர் பொட்டுகளை ஒட்டிக் கொண்டு புறப்பட்டு விடுகிறார்கள்— இது சரிதானா?

பெண்கள் நெற்றியில் வகிடு ஆரம்பிக்கும் இடத்தில் [illegible] குங்குமப் பொட்டு வைத்துக் கொள்ள வேண்டும் [illegible] ஸ்த்ரீகளின் தலை வகுட்டில் "[illegible]" [illegible] சொல்கிறார்கள்— அந்த இடத்தில் வைக்கப்படும் குங்குமப் பொட்டு [illegible] வைக்கும் குங்குமப் பொட்டாகும்— அதுவே பெரிய புண்ணியமாம்— [illegible] அகலமிருக்க சகல சௌமாங்கல்யத்தையும் அளிப்பதாம்— இதைச் செய்யக் கூடாதா? [illegible] பொட்டு [illegible] சாந்தும் வைக்கிறார்களே—

ஆண்கள் நெற்றியில் விபூதி திருமண் கோபி சந்தனம் [illegible] ஏதேனும் ஒன்றை தரிக்க வேண்டும்— "நீறில்லா நெற்றி பாழ்" என்பது வாக்கு! விபூதி திருமண் இட்டுக் கொள்வதில் என்ன கௌரவம் குறைந்து விடும்? [illegible] என்று சொல்லப்பட்டுள்ளது—

விபூதியினாலோ சந்தனத்தினாலோ நெற்றியில் மூன்று ரேகைகள் (கோடுகள்) அகலமாக இட்டுக் கொள்ள வேண்டும்— [illegible] சாம வேதம்— நடுவில் உள்ளது யஜுர் வேதம்— கீழே உள்ளது அதர்வ வேதம் என்று வர்ணிக்கப்பட்டுள்ளது—

வேதத்தை நாம் படிப்பதில்லை— படிக்க முடிவதும் இல்லை— வேதத்தின் அடையாளமாகச் சொல்லப்பட்டுள்ள விபூதி கோடுகளையாவது போட்டுக் கொள்ளலாமே!

[illegible] என்னும் கன்னிகையை வசம் செய்ய விபூதி என் [illegible] மருந்தாகும் என்றார்கள்— ராஜா சின்னம் அணிந்தவனை எப்படி ஆசன் "[illegible]" என்று தெரிந்து கொள்கிறானோ அதே போல விபூதி அணிந்தவனை சிவனும் திருமண் அணிந்தவனை [illegible] அணிந்த [illegible] சேர்ந்தவர் என்று எண்ணி அனுக்ரகம் செய்கிறார்களாம்!

[ம—10]

## இரட்டைக்கு எதிராக போர் கொடுத்த பெண்

## பிரிந்து சென்ற தம்பதிகள் மீண்டும் இணைய நாட்டம்

குடுமபத்திலுள்ள பெண்கள் கேற்ப வாழ்க்கைத் திட்டத்தை
பணக்காரப் பெண்களைப் வகுத்து, தங்களுக்கு வேண்டிய

## ஓயாத திருமணம்

மகாராஷ்டிர மாநிலத்தில் பால்தார் மற்றும் ககானா என இரண்டு கிராமங்கள் இருக்கின்றன— இவ் ஊர்களைச் சேர்ந்த ஆண்கள் குறைந்தது ஆறு தடவையாவது திருமணம செய்து கொள்கிறார்கள்—

மணமகளைத் தேர்ந்தெடுக்கும் முறை எப்படி தெரியுமா? ஏலம போடும் முறை— பெண்களின் தோற்றம்— கவர்ச்சி வயது இதன் பின்னணியில் ஏலத் தொகை ஆரம்பமாகும— ஏலம ஆண்களின் ரசனைக்கு ஏற்ப கூடும— குறையும்— புதிய மனைவியை தேர்ந்தெடுக்கும பொழுதே பழைய மனைவியை ஏலம் விட்டு விடுவார்கள்—

[ம—10]

மிருந்து இரவலாகப் பெற்று, மணப் பெண்கள் போல தங்களை அலங்கரித்துக் கொள்வதை நம நாட்டிலுள்ள பெண்களிடம சர்வ சாதாரணமாகக் காண்கின்றோம.

அவ்வாறு செய்வது பெருந் தவறு மட்டுமல்ல, அறியாமையுங் கூட என்றுதான் கூற வேண்டும.

ஏனெனில் இரவலாகப் பெறும நகைகள் கை தவறிக்

எனவே, சகோதரிகளே! ஒரு வைபவத்திற்கு நீங்கள் போக நேர்ந்தால், தங்களிடமுள்ள சொந்த ஆபரணங்களை மட்டுமே அணிந்து செல்லுங்கள்.

தங்களிடமுள்ள நகைகளை மட்டும அணிந்து செல்வதனால் அந்தஸ்தோ, கௌரவமோ குறைந்துவிட மாட்டாது. இரவலாகப் பெற்று ஏராளமான நகைகளை அணிந்தால்தான் பெண்களது அந்தஸ்தும, கௌர

அதற்கு இடமளிக்காதிருப்பதே விவேகமாகும.

ஆபரணங்களை அளவோடு அணிந்தால்தான் அழகு அதிகரிக்கும என்பதை ஒவ்வொரு பெண்ணும கவனத்திற் கொள்ள வேண்டும.

அளவுக்கு மீறிய ஆபரணங்களை அணிவதனால் பெண்கள் சில வேளையில் ஆபத்துகளை எதிர்நோக்க நேரிடும என்பதை மறக்கக் கூடாது.

எனவே பணம இல்லாதவர்களாயினும சரி, பணம படைத்தவர்களாயினும சரி பெண்களே! அளவோடு ஆபரணங்கள் அணிவதே நல்லது.

(த)

விபூதியினாலோ சந்தனத்தினாலோ நெற்றியில் மூன்று ரேகைகள் (கோடுகள்) அகலமாக இட்டுக் கொள்ள வேண்டும்— மேல் கோடு சாம வேதம்— நடுவில் உள்ளது யஜுர் வேதம்— கீழே உள்ளது அதர்வ வேதம் என்று வர்ணிக்கப்பட்டுள்ளது—

வேதங்களைப் படிப்பதில்லை— படிக்க மனமுமில்லை— வேதத்தின் அடையாளமாகச் சொல்லப்பட்டுள்ள விபூதி கோடுகளையாவது போட்டுக் கொள்ளலாமே!

[illegible] என்னும் [illegible] வசம செய்ய விபூதி என்பது ஒரு மருந்தாகும என்றார்கள்— ராஜா சின்னம் அணிந்தவனை எப்படி அரசன் "வெள்ளைக்காரன்" என்று தெரிந்து கொள்கிறானோ அதே போல விபூதியணிந்தவனை சிவனும் [illegible] [illegible] [illegible] சேர்ந்தவர் என்று எண்ணி அனுக்கிரகம் செய்கிறார்களாம!

[ம—10]

# குறட்டைக்கு எதிராக போர் தொடுத்த பெண்

குறட்டை ஒலியை சகிக்க முடியாத காரணத்தால் சில திருமணங்கள் விவாகரத்தில் முடிந்ததைப்பற்றியும் கேள்விபட்டிருக்கிறோம. ஆனால் பக்கத்து வீட்டுக்காரரின் குறட்டை ஒலி சகிக்க முடியாமல் ஒருவர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்த சமபவம இங்கிலாந்தில் நிகழ்ந்திருக்கிறது. சந்ரா டேவிஸ் என்ற பெண்மணி வீட்டின் கீழ்ப் பகுதியில் வசிக்கும புளோரி பிலிப்ஸ் என்ற 85 வயதான மூதாட்டி மீது குறட்டை ஒழிப்பு வழக்கொன்றை தாக்கல் செய்துள்ளார். அயலவரின் குறட்டையை நிறுத்தச் சொல்லி ஒருவர் நீதிமன்றப் படிகளில் ஏறியிருப்பது இததான் முதல் தடவை.

திருமதி டேவிசுக்கு 45 வயதாகிறது. இவரது கணவரின் வயதோ 71. வயதில் வித்தியாசம இருந்தாலும ஒருவர் பேரில் ஒருவர் கொண்டுள்ள நேசத்தில் எவ்வித வித்தியாசமும இல்லை. இவரது கணவர் இருதய நோயாளி. என்ஜினே என்றழைக்கப்படும மார்பு வலியால் அவ்வப்போது அவதிப்படுபவர். ஆகவே நிசப்தமான வாழ்க்கையை விருமபுகிறவர்.

இவர்கள் இருப்பதோ வீட்டின் மேல் மாடியில். கீழ்புறத்தில் புளோறி பிலிப்ஸ் வசிக்கிறார். தினமும இரவில் இவர் போடும குறட்டை ஒலியின் கர்ண கடூரத்தால் கடந்த ஆறு மாதங்களாக தூக்கமின்றி பெரும அவதிப்பட்டு வருகிறோம என்கிறார்கள் இத்தமபதியினர்.

நீதிமன்றம சென்றாவது பிலிப்சின் குறட்டையை நிறுத்தி விட்டு தான் மறுவேளை பார்ப்பது என்ற இவர்கள் வழக்கு தொடர்ந்திருந்தார்கள். இங்கிலாந்தில் 1974 ஆம ஆண்டு கொண்டு வரப்பட்ட சூழல் மாசு சட்டத்தின் ஓசை குறைப்பு பிரிவின் கீழ் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இவ்வழக்கு விசாரணைக்கு வந்த போது டேவிஸ் தனது குறிப்புப் புத்தகத்தையே ஆதாரமாகக் காட்டி, பிலிப்சின் குறட்டையொலி தமக்கு எத்தனை பெரிய தலையிடியாக இருக்கிறது என்பதை நிரூபித்தார்,

மே மாதம 27 ஆம திகதி விடியற் காலை 2–45 அளவில் விழித்துக் கொண்டேன். தூக்கம பிடிக்காமல் தேனீர் தயாரித்து பருகினேன். கணவருக்கு மார்பு வலி ஏற்பட்டு துடிதுடிக்கத் தொடங்கினார். உடனடியாக டாக்டரை வரவழைத்தேன். குறட்டையொலியைத் தாங்க முடியாமல் என் கணவர் அழ ஆரமபித்தார்.

— மேற்படி குறட்டையொலியால் தாம அனுபவிக்கும நரக வேதனையை டேவிஸ் இக்குறிப்பேட்டில் எழுதி வைத்திருக்கிறார்.

நீதிமன்றத்தில் புளோறி பிலிப்ஸுக்காக ஆஜராகியிருந்த சட்டத்தரணி, குறட்டையொலியை நிறுத்த எதுவும செய்வதற்கில்லை. குறட்டையை நிறுத்த வேண்டுமானால் தொண்டையைத் தான் கத்தியால் கீறிப் பிளக்க வேண்டும என்று அடித்துச் சொல்லி விட்டார். மேலும பிலிப்சின் முள்ளந்தண்டு வளைந்து காணப்படுகிறது. அவருக்கும மார்பு



வலி ஏற்படுகிறது. இதனால் தான் அவர் உறக்கத்தில் குறட்டை விடுகிறார். இதை எப்படித்தான் நிறுத்துவது? என்ற எதிர்க்கேள்வி எழுப்புகிறார் இவர்.

இதென்ன ஒரே தலைவலியாகப் போய் விட்டது என்று குழமபிப் போன நீதிமன்றம இரு கட்சிக்காரர்களும ஒரு சமாதானத் தீர்வுக்கு வர வசதியளிக்கும வகையில் விசாரணையை ஒத்தி வைத்துள்ளது.

குறட்டை விடும மூதாட்டி படுத்துறங்கும அறை சீலிங்கை ஓசை கடத்தாத விதத்தில் மாற்றி அமைக்க வேண்டும. இதே சமயமடேவிசின் படுக்கையறையின் தரையையும ஓசையை வாங்கி வெளியேற்றாத விதத்தில் அமைக்க வேண்டும. இதுதான் பிரச்சினைக்கு பரிகாரம என்கிறார் ஒலியியல் நிபுணர் ஒருவர்.

(ம–032)

# பிரிந்து சென்ற தம்பதிகள் மீண்டும் இணைய நாட்டம்

நிழலின் அருமை வெயிலில் தெரியும என்பார்கள். விலகி இருக்கும போது தான் அன்பின் ஆழம புரியும, புகழ்பெற்ற தமபதிகளான எலிஸபெத் டெய்லரும, ரிச்சர்ட் பேர்ட்டனும விவாகரத்து செய்து கொண்டு விலகிப் போனதும தான் தாம என்னத்தை இழந்தோம என்பதை உணர்ந்து கொண்டார்கள். பின்னர் இழப்பை ஈடுசெய்யும வகையில் இருவரும மீண்டும திருமணம செய்து கொண்டார்கள்.

மேற்கு ஜெர்மனியில் விவாகரத்து செய்து கொள்பவர்கள் பற்றி ஒரு ஆய்வு மேற்கொள்ளப்பட்ட போது எட்டு விவாகரத்து செய்து கொள்ளும தம்பதியினரில் ஒரு தமபதி மீண்டும திருமணம செய்து சுகமாக வாழ்க்கை நடத்துகிறார்கள். என்ற உண்மை வெளியே தெரிய வந்துள்ளது,

ஒருவரை ஒருவர் விட்டுப் பிரிந்த பின்னர் தான் அவர்களிடம தென்பட்ட நற்குணங்களையும பாலியல் ரீதியான கவர்ச்சிகளையும இருவரும தனித்தனியாக உணர்ந்து கொள்ள ஆரமபிக்கிறார்கள்.

முட்டாள்தனம செய்து விட்டோம, இவருடன் தொடர்ந்து வாழ்ந்திருக்கலாமே என்ற எண்ணம அந்த நாள் ஞாபகங்களுடன் மனதில் படர ஆரம்பிக்கிறது.

இதன் காரணமாகத்தான், பிரிந்து போன சில தமபதியினர் மீண்டும கரம பற்றுகின்றனர் என்று இந்த ஆய்வு காரணம காட்டியிருக்கிறது. உண்மை தானே!

(த–032)

# ஒருவழிக்காதலில் மூழ்குவது கேவலம்

சில ஆண்களுக்கு சில பெண்களைப் பார்த்ததும சட்டென பிடித்துப் போய் விடும. பின்னர், பாலும கசந்ததடி, படுக்கையும நொந்ததடி என்று சதா அதே நினைவாக இருப்பார்கள்.

ஆனால் இவர்களின் காதலை கொஞ்சமும அறியாத அப்பெண்களிடம இதுபற்றி எவ்வித சலனமும ஏற்பட்டிருக்காது. இவ்வகைக் காதலை ஒருவழிப் பாதைக் காதல் என்று வேடிக்கையாக அழைக்கிறார்கள்.

ஒரு ஜப்பானியருக்கும பக்கத்து வீட்டு 21 வயது நங்கையின் பேரில் ஒருவழிப் பாதைக் காதல் ஏற்பட்டிருக்கிறது. அப்பெண் இல்லா விட்டால் வாழ்க்கையே சூனியம என்ற அளவுக்குப் போயிருக்கிறார். ஆனால் 37 வயதான அந்நபரின் காதலை இப்பெண்ணோ கொஞ்சமும சட்டை செய்யவில்லை.

இதன் பின்னர் இப்பெண் துவைத்துக் காயப் போடும உள்ளாடைகள் காணாமற் போகத் தொடங்கியிருக்கின்றன. ஆராய்ந்து பார்த்ததில், கண் நிறைந்த காதலி கிடைக்கா விட்டாலும அவரது உள்ளாடைகளாவது என்னிடம இருக்கட்டுமே என்று அந்த காதல் பித்துப் பிடித்த ஜப்பானியர்தான் உள்ளாடைகளைத் திருடி சேகரித்து தனது தாபத்தைத் தணித்து வந்திருக்கிறார் என்ற உண்மை வெளியே தெரியவந்தது!

(த–032)

# நோயாளிசிறுவன் செய்த சாதனை

ஏழே வயதான கிறெக் ஷர்கோல்ட் என்ற சிறுவனின் பெயர் இவ்வாண்டு வெளியிடப்படவுள்ள கின்னஸ் புத்தகத்தில் இடமபெறப் போகிறது. ஆனால் தனது பெயரை இச்சாதனைப் புத்தகத்தில் பார்க்கும பாக்கியம இச்சிறுவனுக்கு இல்லை.

ஏனெனில் இவ்வாண்டின் பிற்பகுதியில் கின்னஸ் புத்தகம வெளியிடப்படும போது கிறெக் உயிருடன் இருக்க மாட்டார். தீவிர புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருக்கும இச்சிறுவன் அச்சமயம மரண தேவதையிடம அடைக்கலம தேடியிருப்பார்.

இச்சிறுவன் இத்தனை சிறிய வயதில் செய்த சாதனை என்ன தெரியுமா?

மரணப் படுக்கையில் கிறெக் இருப்பதைக் கேள்விப்பட்ட உலக மக்கள் லட்சக்கணக்கில் வாழ்த்து மடல்களையும, கடிதங்களையும இச்சிறுவனுக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

உலகெங்கும இருந்து பத்து லட்சத்துக்கும அதிகமான வாழ்த்து மடல்களும, கடிதங்களும கிறெக்கின் விலாசத்துக்கு வந்துள்ளன. இது ஒரு உலக சாதனை.

முன்னைய சாதனை பத்து லட்சத்து 265 தபால்கள்?

(த–032)

# சிந்தாமணி

தின வெளியீடு "தினபதி" ஞாயிறு வெளியீடு "சிந்தா மணி"

CHINTAMANI சிந்தாமணி




கம்யூனிஸ்ட் நாடுகள் ஒளி பெறுவதுடன் அழகின் உச்சிக்குச் சென்று விட்டன, இம்முறை உலக அழகியாகத் தெரிவு செய்யப்பட்டவர் போலந்து நாட்டைச் சேர்ந்த அனெடா கிரெக்லிகா, இரண்டாம் மூன்றாம் இடங்கள் கனடா – கொலம்பியா அழகிகளுக்கு.

(ம–சி)

## மர்ம மாளிகையில் விசித்திர வாழ்க்கை



பிரபல ஆங்கிலப் பாடகரும் ஹொலிவூட் நடிகருமான பிராங் சினட்ராவை ஆங்கிலப் ...

விதம் விதமான நீளியாட்ட மைதானங்கள் உள்ளன,

இவரது மனைவி பார்பரா ... இங்குதான் வசிக்கிறார்!

## முற்பிறப்பில் தவறு செய்தால் தண்டனை

முற்பிறப்பில் எந்தெந்த உறுப்புக்கள் குற்றஞ் செய்தனவோ, அந்தந்த உறுப்புக்கள் இப்பிறப்பில் துன்பத்தையடையும்.

கோயிலில் தெய்வ வழிபாடு செய்ய கணவனுடன் வந்த பெண் மணியை கடைக்கண்ணால் உற்று நோக்கியவனுக்கு மறுபிறப்பில் மாறு கண் உண்டாகும்.

பிறர் பேசும் ரகசியத்தை உற்றுக் கேட்பவன் மறு பிறப்பில் செவிடனாகப் பிறப்பான்.

சதா புறங்கூறுகின்றவன் மறு பிறப்பில் ஊமையாகப் பிறப்பான்.

ஏழையை ஓங்கியடித்தவன் மறுபிறப்பில் கையொடிந்த முடவனாவான்.

ஞானிகளைப் பழித்தவன் மறுபிறவியில் பித்தனாய்ப் பிறப்பான்,

வாரியார் உரையிலிருந்து

(ம–10)

## தையலுக்கு ஊசியும் நூலும்

காலையில் பலகாரம் சாப்பிட உட்கார்ந்த போது முதல் நாள் செய்த வடையை கணவன் இலையில் வைத்தாள் மனைவி.

வடை ஊசி விட்டிருந்ததால் அதைச் சாப்பிட விண்டபோது, உள்ளே நூல் வெளிப்பட்டது. அப்படியே வடையை மனைவியிடம் கொடுத்தான், "வடை ஊசி விட்டது, இந்தா" என்றான்.

ஊசி விட்டால் எறிந்து விடுவதுதானே? என்னிடம் எதற்காகக் கொடுக்கிறீர்கள்?" என்று கேட்டாள் மனைவி.

"இந்த வடையில் ஊசியும் நூலும் உள்ளன, நீயோ தையல் (பெண்) தையலுக்கு ஊசியும் நூலும் தேவை என்று எண்ணி உன்னிடம் கொடுத்தேன்" என்றானே பார்க்கலாம் கணவன்.

(ம–10)

## மாரடைப்பு வராமல் இருக்க

உலகிலேயே மாரடைப்பு அதிகமாக ஏற்படாத இனத்தவர்கள், ஜப்பானியர்களும், எஸ்கிமோக்களும் தான்! காரணம் மீன்,

அவர்கள் அதிகமாக மீனை உண்பதால் மாரடைப்பு குறைவு, "வாரம் ஒருமுறையாவது மீனை உணவில் சேர்த்துக் கொண்டால் மாரடைப்பு ஏற்படும் அபாயம் ...

## அணு ஆயுதங்களை நாடாத நூற்றாண்டு

உலகின் பிரபலமான ஜனாதிபதிகளில் மிக முக்கியமான இருவரின் பெயரை இலேசாகக் கூறிவிடலாம், ஒருவர் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ். மற்றவர் ரஷ்ய ஜனாதிபதி மிஹாயில் கொர்பச்சேவ், இவர்கள் இருவரிடமும் இருந்து உலக வைத்தியர்கள் இரண்டு லட்சம் பேர் எதிர்பார்ப்பது என்ன? 5,239,000000 உலக மக்கள் இவர்களிடம் எதிர்பார்த்ததைத்தான் இந்த வைத்தியர்களும் எதிர்பார்க்கின்றனர்.

புவி கோளை அழித்துவிடக் கூடிய பேராபத்து இன்னும் ஒழியவில்லை. அணு ஆயுதக் கிடங்குகள் இன்னும் உள்ளன, அதேபோல, மரபு ஆயுதங்களும் குவிந்து கிடக்கின்றன, இராணுவ பட்ஜெட்டுகள் இன்னும் அப்படியே உள்ளன. குண்டுகளை வெடித்து பரிசோதனை நடத்தும் தளங்களும் அப்படியே கிடக்கின்றன.

ஆயுதக் கட்டுப்பாட்டு உடன்படிக்கைகள் இன்று கைச்சாத்திடப்பட்டு வருவது நல்ல சகுனமாகும், அவற்றின் தொகையும் அதிகரித்து வருகின்றன, இது குறித்து அமெரிக்காவுக்கும் ரஷ்யாவுக்கும் வாழ்த்து தெரிவிக்கலாம்.

ஆனால் இதே சமயத்தில் கையிலிருக்கும் ஆயுதங்களைவிட பயங்கரமான ஆயுதங்கள் மறுபுறத்தில் உற்பத்தி செய்யப்படுவது சந்தோஷமான செய்தியல்ல, இது உலகம் எதிர்நோக்கும் ஆபத்தை அதிகரிக்கத்தான் செய்யும்.

இத்தருணத்தில் இரண்டு குரல்கள் எழுப்பப்பட்டுள்ளன. அணுவாயுத யுத்தத்தைத் தடுப்பதற்கான சர்வதேச வைத்தியர்களின் ஸ்தாபனத்தின் கூட்டுத்தலைவர் பெர்னார்ட்லவ்ன் எச்சரிக்கைக் குரல் எழுப்பியுள்ளார், பேராசிரியர் லவ்ன் ஒரு அமெரிக்கராவார், அடுத்த கோடியிலிருந்து ஒரு ரஷ்யரின் குரல் வருகிறது. அவர் பேராசிரியர் மிஹாயில் குஸின் ஆவார்,

இருவரும் இரண்டு வேண்டுகோள்களை விடுத்துள்ளனர், ஜனாதிபதி கொர்பச்சேவுக்கு விடுத்துள்ள வேண்டுகோளில் அணுவாயுதப் பரிசோதனைத் தளங்களில் வேலைகளை ஸ்தம்பித்து வைக்க வேண்டும். இதே வேண்டுகோளை ஜனாதிபதி புஷ்ஷிடமும் விடுத்துள்ளனர்,

இரண்டு ஜனாதிபதிகளும் அணு ஆயுதங்களை நாடாத நூற்றாண்டைக் காண விழைகிறார்கள், அடுத்த நூற்றாண்டுக்குள் அணுவாயுதங்கள் பிரவேசிப்பதை நிறுத்தப் போவதாகத் திரும்பத் திரும்பக் கூறி வருகின்றனர், இவ் வாக்குறுதிகளையிட்டு உலகம் சந்தோஷமடைகிறது.

இரண்டு ஜனாதிபதிகளும் ஜூன் மாதத்தில் சந்திக்கவிருக்கின்றனர், இவர்களின் சந்திப்புக்கு முன்னர் பூமிக்கடியில் நடத்தப்படும் அணுவாயுதப் பரிசோதனைகள் அனைத்தும் நிறுத்தப்பட்டு வைக்கப்படும் என்று இவர்கள் அறிவித்தால் அது உலகத்துக்கு மிக விருப்பமான செய்தியாக அமையும்.

இதனால் உலக மக்கள் மத்தியில் ஏற்படும் ஆரவாரம், ஏற்படும் உற்சாகம் அணுகுண்டு வெடிப்பின் சத்தத்தை விட உயர்ந்து ஒலிக்கும் என்பதில் சந்தேகமில்லை.

(ம)

## நகைச்சுவை மஞ்சரி





மனைவி: "அடடா! என்னங்க இது? உங்க டையிலே கறை கறையா தெரியுது? ... தான் நடிப்பேன்னுட்டாங்க."

★

மகள்: "போயும், போயும் இப்படி ஒரு சந்தேகப் புருஷனுக்கு என்னை கட்டிக் கொடுத்திருக்கீங்களேப்பா"

அப்பா: "ஏம்மா, அப்படி சொல்றே?" ... சந்தேகப்படறாரப்பா"

★

மருமகன்: "தொட்டதிற்கெல்லாம் என்கிட்ட சண்டை போடறாள் மாமா, உங்க மகள்"

மாமா: "நீங்க என்ன செய் ...



கமியூனிஸ்ட் நாடுகள் ஒளி பெறுவதுடன் அழகின் உச்சிக்குச் சென்று விட்டன, இம முறை உலக அழகியாகத் தெரிவு செய்யப்பட்டவர் போலந்து நாட்டைச் சேர்ந்த அனெடா கிரெக்லிகா, இரண்டாம மூன்றாம இடஙகள் கனடா – கொலமபியா அழகிகளுக்கு. (ம–சி)

# மர்ம மாளிகையில் விசித்திர வாழ்க்கை

பிரபல ஆங்கிலப் பாடகரும் ஹொலிவூட் நடிகருமான பிராங சினட்ராவை ஆஙகிலப் பட ரசிகர்கள் நன்கறிவர்- சினட்ரா இப்போது பெரும் பாலும் நடிப்பதில்லை!

ஆனால் கோட் பாதர்—111 திரைப்படத்தில் கோட் பாதராக நடிக்க ஒப்புக் கொண்டிருக்கிறாராம்! பிராங் சினட்ரா மாபியா இயக்கத்தைச் சேர்ந்தவர் என்று பொதுவாக நம்பப்படுகிறது!

ஆனால் இதை பிராங் மறுக்கிறார். அமெரிக்க உளவுத் துறையினரும ஒரு தடவை சினட்ராவை அழைத்து மாபியா தொடர்பாக அவரை விசாரித்தனர்!

சினட்ராவுக்கு இப்போது வயதாகி விட்டது- அவர் கலிபோர்னியாவில் ஐந்து ஏக்கர் நிலப் பரப்புக் கொண்ட தோட்டம ஒன்றில் வசித்து வருகிறார்- நானகு பக்கமும் சுவர் எழுப்பப் பட்டுள்ள இத் தோட்டத்தினுள் எவருமே அனுமதியின்றி உள் நுழைய முடியாது-



பிராங சினட்ரா

டிவி கமராக்கள் சுற்றிச் சுழன்று சதா கண்காணித்த வண்ணம உள்ளன!, நாய்களுடன் காவலாளிகள் தோட்டத்தைக் காவல் புரிந்து வருகின்றனர்-

ஆனால் சினட்ரா இங்கு மாட மாளிகை எதையும் அமைக்க வில்லை! இரண்டே படுக்கையறைகள் கொண்ட ஆடம்பர மற்ற சிறு வீடொன்றில்தான் கடந்த 30 ஆண்டுகளாக இவர் வசித்து வருகிறார்!

ஆனால் வீட்டைச் சுற்றிவர விதம் விதமான களியாட்ட மையஙகள் உள்ளன.


இவரது மனைவி பார்பராவும் இங்குதான் வசிக்கிறார்! ஆனால் இருவரும் ஒரே படுக்கையைப் பகிர்ந்து கொள்வதில்லை! இருவரும் வெவ்வேறு படுக்கையறைகளையே பயன் படுத்தி வருகின்றனர்!

இதில் விசேஷம் என்னவென்றால் வீடு சிறியதானாலும் கணவனும் மனைவியும் ஒருவரை ஒருவர் சந்தித்துக் கொள்வதில்லை! ஏனெனில் சினட்ரா வெளவாலைப் போன்றவர்! பகலெல்லாம தூங்குவார்! இரவெல்லாம் விழித்திருப்பார்! இது அவர் வழக்கம்!

மனைவி பார்பராவோ பகல் பொழுதில் விழித்திருந்து விட்டு இரவு படுக்கைக்குச் செல்வார்- இதனால் இருவரும ஒருவரை ஒருவர் சந்தித்துக் கொள்வது கிடையாது!

மர்ம மனிதரான பிராங சினட்ராவின் வாழ்க்கையும் கூட மர்மமானதாகத்தான் இருந்து வருகிறது!

(ம—032)



ஊசி விட்டால் எறிந்து விடுவதுதானே? என்னிடம எதற்தாகக் கொடுக்கிறீர்கள்?" என்று கேட்டாள் மனைவி,

"இந்த வடையில் ஊசியும நூலும் உள்ளன, நீயோ தையல் (பெண்) தையலுக்கு ஊசியும நூலும தேவை என்ற எண்ணி உன்னிடம கொடுத்தேன்" என்றானே பார்க்கலாம் கணவன்,

(ம–10)

## மாரடைப்பு வராமல் இருக்க

உலகிலேயே மாரடைப்பு அதிகமாக ஏற்படாத இனத்தவர்கள், ஜப்பானியர்களும, எஸ்கிமோக்களும தான்! காரணம மீன்,

அவர்கள் அதிகமாக மீனை உண்பதால் மாரடைப்பு குறைவு, "வாரம ஒருமுறையாவது மீனை உணவில் சேர்த்துக் கொண்டால் மாரடைப்பு ஏற்படும அபாயம வெகுவாகக் குறையும, ஆஸ்த்மா மற்றும் எலும்பு சமபந்தமான நோய்களால் அவதிப்படுபவர்களுக்கும மீன் உணவு நல்லது" என்கின்றனர் ஜப்பானியர்!

(ம–10)

## திருப்பதி தந்த திருப்பம்

இரண்டு ஆண்டுகட்கு முன் ஒரு மலை மீது நான் சுற்றி வருவதாகவும், அந்த மலையில் எங்கும நாமம் போட்டு இருப்பதாகவும கனவு கண்டேன். அதன்பின் திருப்பதிக்குச் சென்று வந்தேன். பல தொல்லைகள், மளமளவென்று தீர்ந்தன. அதன் பிறகுதான் "திருப்பதி சென்று திரும்பி வந்தால் ஒரு திருப்பம நேருமடா – உன் விருப்பம கூடுமடா!" என்ற பாட்டை எழுதினேன்,

— கவியரசர் கண்ணதாசன்

(ம–10)

# ராஜீவ்காந்திக்கு பாதுகாப்பு செலவு

ராஜீவ்காந்தி பிரதமராக இருந்த போது கடந்த 3 ஆண்டுகளில் அவருககு பாதுகாப்பு செலவு எவ்வளவு என்று ராஜ்ய சபையில் கேட்கப்பட்டது. இதற்கு மத்திய உள்துறைஅமைச் மப்திமுகமது சையத் பதில் அளித்தார்,

கடந்த 3 ஆண்டு காலத்தில் பிரதமர் பாதுகாப்புச் செலவு ரூ 15.86 கோடி என்று அவர், கூறினார்.

1986 –87 ஆம் ஆண்டில் 3 கோடியே 70 லட்சதது 82 ஆயிரத்து 300 ரூபாவும 1987–இல் 4 கோடியே 68 லட்சத்து 21 ஆயிரத்து 570 ரூபாவும 1988 இல் 7 கோடியே 47 லட்சத்து 11 ஆயிரத்து 680 ரூபாவும பிரதமரின் விசேஷ பாதுகாப்புக்கு செலவு செய்யப்பட்டது என்றும மப்திமுகமது சையத் தெரிவித்து உள்ளார்.

(ம–10)

அதிகரிக்கத்தான் செய்யும,

இத்தருணத்தில் இரண்டு குரல்கள் எழுப்பப்பட்டுள்ளன. அணுவாயுத யுத்தத்தைத் தடுப்பதற்கான சர்வதேச வைத்தியர்களின் ஸ்தாபனத்தின் கூட்டுத்தலை

ஏற்படும ஆரவாரம, ஏற்படும உற்சாகம அணுகுண்டு வெடிப்பின் சத்தத்தை விட உயர்ந்து ஒலிக்கும என்பதில் சந்தேகமில்லை.

(ம)

# நகைச்சுவை மஞ்சரி

மனைவி: "அடடா! என்னஙக இது? உஙக டையிலே கறை கறையா தெரியுது?...



கணவன்: "சனியன்! லேடி டைப்பிஸ்ட் தலைக்கு "டை" சரியா அடிச்சுக்கலே போல இருக்கு...!"

★

தயாரிப்பாளர்: "அந்த நடிகையோட கால்ஷீட் வாஙகப் போனியே! என்ன சொன்னாஙக?"



உதவியாளர்: "முந்தானை நழுவுற மாதிரி எல்லாம நடிக்க முடியாது. முழு நிர்வாணமாத் தான் நடிப்பேன்னுட்டாஙக."

★

மகள்: "போயும, போயும இப்படி ஒரு சந்தேகப் புருஷனுக்கு என்னை கட்டிக் கொடுத்திருக்கீஙகளேப்பா"

அப்பா: "ஏமமா, அப்படி சொல்றே?"

மகள்: "பின்னே, படுக்கையில் பாய்பிரண்ட் இருந்தால் கூட சந்தேகப்படறாரப்பா"

★

மருமகன்: "தொட்டதிற்கெல்லாம என்கிட்ட சண்டை போடறாள் மாமா, உஙக மகள்"

மாமா: "நீஙக என்ன செய்தீஙக!"

மருமகன்: "வேலைக்காரியை தொட்டேன்"


## தமிழ் நூல்களும் இஸ்லாமிய நூல்களும்

இலங்கையிலும் வெளிநாட்டிலும் அச்சிடப்பட்ட தமிழ் — இஸ்லாமிய நூல்கள் தொடர்பான உங்கள் தேவைகளுக்கு விஜயம் செய்யுங்கள்

எம். டி. குணசேன அன்ட் கம். லிமிட்.

217. ஒல்கொட் மாவதை
கொழும்பு—11
தொலைபேசி- 23981—84.



இப் பத்திரிகையை அச்சிட்டு வெளியிட்டது இன்டிபெண்டன்ட் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் 5 குணசேன மாவத்தை கொழும்பு 12 (இலங்கை) தபால் பெட்டி இல. 1613. வெளியிட்ட திகதி 21 ஜனவரி 1990,

"CHINTAMANI" 5 Gunasena Mawatha. Colombo 12 — P.O. Box 1618